







பாரதியார் பாடல்கள்
எம்.எஸ். வழங்கும்
இசைத்தட்டு



கல்கி

KALKI
11·9·83
ரூ 1·20


இப்போது!
விக்ஸ் வழங்கும்
இயற்கைக் காணிக்கை
விக்ஸ்
ஹெர்பல்
மாத்திரைகள்
Vicks
Herbal
இப்போது, விக்ஸிலே மருந்துகளும் மூலிகைகளும் சிறப்புடன கலக்கப்பட்டுள்ளன. ஆகவே அது தொண்டைக்கு இயற்கையான முறையிலே இதமளித்து, வாய்க்கும் உன்னத சுவை தருகிறது.
தொண்டைக்கு இதம்
சுவைத்திடவும் உன்னதம்

OBM/1656

நாளிதழ் நாயகர்

இரண்டாம் யுத்தத்துக்குப் பிறகு காலனி நாடுகள் பலவற்றில் விடுதலை உணர்ச்சி பரவியது. லாவோஸ், கம்போடியா, ஆகிய நாடுகள் பிரான்ஸின் ஆதிக்கத்தில் இருந்தன. முக்கியமாக லாவோஸில் மூன்று மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்களுக்குள் சமரசம் ஏற்படுத்தி, அந்த நாட்டுக்கு விடுதலை பெற்றுத் தரும் பொறுப்புக்காக ஐக்கிய நாடுகள் சபை கட்டுப்பாடு கமிஷன் ஒன்றை அமைத்தது. ஐ. நா. சபை பிரதமர் ஜவாஹர்லால் நேருவைப் பாரதத்திலிருந்து ஒருவரைக் கட்டுப்பாடு கமிஷனுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டது. நேரு அனுப்பி வைத்த நபர், கமிஷனுக்குத் தலைவராக இருந்து லாவோஸ் மன்னர்களிடம் பேசி, அந்த நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கித் தர உதவியாக இருந்தார். நேருஜி அனுப்பிய அந்த நபர்தான் இப்போது இலங்கை சென்று சமரசப் பேச்சில் ஈடுபட்டுள்ள திரு ஜி. பார்த்தசாரதி.

ஜி.பி.

ஜி. பி.யின் தந்தை கோபாலசாமி ஐயங்கார் காஷ்மீர் சமஸ்தானத்தில் திவானாக இருந்தவர். பிறகு காங்கிரஸ் தலைவராகவும் சுதந்திரம் பெற்ற பிறகு ரயில்வே மந்திரியாகவும் இருந்தவர். சென்னை பிரஸிடென்ஸியில் படிக்கும்போது ஜி. பி.யின் தோழர்கள் சி. எஸ்., மறைந்த நீதிபதி அழகிரிசாமி போன்றவர்கள். பி. எஸ். உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது ஆரம்பித்த கிரிக்கெட், அவரை ரஞ்சிப் போட்டியில் விளையாடும் அளவுக்கு உயர்த்தியது. 'கையில் மட்டையுடன் இறங்கிவிட்டாரென்றால், 'விக்ஸர் மன்னன் போகிறார்' என்றுதான் பேசுவார்கள். அந்தக் காலத்தில் மயிலாப்பூர் கிரிக்கெட் அணிக்கும் திருவல்லிக்கேணி கிரிக்கெட் அணிக்கும் நடக்கும் போட்டி பலரால் எதிர்பார்க்கப்படும் ஒன்று. திருவல்லிக்கேணி அணியில் எம். ஜே. கோபாலன், ரங்காச்சாரி போன்றவர்கள் இருந்தார்கள். மயிலாப்பூர் அணியில் ஜி. பி.தான் ஹீரோ. 1930ம் வருடத்திலேயே ஜி.பி. பிரஸிடென்ஸி கல்லூரி கிரிக்கெட் அணியுடன் இலங்கைக்குச் சென்று வந்தவர். கடைசியாக அவர் இலங்கைக்குச் சென்றது 1976ல்.



ஜி. பி.: அமிர்தலிங்கம்

ஜி. பி. பத்து வருடம் 'ஹிந்து'வில் துணை ஆசிரியராக இருந்திருக்கிறார். லண்டனில் பி. டி. ஐ. செய்தியாளராக இருந்தார். 1950க்குப் பிறகு வெளி நாட்டில்தான் வாழ்க்கை. இந்தோனேஷியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளில் இந்தியாவின் தூதராகப் பணிபுரிந்த பின் இந்தியாவின் பிரதிநிதியாக ஐ. நா.வில் நீண்ட நாட்கள் கடமையாற்றினார். 1969ல் ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தரானவர்.

ஆக்ஸ்போர்டில் படிக்கும்போது காதலித்த பெண்ணையே கைப்பிடித்தார். அந்தப் பெண்மணி பிரஸிடென்ஸியில் பேராசிரியராக இருந்து பின்னர் எதிராஜ் கல்லூரியின் முதல்வராக இருந்த 'பார்ஸி' திருமதி சமர். ஒரே மகன் அசோக். இப்போது எலக்ட்ரானிக்ஸ் இலாகாவில் இணைச் செயலாளராக இருக்கிறார். ஜி. பி. யின் மருமகள் குஜராத்திப் பெண்மணி.

வத்தல் குழம்பு, கருவேப்பிலை துவையல் பருப்புப் பொடி, போன்றவை ஜி.பி.க்குப் பிடித்தவை. தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் என். வி.யையும் ஒரு கை பார்ப்பதுண்டு.

இந்திய சமூக விஞ்ஞான கழகத்தின் தலைவராகவும் பிரதமருக்கு ஆலோசகராகவும் உள்ள ஜி. பிக்கு இப்போது வயது 71.

—நமது நிருபர்

படம்: சுபா

''உங்க வீட்டுக்கு இந்தப் பக்கம் ரைஸ் மில். அந்தப் பக்கம் ரேடியோ ரிப்பேர் ஷாப். எதிர்லே எலிமெண்டரி ஸ்கூல். எப்படி சார் உங்களாலே நிம்மதியா இருக்க முடியுது?''

''என்னமோ ரகசியமாச் சொன்னியே! என்னப்பா அது?''

—''சுதர்ஸன்''




இயற்கைக் கூந்தலின் இளமை ரகசியம்
V.V.D
தேங்காய் எண்ணெய்



இசையரசி அளித்தும் கவியரசர் பாடல்கள்



“நீயே நிகர்த்தொளி வீசுந் தமிழ்க்கவி செய்குவனே” என்கிறார் பாரதி விநாயகனை வேண்டுகையில். 'ஒளியில் நீயாயிருக்கட்டும்; ஆனால் சுட்டுவிடக் கூடாதே' என்று தோன்றுகிறதா? அமிழ்தான தமிழ்க் கவி எப்படிச் சுடும்? அதுவும் எம். எஸ். அவர்களின் குரலினிமையுடன் குழைந்து வரும் போது! ஆனாலே அமுதாக்கும் ரஸவாதம் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமியின் வரப் பிரஸாத இசைத் திறனால் இயல்பாய் நடந்துவிடக் காண்போம். அதை அப்படியே கிராமபோன் கம்பெனியார் எல். பி. இசைத்தட்டாகப் பதிவு செய்தும் விட்டார்கள்! இம்மாதம் மகா கவியின் நினைவு நாளன்று இந்தியாவின் தலைநகரிலும் பல மாநிலத் தலைநகரங்களிலும் தமிழகத்தின் பல்வேறு நகரங்களிலும் விழா எடுத்து வெளியிடப்படுகிறது இந்த இசைத்தட்டு.

“நீயே சரண்” என்று “நீ”யை ஹம்ஸத்வனியின் ஜீவஸ்வரமான 'நி'ஷாதத்தில் தொடங்குவதி லிருந்து மத்யமாவதியில் “வந்தேமாதரம்” என்று முடியும்வரையில் நம்மை ஒரு மதுரத் தடாகத்தில் திளைத்தாட வைப்பதாக இந்தப் பாரதி பாடல் எல். பி. அமைந்துள்ளது. இப்போதே ஒரு மகிழ்ச்சிக்குரிய சேதி — மேலும் இரண்டு எல். பி.க்களும் பாரதியாருக்கென்றே ஸ்ரீமதி எம். எஸ். அர்ப்பணிக்கவிருக்கிறார். தற்போது வெளியாகும் இசைத்தட்டைப் போலவே இவற்றில் இன்னொன்றும் முழுதும் பாரதிப் பாடல்களைக் கொண்டதாக இருக்கும். மூன்றாவது எல். பி. பாரதிப் பாக்களில் சிலவற்றின் ஹிந்தி வடிவங்களை ஒலித்து, தேச மகா கவியைத் தேசம் முழுதற்குமாக்கும்.

இன்னொரு நல்ல சேதி: இறைவனருளாலும், ரஸிகப் பெருமக்களின் நல்லெண்ணத்தாலும் ஆரோக்கிய நிலைக்குத் திரும்பியுள்ள ராதா விசுவநாதனும் அன்னையோடு இவ்விசைத்தட்டில் இழைந்து குரல் கொடுத்திருக்கிறார்.

நம் காதுக்கும் கருத்துக்கும் இனிமை கூட்டும் இந்த எல். பி. பலரது கண்ணுக்கும் ஒளி கூட்டப் போகிறது. — இவ்விசைத்தட்டில் எம். எஸ்.ஸுக்குரிய சன்மானம் டாக்டர் பத்ரிநாத் கண்ணெனப் பேணி வளர்க்கும் கண் மருத்துவ மனையான 'சங்கர நேத்ராலய'த்தைச் சென்றடைகிறது!

மூன்று இசைத்தட்டுக்களின் ராயல்டிகளை மட்டுமின்றி சங்கர நேத்ராலயாவுக்கு உதவுவதற்கு மூன்று கச்சேரிகளும் செய்யச் சம்மதித்திருக்கிறார் ஸ்ரீமதி எம். எஸ். இவற்றுள் முதல் கச்சேரி பம்பாய் ஷண்முகானந்த சபா அரங்கில் பாரதி நினைவு நாளுக்கு முந்திய தினம் விநாயக சதுர்த்தியன்று நடக்கவிருக்கிறது.

இப்போது வெளியிடப்பெறும் முதல் இசைத்தட்டில் “விநாயகர் நான்மணிமாலை'யிலிருந்து 'கணபதி தாளைக் கருத்திடை வைப்ப'தால் பெறும் பயன்களை — பெரும் பயன்களை —கேட்டுப் பூரிப்புக் கொள்ளும் நம்மை நெகிழ்க்க அடுத்து வருகிறது நாட்டுப் பாட்டின் நயம் சொரிக்கும் “வேலன் பாட்டு.” அவன் 'அடியாரை' நித்தமும் காத்திடும்' அருட் திறத்தில் உருகுகின்றோம்.

படதீப ராகத்தின் பல்வித வன்ன விசித்ர ஒளியில் அயர்வின்றிச் சஞ்சாரம் செய்து இன்புறுகிறோம்.

“எத்தனை கோடி இன்பம்” தொடர்ந்து வருகிறது. சேதன, அசேதனங்களை விந்தையாய் இணைத்து இறைவன் இந்த எழில் களஞ்சிய உலகைச் செய்து இதில் முடிவிலா ஆனந்தங்களைச் சொரிந்து வைத்திருக்கிறான்; இது மாயையாகி நம்மைக் கட்டிவிடா வண்ணம் முக்தி என்ற நிலையைச் சமைத்திருக்கிறான்; அதை எய்த பக்தி என்ற அரிய பண்டத்தையும் படைத்தளித்திருக்கிறான்! நன்றியில் நிறைந்து துதிக்கிறார் கவி. இந் நிறைவும் அதன் நிம்மதியும் நம் இதயத்தில் தோயுமாறு உதய ராகமாம் பௌளியில் பாடல் சாந்தமாய்ப் பவனி வருகிறது.

சிவசாந்தம் சக்தியின் பரவசக் கூத்தாகிறது. “காலமாம் வனத்தில்” சாவடிச் சிந்துவில். 'வீர சக்தி வெள்ளம் விழும் பள்ள'மாகத் தம் உள்ளத்தை ஆக்கிக் கொண்ட கவி, வெள்ளமாகவே தாமும் பள்ளுப் பாடுகிறார். ஆனந்தபைரவியில் ஆனந்தமாய் அலையாடி, செஞ்சுருட்டியில் செவ்வையாய்ச் சுருண்டு, ஸிந்து பைரவியில் சிந்தை குளிர சுழன்று கருணா சிந்துவான 'காளிபத நீழ'லைக் களிப்போடு அடைகிறோம் காவடிச்சிந்தின் முடிவில். இப்பாடல்களுக்கெல்லாம் மெட்டமைத்துள்ள கடையநல்லூர் ஸ்ரீ வேங்கடராமனுக்கு ராக-ராகினி தேவதைகளின் பரிபூர்ண கடாட்சமிருக்கிற தென்பதில் சந்தேகமேயில்லை.

இனி, இசைத்தட்டின் இரண்டாம் பாகத்துக்குச் செல்கிறோம். தேசகவி என்றே சிறப்பிக்கப்படும் பாரதியின் தேசிய கீதங்களை இங்கே கேட்கிறோம்.



புதையலைத் தேடுங்கள்

இந்த இதழில் ஒரு புதையல் இருக்கிறது. தேடிக் கண்டு பிடிக்க வேண்டியது உங்கள் வேலை! புதையலைப் போன்று மாயைத் தோற்றம் அளிக்கும் பொருள்களும் உண்டு. ஏமாந்து விடாதிருப்பது உங்கள் சாமர்த்தியம்!

வேறொன்றுமில்லை, கதை, கட்டுரைகளைப் படித்துக் கொண்டே வரும்போது சம்பந்தமில்லாத விதமாகச் சில பொருள்களின் பெயர்கள் தரப்படும். அவற்றை ஒன்று விடாமல் பெயர்த்து எழுதுங்கள், கீழே உள்ள கூப்பனில்.

இவற்றுள் வாசகர்களுக்குப் பரிசாக அளிக்கப்படவிருப்பது ஒரே ஒரு பொருள்தான். அதை மட்டும் அடிக்கோடிடவும். பொருள்களை ஒன்று விடாமல் பட்டியலிட்டு, பரிசுப் பொருளையும் சரியானபடி இனம் கண்டு அடிக் கோடிடுபவருக்கு அந்தப் பொருள் பரிசாகக் கிடைக்கும். ஒருவருக்கு மேல் சரியான பொருளைக் கண்டுபிடித்து அடிக் கோடிட்டுக் காட்டினால் குலுக்கல் முறையில் வெற்றி பெறுபவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

கூப்பனுடன் சேர்த்து இந்த அரைப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்பவும்.

முடிவு தேதி: 26–9–83.

உறையின்மேல் ''புதையலைத்தேடி'' என்று குறிப்பிடவும்.

என் பெயர்:

விலாசம்:

வாசகர் போட்டி

முதற் பாடல்: இவ்வாண்டு நூற்றாண்டு கண்ட ''வந்தேமாதர'' கீதத்துக்கு பாரதி தந்த பேரெழில் தமிழ் வடிவம். வங்க மாகவி பங்கிம் சந்திரர் பாரதத் தாயைப் பராசக்தியாகவே கண்டு போற்றியதன் இனிய மர்மங்களை ரசித்து நம் தமிழ் மாகவி தன் மொழியிலே அதை ஆக்கிய அருமையை என்னென்பது? முதலில் செய்த தமிழாக்கம் கவிக்கே ஆத்ம திருப்தி தராததால் இரண்டாம் முறையாகவும் இன்னொரு வடிவம் தந்தார். அதுதான் இங்கே எத்தனை தெய்வீகமான கீதமாயிருக்கிறது?

இரண்டாம் பாடலாக வருவது ''பாரததேசமென்று பெயர் சொல்லுவார்.'' பல்லவியில், நாம் அச்சில் காணும் எந்தப் பதிப்பிலுமே இல்லாத,

பாரதப் போரில் வென்ற கண்ணனருளால்—துயர்ப்
பாரமறுவார், செல்வப் பாரமுறுவார்!

என்ற வரிகளைக் கேட்டு அதிசயிக்கிறோம்; அதே போதில் சொல், பாவம் இரண்டாலும் இவை பாரதியின் குரலொலியேதான் என்று தீர்மானமாகத் தெளியவும் செய்கிறோம். அவரிடமிருந்து நேராகப் பாடல்களைக் கற்றவர்களிடமிருந்தே அவற்றைப் பெற்று, அவர் வாழ்ந்து, மறைந்த காலத்தை யொட்டியே விடுதலைப் போராட்டப் பொதுக் கூட்டங்களிலும், அணிகளிலும் ஆவேசமாகப் பாடி மக்களுக்கு எழுச்சியூட்டிய சிலரில் ஒருவர் எம். எஸ்.ஸின் கணவர் ஸ்ரீ சதாசிவம். அவரது பாடாந்தரத்தில் உள்ளவை இவ்வரிகள் எனில், அதன் பின்னும் சான்று தேவையோ? ராகமாலிகையாக — மாளிகையாக என்றும் சொல்லலாம் — பாடல் வருகிறது.

அடுத்து வருவது இன்பத் தேனைக் காதில் பாய்ச்சிடும் ''செந்தமிழ் நாடு''. இங்கு கேட்கும் ஆறு அடிகளில் பாரதியின் ஆராத தமிழ்ப் பற்றை நாம் அறிவது மாத்திரமில்லை; அதேபோதில் இந்தப் பிரதேசப் பற்று அவரது அகில தேசப் பற்றின் அங்கமாகவே இருந்தது; தேசப் பற்றும் உலகப் பிரஜையான அவருடைய விச்வாகார அன்பிலேயே தழைத்தது என்றும் காண்கிறோம்.

பொருத்தமான மங்கள கீதமாக வருகிறது ''வாழிய செந்தமிழ்''. பல்லாண்டு முன்பே இதில் முதலிரண்டு வரியும் முடியும் வரியும் அரசு கீதமாக்கப்பட்டபோது மெட்டமைத்துப் பாடியவர் எம். எஸ்.தான். இங்கே முழுப் பாடலையுமே பாடியுள்ளார். இங்கேயும் தமிழை, தமிழரை வாழ்த்திய அதே வாயோடு, ''பாரத மணித் திருநாடு' முழுதற்கும் வந்தேமாதரம் கூறி வணங்கும் தேசிய உணர்வை உளம் கொள்கிறோம்.

உலகம் போற்றும் கவியரசரின் பாடல்களை உலகம் வியக்கும் இசையரசி பாடக் கேட்கக் கொடுத்து வைத்திருக்கும் நம்மை விடப் பாக்கியசாலிகள் யார்?

மேலட்டை வண்ணச் சித்திரம் (எல்.பி. மேலுறை): **விஜு**

எம். எஸ். வண்ணப்படம்: **வித்யாவிரதா**

நியூட்ரமுல் சக்தி.

சேம்பியன்கள் தேர்ந்தெடுக்கும் சக்தி.

நியூட்ரமுல். அமுல் பால்வளம். அருமையான மால்ட்.
ஆரோக்கிய வைட்டமின்கள். ஆர்வமிகு புரதம்.
ஆதார உலோகதாதுக்கள். சப்புக் கொட்டிட சாக்கலேட்...
இவ்வளவுக்கும் விலை மலிவு—போர்ன்விடா, பூஸ்ட்,
மால்டோவா எதனையும் விட. மறவாதீர்கள் ஐஎஸ்ஐ தர
முத்திரை தாங்கியது நியூட்ரமுல் ஒன்றுதான்.
விளங்குவீர் நியூட்ரமுல் 'வஸ்தாத்'தாக.



உயரம், வலிமை, உடல்திடம்--
பெருக்குவது எப்படி ?

பார்த்தறியாச் சலுகை: பலம்பெருக்கப் புத்தகம்!

NUTRAMUL P.O. BOX 10148, BOMBAY-400 001. kk
அன்பார் நியூட்ராமுல்,
தாராசிங்கின் "ஹைட் இன்க்ரீஸ், ஸ்ட்ரெங்த் அண்ட் பிட்னஸ்" புத்தகத்தை தயவுசெய்து எனக்கு அனுப்பிவைக்கவும். ரு. 1.50 மதிப்புள்ள தபால் வில்லைகளோடு, நியூட்ராமுல் 500 கிராம் டின் வாங்கியதற்கான ரொக்க ரசீதையும் இத்துடன் இணைத்துள்ளேன்.

பெயர் ______________________
(கொட்டை எழுத்துக்களில்)

முகவரி ______________________

விற்பனையாளர்:
குஜராத் கோ-ஆபரேட்டிவ் மில்க்
மார்க்கெட்டிங் ஃபெட. லிட்.,
ஆனந்த்-388 001.

daCunha/GCM/76/TM/82



இரங்கல் கூட்டத்தில் கிடைத்த ரகசியங்கள்!

— விசிட்டர் அனந்த் —

கே. ஏ. மதியழகன் அமரரான ஏழாம் நாள் பெரியார் திடலில் அவரது படத் திறப்பு விழா ஏற்பாடு. சர்வ கட்சிக் கூட்டம்.

இராம. அரங்கண்ணல் பேசுகையில் மதியழகன் மாணவராயிருந்தபோது தி. மு. க. மாணவர் தலைவராக இருந்து பணியாற்றிய விவரங்களையும், அவரது தீவிர அரசியல் பிரவேசத்தால் இரண்டாண்டு படிக்க வேண்டிய பி. ஏ. படிப்பை ஐந்தாண்டு காலமாக அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் படித்ததையும், பல்கலைக் கழகம் அவரை மூன்று மைல் எல்லைவரை பிரவேசிக்கக் கூடாது என்று தண்டனை விதித்ததையும் குறிப்பிட்டதோடு அவரது மாணவப் பருவ அரசியலை விளக்கினார்.

நெடுமாறன் பேசும்போது மதியழகனுக்கும் அண்ணாமலை பல்கலைக் கழகத்துக்கும் உள்ள நேயத்தை விளக்கினார். ''அண்ணன் 'மதி' தனக்குத் திருமணமானதும் தேன்நிலவுக்குத் தேர்ந்தெடுத்த இடம் அண்ணாமலை பல்கலைக் கழகம்தான். கல்யாணமானதும் துணைவியாருடன் விடுதிக்கு வந்துவிடவே மாணவர்களுக்கான அறை ஒன்றை ஒழித்துக் கொடுத்து ஒரு வாரம் தங்கவைத்து தம்பதிகளை உபசரித்தோம்'' என்றார்.

நாஞ்சில் மனோகரன் பேச ஆரம்பிக்கும் போதே பீடிகையுடன் ஆரம்பித்தார். 'அரங்கண்ணல் பேசும்போது மதியழகனோடு தி. மு. க.—வின் வரலாறு இருந்தது என்றார். ஆனால் அவர் நானிருக்கும்போதே 'மதி'யின் வரலாற்றில் அவருடன் எனக்கிருந்த உறவை விட்டு விட்டாரே! ஆகவே வரலாறு செம்மையாக எழுத வேண்டியது அவசியம்'' என்று வருத்தப்பட்டு, தனக்கும் 'மதி'க்கும் உள்ள முப்பதாண்டு கால வரலாற்றை வலியுறுத்திப் பேசினார்.

நாஞ்சிலாரின் கோபத்தைப் புரிந்து கொண்ட கலைஞர் கருணாநிதி தன் இறுதியுரையில் அரங்கண்ணல் கூறிய வரலாறு 'மதி'யின் மாணவப் பருவ வரலாற்றைப் பற்றியது. நான் இப்பொழுது எழுதிக் கொண்டிருக்கும் 'நெஞ்சுக்கு நீதி'யில் அண்ணா அமரரான பிறகு முதலமைச்சர் பொறுப்பை என் மேல் சுமக்க வைக்கக் காரணமானவர்கள் மதியும், நாஞ்சிலாரும் என்று எழுதியிருக்கிறேன். வரலாறு மாறாது'' என்னும் வகையில் கூறி டிரான்ஸிஸ்டர் ரேடியோ அவரைச் சமாதானப்படுத்தினார்.

இந்தக் கூட்டத்தில் கிடைத்த இன்னொரு ரகசியம்: கலைஞர் கருணாநிதியும் மற்ற தி. மு. க. தலைவர்களைப் போல் தன் பெயரையும் தனித் தமிழ்ப்படுத்தி 'அறச் செல்வம்' என்று ஆரம்பத்தில் சில காலம் அரசியல் நடத்தினாராம்.



முதல் பையன்: எங்க தாத்தா நான் என்ன விஷமம் பண்ணினாலும் திட்டவே மாட்டார்...!

இரண்டாவது பையன்: அப்படியா?

முதல் பையன்: ஆமாம்! ஏன்னா, அவர் தினமும் முதியோர் பள்ளிக்கூடத்திற்குப் போறேன்னுட்டு 'கட்' அடிச்சிட்டு 'கிளுக்கு' படம் பார்க்கப் போறதைப் பாட்டியிடம் சொல்லிடுவேன்னு பயம்....!''

என். இலட்சுமணன்

தஞ்சைத் தரணியிலே...

— தஞ்சை ராஜன் —



✖ ரயிலிலிருந்து இறங்கியதும் மேடும் பள்ளமும் வரவேற்கும் காட்சி

தஞ்சாவூரின் பெருமைகளில் நீங்கள் இது வரை கேள்விப்பட்டிருக்க முடியாத சில பெருமைகளைத் தெரிந்து கொள்ளுங்கள்!

சந்து பொந்துகளுக்குப் பெயர் பெற்றது தஞ்சாவூர்தான். நீங்கள் எங்கு சென்று ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வழி கேட்டாலும் 'இந்தப் பக்கம் திரும்பி அந்தப் பக்கம் திரும்பி....' என்ற திருப்பங்களைக் கேட்டே நீங்கள் திரும்பி விடுவீர்கள்.

ஏறத்தாழ இரண்டு வருடங்களுக்கு முன் தமிழ்ப் பல்கலைக் கழகம் இங்கு தொடங்கப் பட்டபோது நமது 'மாண்பு மிகு'க்களைத் திருப்தி செய்வதற்காக மெயின் ரோடுகளி லெல்லாம் புதிதாக ரோடு போட்டவர்கள் தஞ்சாவூரின் உட் பகுதியை அப்படியே விட்டு விட்டார்கள். இன்றும் அந்தத் தெருக்கள் பள்ளமும் மேடுமாகச் சரி செய்யப்படாமலே இருக்கின்றன.

பஞ்சாப் அஸ்ஸாம் போன்ற பிரச்னைகளை விடப் பெரிய பிரச்னை ஒன்று தஞ்சாவூரில் இருக்கிறது. அதுதான் மேம்பாலம். இந்தப் பாலப் பிரச்சினை நீண்ட காலமாகவே தீர்க் கப்படாத ஒரு பிரச்சினைதான். இப்பாலத் தின் மேல் ஒரு லாரி 'ஹெவி லோடோடு' சென்றால் மேம்பாலத்தின் உயிர் அவ்வளவு தான். அவ்வளவு வலுவாலது இப்பாலம்.

இதைப் போலவே இன்னொரு பிரச்சினை ரயிலடிக்குப் பக்கத்தில் உள்ள 'லோ பிரிட்ஜ்'. இப்பாலத்திற்குக் கீழே ஒரு குறிப்பிட்ட உயரத்துக்கு மேல் உள்ள லாரியோ பஸ்ஸோ வேறு வாகனமோ சென்றால் மேலே தண்டவாளத்தில் இடித்து நசுங்க வேண்டியதுதான்.

தஞ்சைக்குப் பக்கத்தில் குருங்குளத்தில் உள்ள சர்க்கரை ஆலை, ஊருக்கு வெளியில் (Suburban area) உள்ள இரண்டு மூன்று சிறு நிறுவனங்களைத் தவிர பெரிய தொழிற்சாலை என்று தஞ்சாவூரில் ஒன்றுகூடக் கிடையாது.

விடுமுறை நாட்களில் குழந்தைகள் பொழு தைக் கழிப்பதற்காக உள்ள ஒரே இடம் 'சிவகங்கைப் பூங்கா'. ஆனால் அதன் இன்றைய நிலையைப் பார்த்தால் அது 'இருக்கிறது' என்பதை விட 'இருந்தது' என்றே சொல்லலாம்.

தஞ்சையின் உட் பகுதிகளில் தெரு விளக்கு களின் பராமரிப்புச் சரியாகக் கிடையாது.

இங்கு பஸ் ஸ்டாண்டிற்கு அருகே உள்ள சைக்கிள் ஸ்டாண்டில் ஒரு சைக்கிளுக்கு 15 பைசா வாடகை என்று முனிசிபாலிடி நிர்ணயித்துள்ளது. ஆனால் அங்கு வசூலிப் பதோ 40 பைசா. இதை ஒரு நண்பர் "இவர்களிடம் அதிகமாகக் கொடுக்கும் 25 பைசாவுக்கு ஒரு முழம் பூ வாங்கி மனைவிக்குக் கொடுக்கலாம்" என்று கமெண்ட் அடித்தார்.

போட்டோ: ரயிலடி எஸ். பி. எஸ்.




○ வலுவிழந்த மேம்பாலம்



○ லோ பிரிட்ஜ்-உரசிச்செல்லும் பஸ்

கமல்







'கமலைக் கேளுங்கள்' என்று சொன்னாலும் சொன்னோம்; வாசகர்களிடமிருந்து வந்து குவிந்த கேள்விகள் ஏராளம். பதில்களை 'சுருக்' காகவும், சுருக்கமாகவும் தர கமல் எடுத்துக் கொண்ட நேரம்: ஆழ்வார் பேட்டையிலிருந்து ஏவிஎம் ஸ்டுடியோவரை அவர் காரில் பயணம் செய்ய எடுத்துக் கொண்ட நேரம்.

இடைவிடாத படப்பிடிப்புக்கும், இதர அலுவல்களுக்கும் இடையே 'கல்கி' வாசகர்களின் வகை வகையான கேள்விகளுக்கு வித்தியாசமான பதில்களை வழங்கிய கமலுக்கு நன்றி.

1. குமரி அமுதன்,
84-ஏ, மேலத் தெரு, கிருஷ்ணன் கோவில், நாகர்கோவில்
629-001

? உங்கள் தொடக்க காலப் படங்களான அவள் ஒரு தொடர்கதை, அவர்கள், உணர்ச்சிகள், உயர்ந்தவர்கள் ஆகிய எளிமையான படங்களில் நீங்கள் தந்த நிறைவு சமீபத்திய சில so called பிரம்மாண்ட வெள்ளிவிழா வெற்றிப் படங்களில் இல்லை என்பதைச் சிந்தித்துப் பார்த்ததுண்டா?

! 'உயர்ந்தவர்'களில் தந்த நிறைவை 'சலங்கை ஒலி'யில் தரமுடியாததை என் தோல்வியாகக்கருதுகிறேன். 'அவள் ஒரு தொடர்கதை' தந்த நிறைவை 'மூன்றாம் பிறை'யில் தர முடியாததைஎன்தோல்வியாகக் கருதுகிறேன். உங்கள் கணிப்பில் தோற்றுவிட்ட போதிலும் என்னைப்பொறுத்தவரை கமலஹாசன்முன்னேறிக் கொண்டிருக்கிறான்.

2. வி. பாலகிருஷ்ணன்,
32, முதல் அக்ரஹாரம்,
மோகனூர்-637.015
சேலம் மாவட்டம்

? எல்லாம் அவர். ஆதியும் அந்தமும் அவரேன்னு சொல்றீங்க. ஏன் உங்களுக்குத்திறமையே இல்லேன்னு ஏதாவது Inferiority Complex இருக்கா? நல்ல விதையா யிருந்து, அவர் தண்ணீர் ஊற்ற மரமா வளர்ந்துகிட்டு இருக்கேன் என்று சொல்றீங்க. ஆனால் நீங்கள் ஒரு பட்டுப்போன விதையாயிருந்தா அவர் என்ன பண்ணியிருப்பார்னு நினைக்கிறீங்க?

! ஆதிக்குக்காரணம்அவர். அந்தத்துக்குக் காரணம் கமலஹாசன் ஒருவனாக மட்டுமே இருக்க முடியும். நான் கருவிலேயே மடிந்திருந்தால் தாய்க்கு நன்றி சொல்லத்தேவையே இல்லைதான்.

3. கே. சீனிவாசன்,
11ஆம் வகுப்பு 'அ' பிரிவு;
அரசு மேல்நிலைப் பள்ளி,
கவுந்தப்பாடி-638.455
பெரியார் மாவட்டம்.

? செய்தி, கேள்விகளுக்கு ஒரு நடிகர் முக்கியத்துவம் தர வேண்டுமா?

! செய்திகளுக்குத் தர வேண்டும்.

4 சுந்தரி லோகு,
மே-பா உமா சில்க்ஹவுஸ்,
தபால் நிலையம் அருகில்,
கொடுமுடி.

? இளைஞர்கள் தற்கால சினிமாவினால் கெடுகிறார்கள் என்று கூறும் மக்களுக்கு நீங்கள் கூறும் ஆறுதல்?

! இது தியாகராஜபாகவதர் காலத்திலிருந்து சொல்லிக்கொண்டுவரும் குற்றச்சாட்டு. தற்கால சினிமா என்றல்ல, எக்கால சினிமாவையும் இப்படி எக்களிக்கும் தன்மைசிலருக்கு உண்டு.

5. எஸ். ராஜசுந்தரம்,
மே.-பா. ஸ்ரீ சுப்பிரமணியம்,
சிவன்கோவில் தெரு, நடராஜபுரம்-623.555, ராமநாதபுரம் மாவட்டம்.

? நடிகர்களுக்குச் சமுதாயக் குறிக்கோள் உண்டு என்று தாங்கள் கருதினால் அதை என்னவென்று நான் அறிய உதவுவீர்களா?

! பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய எங்கள் கலை நுட்பம், மிக ஜாக்கிரதையாக, நல்ல கொள்கைகளுக்காகப் பிரயோகப்படுத்தப்பட வேண்டிய ஆயுதம். அதை சமுதாய அபாயம் இன்றி பிரயோசப்படுத்தல் நடிகனின் முதல் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். மற்ற குறிக்கோள்கள் தனிப்பட்ட நடிகரின் கொள்கையைப்பொறுத்தது.

6. ஆர். அரிகோபி,
9. தங்கசாலை ராமசாமிதெரு
தாரணம்பேட்டை, குடியாத்தம்-632.601 வ. ஆ.

? ஒரு கலைஞனின் ஆத்ம திருப்தி எதில் இருக்கிறது?

! கலையில்.

7. தே. லட்சுமி நரசிம்மன், 64, தியாகராசபுர அக்ரகாரம், திருவாரூர்-610.001, தஞ்சை மாவட்டம்.

? காரண காரியங்களைவைத்து 'நடிக்கிறான் பார்' என்று ஒருவனை விமர்சிக்கிறோம். அப்படியானால் நடிப்பு என்பது யதார்த்தத்திலிருந்து விலகி நிற்பது என்பது பொருளா?

! கண்டிப்பாக. யதார்த்தத்திலிருந்து விலகி நின்ற போதிலும், இது யதார்த்தம்தானோஎன்று பிறரைச் சந்தேகிக்க வைக்கும் திறமைதான் நடிப்பு.

8. டி. பாலன்,
Theoritical Physics group
Tata Institute of Funda-
Mental Research.
Homibhaba Road,
Bombay 400005.

பதில்கள்

? நீங்கள் எம். ஜி. ஆர்., என். டி. ஆர். போல அரசியலில் நுழையப் போகிறீர்கள் என்று கேள்விப் பட்டேன். உண்மையா?

! என். டி. ஆர்., எம். ஜி. ஆர். போல் அரசியலில் நுழையும் அருகதை எனக்கு இல்லை. ஆர்வமும் இல்லை.

9. வி. கே. மூர்த்தி, 5-ஏ, ரயில்வே ஸ்டேஷன் ரோடு, குளித்தலை-639.104

? நீங்கள் நடித்த படங்களுள் உங்கள் மனைவி பார்த்துப் பாராட்டிய படம் எது? குறை கூறிய படம் எது?

! குறை கூறிய படங்கள்—நடிப்பைப் பொறுத்த வரை — என் எல்லாப் படங்களையுமே! சில படங்களில் மனம்திறந்து நிறையும் கூறியது உண்டு!

10. கு. அருணாசலம், ஆசிரியர், 35, நடுமேற்காசல் கோயில் தெரு, தென்காசி-627.811, நெல்லை மா.வ.

? சினிமாத் துறையில் பெண் டைரக்டர்கள் அதிகம் தோன்றாதகாரணம்என்ன?

! சினிமாத் துறையைமட்டும் ஏன் தனியாகச் சுட்டிக் காட்டுகிறீர்கள்?

11. ஜி. குமரேசன், S/o O.S. கணேசன், தேர்வீதி, பாண்டமங்கலம் போஸ்ட், நாமக்கல், சேலம் மா.வ.

? மற்ற மொழிப் படங்களுடன் நம் தமிழ்ப் படங்களை ஒப்பிடும் போது தங்கள் உள்ளத்தில் தோன்றும் கருத்துக்கள் என்ன?

! ஆசை இருக்கு தாசில் பண்ண. (பிரெஞ்சும் ஆங்கிலமும் கூட மற்ற மொழிப் படங்கள் தானே?)

12. ஸ்ரீமதி கங்கா சுகவரன், 11, சர்வோதயா க்வார்டர்ஸ், பி.எஸ்.ஜி. ஸ்டாஃப் க்வார்ட்டர்ஸ், பீளமேடு, கோவை-4

? நீங்கள் சினிமாவில் நுழையாமல் இருந்திருந்தால், தற்பொழுது என்ன செய்து கொண்டிருப்பீர்கள்?

! எப்படி நுழைவது என்று யோசித்துக் கொண்டிருப்பேன்!

13. ஜி. தேவராஜ், லட்சுமி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் ஜோலார்ப்பேட்டை ரோடு, திருப்பத்தூர், வ. ஆ.

? Knowthyselfஎன்பது அரிஸ்டாட்டலின் பொன்மொழிவாசகம். அதுபோல் என்றேனும் உங்களை நீங்களே introspection செய்திருக்கிறீர்களா?

! தினமும்.

14. வி. ஆர். நாகராஜன், 25, வடக்கு அக்ரஹாரம், வளவனூர் 605.108

? நீங்கள் ஏற்ற பாத்திரங்களிலேயே உங்கள் திறமைக்குச் சவால் விட்டதாக எந்தப் பாத்திரத்தைக் கூறுவீர்கள்?

! சமீபத்திய சவால் சலங்கை ஒலி. இன்னும் நிறைய வரும்: நிச்சயம்.

15. ஸ்ரீமதி சௌந்தரா சேஷாத்ரி 5, மாரியப்ப நாயக்கன் தெரு எல்டாம்ஸ்ரோடு, சென்னை18.

? யதார்த்த உலகுக்கு இறங்கி வருவதற்கு நீங்கள் விலை ஏதும் செலுத்த நேர்ந்ததுண்டா?

! நான் ஏறியிருந்தால் தானே இறங்கி வர? எனக்கு யதார்த்தம் இலவசம்.

தொகுப்பு:

சாருகேசி, தமயந்தி
















சிங்களவர் தமிழர் ஒற்றுமை
கட்டிடலாம்.
முடியாது!
தரை மட்டமாக்கணும்!
முரட்டுப் பிடிவாதம்



ஊராட்சி தேர்தல்



ஆளுங்கட்சிக்கு எதிராகக் கூட்டணி அமைக்க சந்திரசேகர்-ராமராவ் சந்திப்பு!

கல்கி
1983 செப்டம்பர் 11
ருத்ரோத்காரி ஆவணி 26
மலர் : 42 இதழ் : 6



சுலபமாய் மகிழ சில வழிகள்!

செப்டம்பர் மாதம் பிறந்ததுமே சில பெரிய மனிதர்களின் நினைவு நமக்கு வந்து விடக் கூடாதே என்று கவலையாக இருக்கிறது! டாக்டர் ராதாகிருஷ்ணன், மகாகவி பாரதியார், அறிஞர் அண்ணா, ரசிகமணி டி.கே.சி. —இவர்கள் எல்லாரும் தமிழர் இதயங்களில் நிலைபெற அல்லும் பகலும் எழுதிக் குவித்த அமரர் கல்கி. அனைவருக்கும் செப்டம்பரில் பிறந்த நாள் அல்லது நினைவுநாள். நாடு இன்றுள்ள நிலையை எண்ணி ஏற்கெனவே நொந்து கொண்டிருக்கும் நாம் இவர்களுக்கெல்லாம் விழா எடுத்தால் அந்த மன வேதனை மேலும் அதிகரிப்பதையே உணர்வோம். எனவே:

ஆசிரியர்கள் தினமாக டாக்டர் ராதாகிருஷ்ணன் பிறந்தநாளைக் கொண்டாடுவதற்குப் பதில் மெக்காலேயின் இறந்த நாளைக் கொண்டாடலாம். ஏனெனில் மெக்காலே காலமாகிவிட்ட போதிலும் அவரது கல்வித் திட்டம் நமது தேசத்தில் சிரஞ்சீவித்தும் பெற்றுத் தழைக்கிறது. எனவே போற்றப்பட வேண்டியவர் மெக்காலேதானே!

அண்ணாதுரையைக் கொண்டாடும் போதெல்லாம் அவர் 'ரூபாய்க்கு மூணுபடி அரிசி' என்று வாக்களித்தது நினைவுக்கு வந்து ஏக்கப் பெருமூச்சு கிளம்பும். எனவே அவரை மறந்து விட்டு, நாளுக்கு நாள் பணவீக்கமும் விலைவாசியும் உயர உதவி வருகிற நமது மத்திய நிதி அமைச்சர்களின் படங்களை வரிசையாக மாட்டி மாலையிட்டு மரியாதை செய்தோமானால் பொருத்தமாயிருப்பதோடு மனமும் குளிரும். இதற்கு அனுசரணையாகக் கடந்த ஒரே ஆண்டில் அரிசி விலை மட்டும் 22 சதம் உயர்ந்திருக்கிறது. மற்ற விலைவாசிகளும் ஜாம் ஜாம் என்று உயர்ந்துள்ளன.

சிறந்த கவிதைகளையும், கலைகளையும் ரசிக்கக் கற்றுத்தந்த டி. கே. சி. யை இன்றைய சூழலில் நினைத்தாலே பரிதாபமாயிருக்கிறது! வழுவூர், பந்தநல்லூர் பாணிகளை யார் கேட்டார்கள்? பாலசரஸ்வதி, ருக்மிணிதேவி நடனங்களின் உயர்வு பற்றி இங்கே யாருக்கு அக்கறை? வேண்டவே வேண்டாம். பேசாமல் டி. கே. சியை மறந்து விடுவதே உத்தமம். அவருக்குப் பதில் புலியூர் சரோஜா படத்திறப்பு விழாவில், சிலுக்கா? அனுராதாவா?— யார் நடனத்தில் கவர்ச்சி அதிகம்? என்று பட்டிமன்றம் நடத்தலாம்.

பாரதியாரை நினைத்தாலோ 'ஐயோ பாவம்' என்றிருக்கிறது. மனுஷன் ஏதேதோ கனவுகள் கண்டு வைத்தார். ஒன்றேனும் சுதந்திர இந்தியாவில் நிறைவேறுகிற வழியாயில்லை. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனையாம்: வீணில் உண்டு களித்திருப்போருக்கு நிந்தனையாம்! நடக்கிற காரியமா? அதுவும் மாநில அரசுகள் போட்டி போட்டுக் கொண்டு லாட்டரி நடத்துகிற இந்த ஜனநாயக சோஷலிஸத்தில்? நாளிதழ்கள் இந்த ஹிமாலய சாதனையை விளம்பரப் படுத்துகின்றன. பாரதியை அடியோடு மறந்து விட்டு, பத்து ரூபாய் மூலதனத்தில் 2 கோடியே 2 லட்சம் சம்பாதிக்கப் போகும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு விழா எடுப்பதே உத்தமம்!

அமரர் கல்கி அப்படி என்ன பிரமாதமாய்ச் சாதித்து விட்டார்? லட்ச லட்சமாய் வாரப் பத்திரிகை விற்கச் செய்கிற ஆற்றலும் கலைக்களஞ்சியமாக விளங்க வேண்டிய பத்திரிகையை ஸெக்ஸ் களஞ்சியமாக மாற்றுகிற திறமையும் அவருக்கு எங்கே இருந்தன? எனவே அவரை எண்ணிச் சங்கடப்படுவதை விட்டு இன்றைய நவீன பத்திரிகை ஆசிரியர்களை வாழ்த்திச் சுலபமாய் மகிழ்ந்து விடலாம் என்று பார்த்தால்....

புன்னகையைத் தோற்றுவிக்கும் பரிகாசத்தில் வேதனையை மறைத்து எழுதுவதற்கும் கற்றுத் தந்தவர் அவர்தானே என்ற ஞாபகம் வந்து.... நமது ஆசையை நிராசையாக்குகிறது!

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

அத்தியாயம் 35

முகம் சொல்லிற்று. இழுத்துப்போர்த்திக் கொண்டு கோர்ட் வாசலுக்கு வந்தாலும் வசந்தா யாரென்று அநேகம் பேருக்குத் தெரிந்து போயிற்று. முகத்திலிருந்த ஏதோ ஒன்று வசந்தாவை இனம் காட்டிற்று. கண் மையோ கருவளையமோ கண்ணாடிக்கல் மூக்குத்தியோ, பவுடர் பூசிய விதமோ பரக்கப்பரக்க அலைகிற கண்களோ, கட்டு லேசாய்க் குலைந்த உடம்போ, உதடோ அல்லது இவை எல்லாமே சேர்ந்து முகத்தில் அப்படியொரு விலாசம் எழுதி விட்டதோ தெரியவில்லை.

மோட்டார் ஆக்ஸிடெண்ட் க்ளெய்ம்ஸ் டிரிப்யூனல் வசந்தாவின் மனுவை ஏற்றுக் கொண்டது. ஒரு பிரதி ராவுத்தருக்கும் ஒரு பிரதி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கும் சம்மனோடு அனுப்பப்பட்டது.

வசந்தா மனுவில் சொந்தத் தங்கையான மல்லிகா கார் விபத்தில் இறந்து போனதற்கு ரூபாய் எழுபத்தி ஐந்தாயிரம் நஷ்டஈடு கேட்டிருந்தாள். அக்காவும் தங்கையும் கூட்டு சேர்ந்து வியாபாரம் செய்திருந்தார்கள். தங்கை இறந்து போனதால் வியாபாரம் முற்றிலும் நசித்து குடும்பத்துக்குப் பெருத்த நஷ்டமும் மனக் கஷ்டமும் ஏற்பட்டு... என்ன வியாபாரம்.. காய்கறி மொத்த வியாபாரம் என்று மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் வசந்தாவிற்குத் தாய் தந்தை காலமாகித் தங்கை மட்டுமே துணையாய் இருர்தபடியால் மனுதாரருக்கு ஏற்பட்ட பிரிவு வேதனை சொல்லத் தரமன்று. எனவே கனம் கோர்ட்டார் அவர்கள் கருணை கூர்ந்து ரூபாய் எழுபத்தைந்தாயிரம் நஷ்ட ஈடாய்...''

மனு வந்தவுடன் ராவுத்தர் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்குப் போனார். மனுதாரர் வசந்தாவும் அவர் வக்கீலும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு வரவழைக்கப்பட்டார்கள். கிரிமினல் கேஸ் மனுதாரருக்குச் சாதகமாக இருக்கிறபடியால் நஷ்ட ஈடு அறுபதுக்குக் குறையாது என்று வக்கீல் வாதாடினார். முப்பதுக்கு ஒத்துக் கொண்டார். முழுவதும் முற்றிலுமான செட்டில்மெண்டாக வசந்தா முப்பதாயிரத்துக்குக் கையெழுத்துப் போட்டாள்.

ராவுத்தருக்கும் அவள் முகம் அவளை யாரென்று காட்டிக் கொடுத்தது. இது பாவப்பட்ட பொம்பளை. அதுகிட்ட பாதிகாக யாரும் முழுங்கிடக் கூடாது. ''ஐயா, இந்தத் துட்டுலனுச்சம் அது நல்லபடி இருக்கட்டும். அதும் பேர்லயே செக்குப் போட்டு அதுக்கு விவரம் சொல்லிடுங்க.''

வசந்தாவிடம் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி மொத்த விவரமும் பிள்ளைக்குச் சொல்வதுபோல் சொல்லி, பக்கத்து பாங்கில் அக்கௌண்ட் எடுத்துக் கொடுத்தார்கள். அவள் வக்கிலுக்கு அவர்கள் எதிரிலேயே நாலாயிரம் ரூபாய் செக் எழுதிக் கொடுக்கச்செய்தார்கள். மூன்றுநாட்கள் கழித்து இருபத்தி ஐயாயிரம் ரூபாயும் எடுக்கப்பட்டிருந்தது. வசந்தா சகலமும் புரிந்து கொண்டு காசோடு காணாமல் போனாள்.

ராவுத்தர் கிணற்றில் விழுந்த லாரிக்கும் ஒரு க்ளெய்ம் ரிஜிஸ்டர் செய்ய வந்தபோது அவரிடம் வசந்தா இருபத்தி ஐயாயிரத்தையும் மூன்றும் நாளே எடுத்து விட்டதைச் சொன்னார்கள்.

''இந்த மாதிரியான பொம்பளைங்களை ஏமாத்தறது ரொம்ப சுலபங்க. ஆறுதலா ரெண்டு வார்த்தை பேசினா அதுலேயே சரிஞ்சுடும். எவன் ஏமாத்தி எங்கக் கூட்டிக் கிட்டுப்போறானோ...ஒரு ஃபோன் போட்டுரட்டுங்களா...?''

இங்கிலீஷ் கம்பெனிக்கு போன் செய்து விஸ்வநாதனைக்கேட்டார். தொடர்ந்து லீவில் இருப்பதைச் சொன்னார்கள். வீட்டு விலாசம் கேட்டார். கொஞ்சம் இருக்கச் சொல்லிவேறுயாரையோ அழைத்தார்கள்.

''காயத்ரி ஹியர்.'' மறுமுனை பேசிற்று.

''விஸ்வநாதன் விலாசமா? எப்பப் பாக்கப்



பாலகுமாரன்

இரும்பு குதிரைகள்

போறீங்க? நீங்க யாரு? ராவுத்தரா...? தண்ணித் தொட்டித் தெரு ராவுத்தரா? ராவுத்தர். நான் காயத்ரி. காந்திலால் கம்பெனில வேலே செய்யல... அந்தக் காயத்ரி.''

விஸ்வநாதன் இன்னிக்கு சாயங்காலம் ஆஸ்பத்திரிக்கு செக்கப்புக்கு வருவதைச் சொன்னுள். தானும் அங்கு போகப் போவதைக் கூறினுள்.

தோள்பட்டைக் காயம் முற்றிலும் குணம் என்று தெரிந்த பிறகு விஸ்வநாதன் நர்ஸிங் ஹோம் வாசலில் ராவுத்தரையும் காயத்ரியையும் சந்தித்தான். ராவுத்தர் ஆறுதலாய் அவன் சிரசில் தன் கையைப் பதித்தார்.

''என்ன ராவுத்தர் ஐயா மின்விசிறி எப்படி இருக்கீங்க?''

''இருக்கேன் தம்பி. தோள் குணமாயிடுச் சுங்களா. வாரிக்காரப் பசங்களே விளேயாட்டா நெஞ்சைச்சுட்டீங்களே. தப்பு தம்பி அது. ரொம்பப் போட்டியிருக்கிற தொழிலு. வெட்டுக் குத்து ரொம்ப சாதாரணம்.



ஜாஸ்தி துட்டுப் பொழங்கற எடம் எல்லாம் அப்படித்தான் இருக்கும். உசிருக்கு எது ஞாச்சம் ஆயிருந்தா? நல்லதா இந்த விளையாட்டு. சரக்கு நாலுநாள் ஹார்பர்ல இருந்துட்டுப் போவுது. அதுக்காகத் தானே லாரி புடிச்ச யோடு ஏத்தனுமா? அதும் வடிவேலு மாதிரி புரோக்கரை நம்பலாமா?''

''வடிவேலு என்ன ஆளுன் ராவுத்தர்?''

''இனி தண்ணித் தொட்டித் தெருப் பக்கம் தலைவச்சுப் படுக்க முடியாது. ஆளு... அவனுக்கென்ன எங்கியாவது திருச்சி, சேலம் மதுரைல மறுபடி புரோக்கர் கடை தொறந்துடுவான்.''

''தொறந்தா மாதிரியும் தெரியலியே. அவருக்குக் கொடுக்க வேண்டிய காசு இன்னும் குடுக்கல.''

''கவலைப்படாதீங்க தம்பி. காசு வாங்காத வடிவேலு சாகமாட்டான். எப்படியும் திரும்பி வருவான். நம்ம மாதிரி நேர்மையா நிக்கிறவங்க தான் அடி தானாம உக்காந்துடுவோம்... வாங்க. போய்க் கிட்டே பேசுவோம்.''

''என்ன காயத்ரி, சீக்கிரமா வந்துட்டே?''

''பர்மிஷன்.''

''எதுக்கு?''

''உங்களைப் பார்த்துப் பேசத்தான்.''

''வீட்ல பேசலாமே?''

''அப்பறம் சொல்றேன்.''

''என்ன ராவுத்தர் கைல ஒரே பேப்பர் கட்டு... வக்கீல் நோட்டீஸா?''

''இன்ஷ்யூரன்ஸ் க்ளெய்ம் தொரை. ஒரு வண்டி ஆளு அடிச்சிடலை...? அது செட்டில் ஆச்சு.''

சீரியஸாக நோயாளியின் ரூமுக்குள் சென்ற டாக்டர் சிறிது நேரம் கழித்து அவசரம் அவசரமாக ஓடி வந்தார். ஒரு கத்தியை மிக அவசரமாகக் கேட்டார். கொடுத்தார்கள். இன்னும் சிறிது நேரம் கழித்து ஓடிவந்து ஒரு ஸ்குரு டிரைவர் கேட்டார். கொடுத்தார்கள். மீண்டும் சிறிது நேரம் கழித்து ஓடிவந்து ஒரு உளி கேட்டார். பொறுமை இழந்த நோயாளியின் உறவினர் கேட்டார்:

''டாக்டர்... அவரது உயிருக்கு ஏதாவது?''

டாக்டர்: ''என்னவென்று தெரியவில்லை. எனது பெட்டியை இன்னும் திறக்க முடியவில்லை.''

-எம். ஆர். சாமுவேல்



''வண்டி கெணத்துல விழுந்தது தெரியும்.''

''அது வேற வண்டி. அது சுத்தமா க்ளோஸ். இது வேற வண்டி. ஆளு அடிச்சுட்டு வந்துட்டான். போலீஸ் கேஸ் முடிஞ்சு செத்துப் போன பார்ட்டிக்குச் சொந்தக்காரங்க போட்ட க்ளெய்மும் செட்டிலாச்சு. முப்பதாயிரம் ரூபா.''

''செத்துப் போனதுக்கு முப்பதாயிரம் தானு?''

''ரோட்டோரத்து ஜனங்க சரின்னு ஒத்துக்கிடுச்சுங்க. முடிச்சுட்டோம். ஒரு மாதிரியான பொம்பளை செத்துப் போனதுக்கு க்ளெய்ம் வாங்கினது.''

''எங்க அது?''

''புத்தூர் பக்கம்.''

''அட. பேப்பர் கொண்டாங்க, வசந்தா, வசந்தாவா?''

''தெரியுமா உங்களுக்கு?''

''ஒரே ஒருதடவை பேசியிருக்கேன். கொஞ்சம் தடிமனு... உதடு பெரிசா. ஒருமாதிரிதான். மாதிரியென்ன... அதான் தொழில்.''

''தம்பி ஏங்க அங்கெல்லாம் போய்...''

''ச்சே, ச்சே... வெறுமனே செக்போஸ்ட் கிட்ட பேசிக்கிட்டிருந்தேன் ராவுத்தர். அன்னிக்கு மறுநாள்தான் ஒங்களைப் பாத்தேன். அது கூட நான் பேசிக்கிட்டு இருந்தப்போ மல்லிகான்னு ஒரு பொண்ணு அடிபட்டுச் செத்ததா அதைக் கூட்டிக்கிட்டுப் போனாங்க. அது தங்கையில்லே. வெறும் ஸ்நேகிதம்னு தானே சொன்னா?''

''அது என்னவோ தெரியலே. க்ளெய்ம் பண்ண வேறு ஆளு வரலே. இது வக்கீல் கூட்டியாந்துட இதை முடிச்சுட்டோம். தம்பி எங்க இறங்கணும்.?''

''மாம்பலத்துல எறக்கி விட்டுடுங்க போதும். ஸ்டேஷன் வரைக்கும் வாண்டாம். டெர்மினஸ்கிட்ட எறக்கி வுட்ருங்க. இரண்டு லாரியும் அடிபட்டுப் போச்சா ஒங்களுக்கு. கஷ்டம்தான்.''

''கஷ்டம் முடிஞ்சு போச்சு தம்பி. லாரி ஓட்றதை நிறுத்திடப் போறேன். போதும். ஆட்டுத் தோல் வியாபாரமோ துணிக் கடையோ ஆரம்பிக்கப் போறேன்.''

''நல்ல வருமானம் இது ராவுத்தர்.''

''வாஸ்தவம். ஆனா ராத்திரி பூரா வண்டியைஅனுப்பிச்சிட்டுவயத்தைப்பிசைஞ்சு கிட்டு உக்காந்திருக்க வேணும்.''

''வண்டி வித்துட்டீங்களா?''

''விக்கணும். விலை படியலியே?''

''படிமான ஒரு விலை சொல்லு நாயக்கரே.''

''இதோ பாரு நான் துண்டு இரும்பு விக்கிறவன். எனக்கு முழு வண்டி வேணும்.''

''அப்ப ஏன் சுத்திச் சுத்தி வர்ற?''

''எவனு வாங்கினு கழிச்சுக் கட்டறதை எடுக்கலாம்னு பார்க்கறேன்.''

''அப்ப எடத்தக் காலி பண்ணு.''

''முழுசு என்ன வெலை?''

''ரெண்டரை.''

''போய்யா. ஓடற வண்டியே அந்த வெலை போவலை. குப்பமோடு மாதிரி கெடக்கிற வண்டிய ரெண்டரைங்கிறியே.''



யுவர் ஆனர், இவர்கள் வரதட்சிணை கேட்காமல் போனாலும், தன் மருமகள் ராகமாலிகா பட்டுப் புடவைக் கட்டிக் கொள்ளக் கூடாது என்று தடை விதித்தது. அழகாக இருப்பதற்கான அந்த பெண்ணின் உரிமையை பறித்ததாகும். இதற்கு மேல் பெரிய குற்றம் என்ன இருக்க முடியும்?

''மொதல்ல நீ வெளியே போ நாயக்கரே.''

கரீம்பாய் எழுந்து நின்று வாசலுக்குக் கைகாட்டினுன்—

''ராவுத்தர்கிட்ட வேல செய்றவனு நீ...? என்னவோ அடிச்சித் தொறத்தறியே?'' நடேச நாயக்கர் எழுந்திருக்காமல் பதில் சொன்னுர்.

''குப்பமோடு அது இதுங்கறியே...?''

''அப்படித்தான்யா பேசுவோம். எங்க பாஷைல குப்பமோடுன்னு பிரிச்சுப் போட வேண்டிய லாரின்னு அர்த்தம். உனக்குக் குப்பமோடுன்னு வேற அர்த்தம். வெளிய போ வெளிய போன்னு... வெவரம் தெரியாத புள்ளைங்களை வெச்சுக்கினு எப்படித்தான் அந்த ராவுத்தர் கம்பெனி ஓட்றுனே?''

''அத்தா வந்துட்டாங்க. எந்திரி மொதல்ல.'' ராவுத்தர் உள்ளே நுழைய நடேசநாயக்கர் மேல்துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டார்.

''கும்புடறேங்க மொதலாளி.''

''வாங்க நாயக்கரே சௌக்கியமா? வியாபாரமெல்லாம் எப்டி?''

''ஏதோ கஞ்சி குடிக்கிறதுல வருது மொதலாளி. தொட்டுக்கறதுக்கு ஒண்ணுமில்லாம சாப்பிடுறோம்.''

''அடேடே அப்படியா?''

''ஏதோ வெல படிஞ்சதுன்னு மொதலாளி தயவுல ஒரு துண்டு ஊறுகா தொட்டுக்கலாம்.''

''ரெண்டரை ரூபாய்க்குக் கொறையாதுன்னு சொல்லிட்டியா கரீம்?''

''வவுத்துல அடிக்காத ராவுத்தரே.''

''என் வயிறு கிழிஞ்சு தொங்குது நாயக்கரே. கம்பெனி மூடிடப் போறோம். தெரியுமில்லே?''

''தெருவுல சொன்னுங்க. இந்த லாரி இல்லேன்னு மூடிடப் போற... இது போனு இன்னொண்ணு. சாதாரண குடும்பமா ஒன்னது?''

''போறும் நாயக்கரே. வெல சொல்லு.''

''ஒரு ரூபா போட்டுக்கங்க.''

''கட்டாது.''

''ஒண்ணு பத்து வச்சுக்குவோம். மூடப் போறேங்கிறியே.''

''கட்டாது.''

''என்னுதான் கடைசி வெல?''

''ரெண்டு...''

''ஒண்ணு மூனு வச்சுக்க, மொதலாளி.''

''இதுக்கு யாருன்னு கேட்டா சும்மாக் குடுத்துடுவேன்.''

கௌசல்யா ராவுத்தர் கடை வாசலில் நின்றிருந்தாள். அவர் கடைசி வார்த்தை கேட்டதும் கண்ணில் சுடர் மின்னிற்று.

''வெல எறங்கமாட்டே?''

''நாளைக்கு வா, நாயக்கர்.''

''போடாங்கிறியா?''

''நாளைக்கு வா.''

''இன்னிக்கு முடிச்சுடேன்.''

''நாளைக்கு வா.''

''யோவ் கரீம்பாய்! வெளியே போ, வெளியே போன்னியே. ராவுத்தர் பேசறதைக் கேட்டியா? வெளியே போன்னு என்னிக்கும் பேசக் கூடாதுய்யா. நாளைக்கு வான்னு சொல்லு. நகந்துடுவேன். வெளியே போன்னு சொல்றது ஒனக்கும் அசிங்கம். எனக்கும் அசிங்கம்.'' நாயக்கர் வெளியேறக் கௌசல்யா உள்ளே நுழைந்தாள்.

''என்ன கௌசல்யா?''

''எங்க ஆம்பிளை உன்னியப் பாக்கணும் னிச்சு. இட்டாந்துருக்கேன்.''

''என்னு சமாச்சாரம்...?''

''பிச்சை கேக்க வந்திருக்கோம்.''

''விஷயத்தைச் சொல்லு.''

''வண்டி வோணும்.''

''யாருக்கு...?''

செல்லதம்பி உள்ளே நுழைந்தான். மேல் துண்டில் உள்ள நாற்பதாயிரம் ரூபாயை மேசைமீது வைத்தான்.

(தொடரும்)

ஈழத் தமிழருக்கு உதவுங்கள்

ஈழத்தில் தமிழருக்கு இழைக்கப்பட்டுள்ள கொடுமைகளுள் மிகக் கொடியது சிறையிலிருந்த கைதிகளை மிருக வெறி கொண்டு கண்மூடித்தனமாகக் கொலை செய்ததே. இது உலக நாடுகள் மற்றும் ஐ. நா. வினுல் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளுக்குப் புறம்பானது.

இந்தச் சிறை வன்முறைகளை உலகிலுள்ள பல்வேறு மனித உரிமைப் பாதுகாப்பு சங்கங்களின் கவனத்துக்குக் கொண்டு வரவும் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிதி உதவி செய்யவும் 'துக்ளக்' ஆசிரியர் 'சோ' தலைமையில், ''இலங்கைக் கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்களின் புனர் வாழ்வுக்கான குழு'' (Committee for Rehabilitation of victims of Riots in Sri Lanka) அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நற்பணிக்கு உதவ விரும்புவோர் காசோலை அல்லது மணியார்டரை மேற்படி குழுவின் பெயருக்கு அனுப்பலாம். விலாசம்: 19, லக்ஷ்மணன் தெரு, மகாலிங்கபுரம் சென்னை—600 034.

வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான்®

ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றும் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன

வளரும் குழந்தைகளுக்கென்றே சிறப்பான சில தேவைகள் உள்ளன—வளரும் வயதிலே உடம்புக்குத் தேவைப்படும் மிகச் சிறந்த புரதம், 22 மூலாதார ஊட்டச்சத்துக்கள்—அளிக்கிறது காம்ப்ளான். மறவாதீர், டாக்டர்களின் சிபாரிசு பெற்ற, திட்டமிட்ட உணவு காம்ப்ளான.

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்:
சாக்கலேட், ஏலக்காய்—குங்குமப்பூ
மற்றும் ஸ்ட்ரபெர்ரி—
மற்றும் சாதாரகத்திலும் கூட.

GLC.6-2012 TM

திட்டமிட்ட பரிபூரண உணவு
காம்ப்ளான்®

இலவசம்! 32 பக்கங்கள் கொண்ட கைப்புத்தகம். ''குடும்பத்திற்கான பரிபூரண ஊட்டச் சத்துணவு வழிகாட்டி'' 50 பைசா தபால் தலை இணைத்து இம் முகவரிக்கு எழுதிப் பெறுக: தபால் பை நம்பர் 19118, (Comp) பம்பாய் 400 025.

வெகு வேகமாக வந்த அந்த டாக்ஸி சற்றே குலுங்கி என் வீட்டு முன்னே நின்று மெல்லப் பெருமூச்சு விட—

''இறங்கம்மா.''

பின் ஸீட்டில் என்னருகே இருக்கும் அத்தையைப் பார்க்கிறேன். பின், டிரைவர் கதவைத் திறந்து விடக் கீழே இறங்குகிறேன்.

என் கண்கள் சுற்றிலும் சுழல...

பக்கத்து, எதிர் வீடுகளின் வாயில்களில் நின்றுகொண்டு பல ஜோடிக் கண்கள் என்னையே வியப்புடன் பார்க்க—

எனக்கு எரிச்சல் எரிச்சலாய் வருகிறது.

ஏன் எல்லோரும் என்னையே பார்க்கிறனர்?

உள்ளே நடக்கிறேன்.

''வாம்மா பூரணி...''

ஹாலில் இருந்த மாமா கனிவோடு வரவேற்க—

அவர் குரல் இதமாக அடிபட்ட மனத்துக்கு ஒத்தடம் தருவது போல் இருக்கிறது.

''கணேஷ் மாடியில் இருக்கான். போய்ப் பார்.''

மாடியை நோக்கி நடக்கிறேன்.

ஒவ்வொரு படியையும் மிதித்து நடக்கும் போது மனத்தில் மெல்ல ஏதோ ஒன்று இடறுகிறது.

என்ன நடந்தது?

எனக்கு என்ன ஆயிற்று?

நான் எப்படி மனநோய் மருத்துவ மனைக்குப் போனேன்?

''உடம்பை மட்டுமல்ல. மனசை நீங்க இனிமேல் அலட்டிக்கக் கூடாது'' என்று டாக்டர் என்னிடம் கூறியது நினைவுக்கு வருகிறது.

''எந்த அதிர்ச்சியான செய்தியையும் இன்னும் கொஞ்ச நாளைக்கு இவுங்க காதிலே போடாதீங்க...''

அத்தையிடம் டாக்டர் கூறியதும் என் காதில் விழுந்தது.

அதிர்ச்சி...

அந்தச் சம்பவம் மூன்று மாதங்களுக்கு முன்னர்தான் நடந்தது.

அது ஒரு புனிதமான வெள்ளிக் கிழமை.

குளித்துமுடித்து, தலையைத் தளரப்பின்னிச் சந்தன மல்லியைக் கொத்தாகச் சூடிக்கொண்டு கையில் காப்பியோடு என் கணவரின் அறைக்குள் நுழைந்தேன்.

மணி ஏழரை இருக்கும்.

கம்பளிப் பூச்சி போல் போர்வைக்குள் சுருண்டிருந்தார் அவர்.

காப்பியை எதிரே மேஜை மேல் வைத்துவிட்டு, மெல்ல அவரை எழுப்பினேன்.

போர்வையைச் சற்றே விலக்கி, என்னைப் பார்த்தவர், மெல்ல சோம்பல் முறித்துக் கொண்டே மறுபடியும் என்னைப் பார்த்து இரண்டு கரங்களையும் என்னை நோக்கி நீட்டினார்.

கரங்களைப் பற்றி அவரைத் தூக்கி விட முயன்றேன்.

ஆனால், என் கரத்தைப் பற்றிய அவர், வெடுக்கென் இழுக்க, சடேரென்று அவரது கரத்தை உதறிவிட்டு எழுந்து நிமிர்ந்த நான், ''வெள்ளிக் கிழமையும் அதுவுமா என்ன விளையாட்டு இது? கோவிலுக்குப் போகணும். காப்பி சாப்பிடுங்க'' என்றேன்.

காப்பியை அவரிடம் நீட்டினேன்.

எழுந்து அமர்ந்து, காப்பியை வாங்கியவர், ''என் மீராவாக இருந்தால் இப்படிச் செய்வாளா?'' என்று நிதானமாகக் கூறவே—

மீண்டும் மீரா

ஜெயவண்ணன்



சுளீரென்று சாட்டையடி பட்டவளாய் அவரைத் திரும்பிப் பார்த்தேன்.

''என்ன சொன்னீங்க?''

''என்ன சொன்னேன்? ம்... வந்து... என் பூரணியாக இருந்தால் இப்படிச் செய் வாளான்னு சொன்னேன்...''

''இல்லே.... மீரான்னு சொன்னதா என் காதிலே விழுந்தது...''

''வீணு எதையாவது கற்பனை பண்ணிக் காதே. எட்டுமணிக்கு எழுப்பு. குளிக்கணும்.''

எனக்கு ஒரே குழப்பம்.

மூன்றாம் நாள் மாலை என் குழப்பத்தின் தீவிரம் அதிகரிக்கத் தொடங்கியது.

அலுவலகத்திலிருந்து திரும்பிய என் கணவர் பேப்பரை மேய்ந்து கொண்டிருந் தார்.

''ஏங்க....''

நிமிர்ந்து பார்த்தார்.

''நேற்று கல்கியை ஆபீசுக்கு எடுத்துக் கிட்டுப் போனீங்களே, கொண்டு வந்தீங் களா? சுஜாதா கதையை இன்னும் படிக் கலே....''

''பையிலே இருக்கு. எடுத்துக்க.''

ஜிப்பை இழுத்துப் பையைத் திறந்தேன். புத்தகத்தை எடுத்துக் கொண்டு வராந் தாவை ஒட்டி அனாதையாகக் கிடந்த நாற் காலியில் போய்உட்கார்ந்து பக்கங்களைப் புரட்டினேன்.

இதோ கதை....


என்ன இது?

கதைக்கு மேலே குண்டு குண் டான எழுத்துக்களில் 'மீரா'...

மறுபடியும் மீரா!

யார் எழுத்து இது?

நிச்சயம் இவருடைய எழுத்து இல்லை.



அவளுடைய பெயர் ஏன் இதில் இருக்க வேண்டும்?

என் மனசில் மெல்லக் கலக்கம் உருவாகத் தொடங்கியது.

கண்களை மெல்லக் கீழே இறக்கினேன்.

....'மாறுதல் வரும்'....

ஆம்.

வரத்தான் போகிறது.

எப்படி?

மறுநாள்.

அவர் குளிப்பதற்காகக் குளியலறையில் புகுந்துகொண்டு 'வைகைக் கரைக் காற்றை' முனு முணுத்துக் கொண்டிருந்தபோது நான் அவரது பையை ஆராயத் தொடங்கினேன்.

அவரது டைரியை அவசரம் அவசரமாகப் புரட்டினேன்.

முதல் அட்டையின் பின்புறம் தெளிவாக ஒரு டெலிபோன் நம்பர்....

நம்பரைக் குறித்துக் கொண்டு, டயரியை மூடி, பையைச் சரிப்படுத்தினேன்.

மாலை மூன்று மணி இருக்கும்.

தெருக் கோடியில் இருக்கும் பொதுத் தொலைபேசிக் கூண்டை நோக்கி நடந்தேன்.

கூண்டுக்குள் நுழைந்து அந்த எண்ணைச் சுழற்றி, குரல் கேட்டதும் எட்டணா நாணயத்தைத் தட்சணை போட்டதும்—

''மீரா ஹியர்.''

இவள்தான் அந்த மீராவா?

இவளுக்கும் என் கணவருக்கும் என்ன தொடர்பு?

''ஹலோ... நான் மீரா பேசறேன்... யார் வேணும் உங்களுக்கு?''

''மிஸ்டர் கணேஷ் அங்கே வந்தாரா?''

''இல்லையே. ஆமாம்... நீங்க யாரு?''

''நான் அவரோட சித்தி பொண்ணு. உங்களைப் பற்றி என் கிட்டே அண்ணா நிறைய்ச் சொல்லியிருக்கான். வீட்டுக்குப் போனேன். வர லேட்டாகும்னு சொல்லிட்டுப் போயிருக்கானும். ஆபீசுக்குப் போன் பண்ணினேன். அங்கேயும் இல்லே. ஒருவேளை உங்க வீட்டிலே இருக்கலாம்னுதான்...''

''அவர் தினம் அஞ்சு மணிக்கு இங்கு வருவார். சில நாட்களில் ஏழு மணிக்கு வருவார். எப்ப வருவார்னு நிச்சயம் சொல்ல முடியாது....''

''.....''

போனை வைத்துவிட்டு வீட்டை நோக்கி நடந்தேன்.

யார் இந்த மீரா?

இரவு.

கட்டிலில் சாய்ந்து கொண்டு படித்துக் கொண்டிருந்தார்.

நான் உள்ளே நுழைந்து கதவைச் சாத்தித் தாழிட்டு விட்டு, அவரருகே வந்து அமர்ந்தேன்.

புத்தகத்தை மூடி மேஜை மேல் போட்டவர் என் முகத்தைப் பார்த்தார்.

''பூரணி....''

''ம்....''

''ஏன் டல்லா இருக்கே?''

''இல்லையே. நல்லாத்தானே இருக்கேன்.''

''பொய் சொல்லாதே.''

சரேலென்று அவர் முகத்தைப் பார்த்தேன்.

''பொய் சொல்றது நானில்லே. நீங்கதான். நான் உங்களுக்கு என்ன குறையை வச்சேன்? இல்லே, என்கிட்டே என்ன குறையைக் கண்டுட்டீங்க? ஏன் எனக்கு இப்படித் துரோகம் செய்யறீங்க?....''

வார்த்தைகள் தடைபட அப்படியே சரிந்து அவர் மடியில் விழுந்தேன்.

கேவிக் கேவி அழத் தொடங்கினேன்.

கோபத்துடன், ''யார் அந்த மீரா?'' என்ற வினா எழுப்பினேன்.

''மத்தியானம் அவளுக்குப் போன் செய்தது நீதானே?''

''ஆமாம்!''

''ஸோ, உனக்கு விஷயம் தெரிஞ்சுட்டுது.''

என்ன சொல்கிறார் இவர்?

''ஆல் ரைட் பூரணி. இனிமே இந்த விஷயத்தை மூடி மறைக்க விரும்பலே. சொல்லி விடுகிறேன்....'' என்றவர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''இந்த மீரா ஒரு விதவை. பணக்காரப் பெண். கல்யாணமான ஆறே மாசத்திலே கணவனை இழந்துட்டா. என் நண்பனோட மனைவி என்ற காரணத்தால அடிக்கடி நான் அவள் வீட்டுக்குப் போறதுண்டு. என் கிட்டே அவ காட்டின பாசத்திலே நான் மயங்கினேனோ, இல்லே அவ மேலே நான் காட்டின பரிவால அவ தன்னையே எனக்குக் கொடுத்தாளான்னு எனக்குத் தெரியாது. நமக்குக் கல்யாணம் ஆறதுக்கு ரெண்டு வருஷம் முன்பிருந்தே அவ பழக்கம் எனக்குண்டு. வெளிப்படையா சொல்றதுன்னா, கணவன் மனைவி போல வாழத் தொடங்கினோம். நம் கல்யாணத்துக்கு அப்புறம் அவளை ஒதுக்கி வைக்க எனக்கு மனசு வரலே. அப்படிச்செய்யவும் நான்விரும்பலே. இப்போ எங்களுக்கு நாலு வயசிலே ஒரு பொண்ணு இருக்கா. பேரு வித்யா....''

அப்புறம் என்ன நடக்குது?

சத்தியமாக எனக்குத் தெரியாது.

அப்புறம் கேள்விப்பட்டது—

அவர் சொன்ன அந்த அதிர்ச்சியான செய்தி என் மூளையைப் பாதிக்க, அந்தப் பாதிப்பில் நான் மயங்கி விழ, மயக்கம்

கர்நாடகாவில் லிங்காயத் வகுப்பைச் சேர்ந்த பெண்கள் பூணூல் அணிவது வழக்கம்!

மங்களூர் ஓட்டல்களில் பாயசமும் கிடைக்கிறது. அதேபோல் கஷாயமும் கிடைக்கிறது. —மஞ்சுதேவன்



டூ-இன்-ஒன்



போர்ஹென்ஸ்
டபிள்–ஆக்ஷன்
டூத்ப்ரஷ் உங்கள்
பற்களை சுத்தம்
செய்யும்போதே
ஈறுகளையும்
தேய்த்துக்
கொடுக்கிறது.



போர்ஹென்ஸ்

டூ-இன்-ஒன்
டூத்ப்ரஷ்

அடல்ட்
மற்றும் ஜூனியர்

276 F-203 TAM

தெளிந்து நான் எழுந்தபோது என் சித்தம் கலங்கிய நிலையில் நான் ஏதேதோ பிதற்ற...

வேறு வழியின்றி மன நோய் மருத்துவ மனையில் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்திருக்கிறார்கள்.

இரண்டு மாத கிழ்ப்பாக்க வாழ்க்கையில் என்ன நடந்தது என்று புரியாது. இருண்ட கண்டத்தில் வாழ்ந்தது போல் வாழ்ந்து விட்டு, இப்போது முழுவதும் தெளிந்து, தெளிவான உணர்வுகளுடன் இதோ என் கணவரின் அறைக் கதவின் அருகே நிற்கிறேன்.

அறைக் கதவு சாத்தியிருக்கிறது.

கரத்தைக் கதவில் பதிக்க, கதவு திறந்து கொள்கிறது.

என்னைக் கண்டதும் சரேலென்று நாற்காலியை விட்டு எழுந்து கொள்கிறார். பின் என்னை நோக்கி நடந்து வந்து, என் தோளைப் பற்றி, ''வா, பூரணி'' என்று கூறி, மெல்ல அழைத்துக் கொள்கிறார்.

''உட்கார்.''

கட்டிலில் அமருகிறேன்.

எதிரே அவர்.

''என்னால்தானே உனக்கு இந்த நிலைமை ஏற்பட்டது. உன் முகத்திலே விழிக்கிற யோக்யதை கூட எனக்குக் கிடையாது. அதனால்தான் உன்னை வரவேற்க நான் கீழே வரலே....''

''......''

''நடந்து முடிந்த சம்பவங்களுக்காக நான் ரொம்ப வருந்தப்படறேன். எல்லாத்தையும் ஒரு கெட்ட கனவா நினைச்சு தயவு செய்து மறந்துடு.''

மறக்கத்தான் முயற்சி செய்கிறேன்.

எதை மறப்பது?

இவர் செய்த துரோகத்தையா?

''உனக்கு உடம்பு இப்படி ஆனது அவளுக்கும் தெரிஞ்சுட்டுது....''

அவள்!

யார்?

மீராவா?

நான் மெல்லத் திரும்பி அவரைப் பார்க்கிறேன்.

''ஆமாம் பூரணி. நடந்ததை மீரா கேட்டா. சொன்னேன். என்னாலதானே உங்க மனைவிக்கு இப்படி ஆயிட்டுதுன்னு அழுதா. 'இப்படி நடந்த பிறகும் நான் உங்களோட அன்பைப் பங்கு போடறதிலே அர்த்தமில்லே. நான் இங்கே இருக்கவும் விரும்பலே. பெங்களூரில் இருக்கிற என் சித்தப்பா வீட்டுக்குப் போறேன். என்னைத் தயவு செஞ்சு நினைக்காதீங்க'ன்னு சொல்லிட்டுப் போயிட்டா...''

மீரா போய்விட்டாள்.

ஒரு பெண்ணோட மனசு இன்னொரு பெண்ணுக்கு நன்றாகப் புரிந்திருக்கிறது.

ஆனால், இவருக்கு?

இவர் ராமர் இல்லை.

அந்த அயோத்தி மன்னனோடு ஒப்பிடக் கூட அருகதையற்ற மிகச் சாதாரணத்துக்கும் கீழான ஒரு....

''இனி சத்தியமா உன் மனசு கோணாம நடந்துக்குவேன், பூரணி'' என்றவர் தன் கரத்தை என் இடையில் பதித்து, என்னை அவரருகே இழுக்க முயன்றபோது—

அந்தக் கரத்தை மெல்ல ஒதுக்கிவிட்டு நிதானமாக எழுகிறேன்.

''இதைவிட அதிகமாக நீங்க என் மேல அன்பைக் காட்டியிருக்கீங்க. அதையெல்லாம் போலின்னு தெரியாம நான் ஏமாந்திருக்கிறேன். இப்போ நீங்க காட்டுற அன்பு உண்மையாக் கூட இருக்கலாம். ஆனா, என் மனசு அதைச்சந்தேகத்தோடுதான் பார்க்குது. உண்மையா நான் உங்களோட வாழ்ந்தேன். ஆனா, நீங்க அதை அர்த்தமில்லாம ஆக்கிட்டீங்க. இப்போ நீங்க உண்மையா வாழ ஆசைப்படறீங்க. ஆனால், என்னால் இதை உண்மைன்னு ஏத்துக்க முடியலே. இப்படி பொய் எது, உண்மை எதுன்னு நான் பூரா மனசிலே தர்க்கம்



நோயாளி: டாக்டர், நோயாளிகளை 'கம்ப்ளீட்டா' பரிசோதிக்கிறாரா? ரொம்ப நாழியாறதே?

பியூன்: நம்ப டாக்டர் ஒரு துணுக்கு ஸ்பெஷலிஸ்ட். கொறைஞ்சது ஒரு ஜோக்குக்கான ஐடியா கிடைக்கிற வரையில் பேஷண்டை விடமாட்டாரு. பேசிக்கிட்டே இருப்பாரு! ப. பழநி

பண்ணி, கணக்குப் போட்டு, விடை கண்டு பிடிக்கறதிலே என் வாழ்க்கையைக் கழிக்க நான் விரும்பலே....''

''பூரணி, நீ என்ன சொல்றே?''

''பொய்யான முகத்தோடு இதுவரை என்கிட்டப் பழகின உங்களை இனிமேல் பார்க்க விரும்பலேன்னு சொல்றேன். இனிமேலும் உங்களோடு இருக்க விரும்பாது ஒரேயடியா என் அம்மா வீட்டுக்குப் போகப் போறேன்னு சொல்றேன். நான் இறந்தாக் கூட தயவுசெஞ்சு என் முகத்திலே வந்து விழிக்காதீங்கன்னு சொல்றேன்....''

படபடவெனப் பொரிந்துவிட்டு அறையை விட்டு அமைதியாக வெளியே நடக்கிறேன்.

இப்போது—

மனசிலே இருந்த பாரமெல்லாம் வெகுவாகக் குறைந்து மனம் இலேசானது போன்ற உணர்வுடன் மாடியை விட்டு ஒவ்வொரு படியாகக் கீழே இறங்குகிறேன்....



ஒவ்வொரு நாளையும்
டான்டெக்ஸ்®
அணிந்து துவக்குங்கள்
காலை முதல் இரவு வரை டான்டெக்ஸ் அணிந்து மகிழுங்கள். அதன் கச்சிதமான உடம்போடு ஒட்டும் அமைப்பும், சிறப்பும் உங்களுக்கு நாள் முழுவதும் இதமான சுகத்தை அளிக்கிறது.
IS : 4964
ISI
ஒட்டி உறவாட
டான்டெக்ஸ்
ப்ரீஃப்ஸ் • வெஸ்ட்ஸ் • காஷுவல்ஸ்
ஸ்போர்ட்ஸ் பனியன்கள் • சிறுவர்களுக்கான ரகங்கள்
THE SEAL OF TANTEX QUALITY
ttk தயாரிப்பு
Imageads-M- TT. 1568Tam

[6]

''வா பாலா... கௌரி வரலியா?''

''இல்லேக்கா. அவ ஃபிரெண்டுக்குக் குழந்தை பிறந்திருக்கு; பார்க்கப் போயிருக்கா... வீட்டில போயி சும்மா உட்கார்ந்திட்டு இருக்கறதுக்குப் பதிலா இங்கே வந்தேன்... மாமா எங்கே? பசங்கள்லாம் வெளில போயிருக்காங்களா?''

''ஹூம்... உனக்கும் கௌரிக்கும் ஒரு குழந்தை பிறந்து எல்லோரும் அதை வந்து பார்க்கற வேளை எப்ப வரப் போவுதோ?''— பெருமூச்சுடன் சுந்தரி பேச,

பாலாஜி கண்களைச் சிமிட்டிப் புன்னகைத்தான்.

''நீ வருத்தப்படறதை யாராவது கேட்டாங்கன்னு, எனக்கு வயசு அறுபதும் கௌரிக்கு ஐம்பதும் ஆயிடுச்சுன்னு நினைக்கப் போறாங்க....''

''அது காலா காலத்துல நடந்தாத்தானே நிம்மதி பாலா? இரண்டு தரம் உண்டாயும் நிக்காமப் போயிட்டதால் கவலையா இருக்கு... நீயும் அவளை டாக்டர் கிட்டே செக்கப்புக்கு இதோ கூட்டிக்கிட்டுப் போறேன், அதோ கூட்டிக்கிட்டுப் போறேன் என்று சொல்லிட்டு இருக்கியே தவிரவும், முனைப்பா....''

''ஸாரிக்கா... வழக்கம் போல இன்னிக்கும் நீ என் மேல புகார் சொல்ல முடியாது... நாங்க நேத்தே டாக்டர் கிட்டப் போயிட்டு வந்தாச்சு...''

''லேடி டாக்டரைப் பார்த்தீங்களா? என்ன சொன்னார்? எல்லாம் சரியா இருக்குதாமா?''

பாலாஜி இடக்கையால் தலை முடியைக் கோதிக் கொண்டான்.

''இல்லேக்கா... சின்னதா ஒரு ப்ராப்ளம் இருக்கு....''

''என்ன பாலா... சிரிச்சுக்கிட்டே என்னமோ சொல்றே?''

பாலாஜி எழுந்து ஜன்னலிடம் சென்று நின்று கொண்டான்.

சிவசங்கரி

மாலையில் பூக்கும் மலர்கள்



மரத்தில் ஒரு மருந்துக் கடை!

பிலிப்பைன்ஸ் நாட்டு விஞ்ஞானிகள் கொய்யா மரத்தை ஒரு முழு மருந்துக் கடையாகவே கருதுகின்றனர்.

கொய்யாப்பழத்தின் தோலில் ஆரஞ்சுப் பழத்தை விடப் பத்து மடங்கு அதிகமாக வைட்டமின் 'சி' சத்து இருக்கிறது. இது சில நுண்ணிய வியாதிக் கிருமிகளை எதிர்க்க வல்லது.

கொய்யா இலையைக் கசக்கி, காயத்தின் மேல் வைத்துக் கட்டினால் அதிகப்படியாக ரத்தம் வடிவதை நிறுத்தும்; கிருமி நாசினியாகவும் செயல்படும்.


வளைந்த மலைப் பாதையில் போகும் பொழுது ஏற்படும் வயிற்றுப் புரட்டல் தலை சுற்றலுக்கு இளம் கொய்யா இலையைக் கசக்கி முகர்ந்தால் உபாதையிலிருந்து விடுதலை பெறலாம்.

சாதாரண வயிற்றுப் போக்கை நிறுத்தக் கொய்யா இலையை ஜலத்தில் போட்டுக் கஷாயம் போல் கொதிக்க விட்டுச் சாப்பிட்டால் குணம் காணலாம். கொய்யாப் பிஞ்சில் உள்ள 'பெக்டின்' என்ற சத்தும் வயிற்றுப் போக்கைக் கட்டுப்படுத்த வல்லது.

ஒரு கொத்து கொய்யா இலையை வெந்நீரில் போட்டுக் கொதிக்க விட்டு அந்த டிகாக்ஷனால் எக்ஸிமா, சிரங்கு மற்ற தோல் வியாதிகள் உள்ள இடத்தில் அலம்பினால் அரிப்பு நீங்கும்.

கொய்யா இலையை இடித்து வாதம், களுக்கு ஏற்பட்ட இடத்தில் வைத்துக் கட்டலாம்.

--ஜெயா வி. ராமன்



இளம் ரோஸ் வண்ணத்தில் கொத்துக் கொத்தாக ஏகத்துக்குபுஷ்பித்திருந்த அரளிச் செடி கிட்டத்தில் இதமாய்ப் பார்த்தது.

''முந்தா நாள் டாக்டர் கிட்டப் போயிருந்தப்போ இரண்டு பேர் ரத்தத்தையும் எடுத்து ஆர். எச். ஃபாக்டரையும் வி. டி. ஆர். எல்லையும் பார்க்கச் சொல்லி இருந்தார். இது ரொடீனா எல்லாருக்கும் செய்யற டெஸ்ட்தான். ஆனா, நேத்து திரும்பப் போனதும் எனக்கு ஆர். எச். பாஸிடிவ்,வெனிக்கு நெகடிவ்னு தெரியவந்தது.''

''இரு... இரு... உன் வைத்திய பாஷைல பேசினா எனக்கு என்ன புரியும்? ஆர். எச்னா என்ன? புரியறாப்பல சொல்லு பாலா....''

''புரியறாப்பலேயா? ம்ம்? எல்லார் ரத்தத்துலயும் வெள்ளை அணு, சிகப்பு அணுன்கிற மாதிரி ஆர். எச். ஃபாக்டர்னும் ஒண்ணு இருக்கு. இது பாஸிடிவ் அல்லது நெகடிவ்வா இருக்கும். கணவன், மனைவிக்கு இது ஒரே மாதிரியா அமையறதுதான் நல்லது. மனைவிக்கு பாஸிடிவ்வா இருந்து, புருஷனுக்கு நெகடிவ்வா இருந்தாக் கூடப் பரவாயில்லே. ஆனா, மாறி இருந்துடுச்சுன்னா கஷ்டம். எங்க விஷயத்துல மாறி இருக்கிறதாலதான் பிரச்னையே....''

''இதுல என்ன பிரச்னை? எனக்குப் புரியலையே!''

''உண்டாகி இருக்கிற குழந்தைக்கும் அம்மா மாதிரியே ஆர். எச் நெகட்டிவ்வா பிடிச்சின்னா கவலை இல்லை... ஆனா, அப்பா மாதிரி ரத்தம் ஆர். எச். பாஸிடிவ்வா அமைஞ்சிடிச்சின்னா கஷ்டம்....''

''என்ன கஷ்டம்?''

''அம்மா ரத்தத்துக்கும், அவ வயத்துல இருக்கிறகுழந்தை ரத்தத்துக்கும் ஒத்துக்காம போயிடும்க்கா....''

''போயிடிச்சின்னா?''–

பாலாஜி கொஞ்சம் தயங்கினான். நேர் பார்வை பார்க்காமல் பேசினான்.

''குழந்தை உயிரோட பிறக்கிறது சந்தேகம். அப்படியே பிறந்தாலும் உடனே வைத்தியம் பண்ணலேன்னா, நீலம் பாரிச்சு இறந்திடலாம்....''

''முருகா....''

இரண்டு காதுகளையும் பொத்திக்கொண்டு சுந்தரி கண்களில் ஈரம் கசிய ''இதைப் போயா சின்னப் பிராப்ளம்னு சொன்னே பாலா?'' என்று வினவியபோது குரல் இகதப்பாய் வெளிப்பட்டது.

பாலாஜி அவள் அருகில் வந்தமர்ந்து கொண்டான்.

''முன்னெல்லாம் இந்தப் பிரச்னை பெரிசா இருந்தது நிஜம்தானக்கா... ஆனா, இது 1966 – அதை மறந்துடாதே... ஸயன்ஸ் நாளுக்கு நாள் வளர்ந்து எல்லாப் பிரச்னைகளுக்கும் வியாதிகளுக்கும் மருந்தும், மாத்தும் கண்டு பிடிச்சுக்கிட்டே இருக்கிறதாலே இதுவும் இப்ப அத்தனை பயங்கரமானதா இல்லே....''

சுந்தரி கண்களைத் துடைத்துக்கொண்டாள். ஆர்வத்துடன் தம்பியின் கரத்தைப் பற்றிக் கொண்டாள்.

''அப்படின்னா இதுக்குக்கூட வைத்தியம் இருக்குனு சொல்றியா?''

''ம்ம்... குழந்தை பிறந்த உடனே அதோட தொப்புள் கொடிலேந்து ரத்தத்தை எடுத்து கூம்ப்ஸ் டெஸ்ட்னு ஒரு பரிசோதனை பண்ணினா, குழந்தைக்கு ஆர். எச். நெகடிவ்வா, பாஸிட்டிவ்வானு தெரிஞ்சிடும். தாயார் வகையிலேந்து மாறுபட்டிருந்ததுன்னா ஆன்ட்டி ஆர். எச். டி. மருந்தை உடனடியா கொடுத்திட்டா குழந்தை பிழைச்சுடும்.''

''இத்தனையும் பிறந்த உடனே செய்யறது சாத்தியமா?''

''செய்யறாங்களே...''

அவன் சொல்லியவற்றைப் புரிந்து கொள்ள முயல்வது போல் சுந்தரி முழுசாய் ஒரு நிமிஷம் பேசாதிருந்துவிட்டு, கேட்டாள்:

''இதெல்லாம் கௌரிக்குத் தெரியுமா?''

''ஓ எஸ். நேத்தே நான் விவரமாச் சொல்லிட்டேன். அவளும் காலேஜ்ல கொஞ்சம் இது பத்திப் படிச்சிருக்காக்கா... வீணா கவலைப்படறதாலே என்ன பிரயோஜனம் சொல்லு....''

சுந்தரி புருவங்கள் முடிச்சுப் போட்டுக் கொள்ள யோசித்தாள்.

''முன்னால இரண்டு கர்ப்பம் நாப்பத் தஞ்சி நாள்ல கலைஞ்சு போச்சே... அதுக்கும் இந்த என்னமோ 'எச்'சுனு சொல்றியே, அதுதான் காரணமா?''

பாலாஜி தெரியாது என்று தலை அசைத்தான்.

''ஒரு அபார்ஷன் ஆறதுக்குப் பல காரணங்கள் இருக்கலாம். நாம குறிப்பிட்டு எந்த டெஸ்ட்டும் அப்பச் செய்யாததாலே இன்ன காரணம்னு சொல்றது கஷ்டம்... கர்ப்பம்னு தெரியாம, அவளை ஸ்கூட்டர்ல உட்கார வெச்சு நான் ஊர்சுத்தினது கூடக் காரணமாக இருக்கலாம்.. ஹு நோஸ்? அது சரி... மாமா எங்கே? பசங்க எங்கே? ஒருத்தரையும் கண்ணுல காணுமே!''

''ஆபீஸலேருந்து வந்தவர் எல்லாத்தையும் இழுத்துக்கிட்டு பீச் வரைக்கும் போயிட்டு வரேன்னு போனார். லீவு விட்டிருக்காங்களா? வீட்டை ஹதம் செய்யுதுங்க. நீ வரப்போறேன்னு சொல்லியிருந்தா எங்கயும் போகாம உனக்காகக் காத்திருப்பாங்க...''

''கௌரி கூடச் சொல்லிக்கிட்டு இருந்தா; வர்ற ஞாயிறு அன்னிக்கு எல்லாருமா மகாபலிபுரம் போயிட்டு வரலாம்னு....''

''சொல்லிட்டியோ இதுங்களுக்கு கால் தரையிலே பாவாது...''

''விடிகாலைல கிளம்பி, கையிலே சாப்பாடு எடுத்துக்கிட்டு பிக்னிக் மாதிரி போயிட்டு வந்திடலாம். இரண்டு காருக்கு ஏற்பாடு பண்ணிடறேன். நீ மாமா வந்ததும் விவரத்தைச் சொல்லிடு...''

''ஜமாய்ச்சிடுவோம்... இப்ப நீ என்ன சாப்பிடறே? அதைச் சொல்லு... பிடி கொழுக்கட்டை பண்ணி இருக்கேன். நாலு எடுத்துக்கிட்டு, காப்பி சாப்பிடறியா?''

''நாலு என்ன? ஆறு கொண்டுவா. ஒரு பிடி பிடிக்கிறேன்...''

தம்பி டிபனைச் சாப்பிட்ட நாழிகையில் கிட்ட நின்று காப்பி ஆற்றிக் கொடுத்த சுந்தரி அக்கறையுடன் பேசினாள்.



ஆண் பெண் இருபாலாருக்கும் தலை முடி அதிகமாக உதிர்ந்தால் தலையில் பொடுகு இருப்பதும் ஒரு காரணம். இது சீப்பு, தலை துவட்டும் துண்டு போன்றவைகளால் அடுத்தவருக்குப் பரவக் கூடியது. தலையில் பொடுகுத் தொல்லை அதிகமானால் கழுத்துப் பகுதி, காதின் பின்புறம் போன்ற இடங்களிலும் சிறு புண் வர வாய்ப்புண்டு. வெள்ளை வால்மிளகைப் பாலில் ஊற வைத்து விழுதாக அரைத்துத்தலையில் அழுந்தத் தேய்த்து நன்றாக ஊறிய பிறகு தண்ணீரில் அலசிக் குளிக்கவேண்டும்.

வால் மிளகு கிடைக்காதவர்கள் புளித்துப் போன தயிரைத் தலைக்குத் தடவி மஸாஜ் செய்து சுமார் 25 நிமிடங்கள் கழித்துக் குளிர்ந்த நீரில் குளித்து வரக் குணம் தெரியும். இந்தப் புளித்த தயிர் மஸாஜ், வறண்ட, மினு மினுப்பில்லாத தலைமுடி உள்ளவர்களுடைய மனக் குறையையும் போக்க வல்லது.

—பாத்திமுத்து

''இந்த முறை கருத்தரிச்சதும் நீங்க ரொம்ப ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும் பாலா... வேணும்னா கௌரிய இங்க கொண்டுவிட்டுடு...நான் பார்த்துக்கறேன்... அலைச்சல் கூடாது. ரெஸ்டாப் படுத்துக்கிட்டே இருக்கணும்... அப்புறம்...''

அப்படித்தானே இருந்தார்கள்?

அந்த ஜனவரி மாசம் நாற்பது நாட்களை மூன்றாவது முறையாகத் தாண்டின பின், இது நிச்சயம் பிள்ளைதான் என்று தீர்மானித்ததும் அல்லாமல் எப்பாடு பட்டாவது இதைத் தக்க வைத்துக் கொண்டுவிட வேண்டும் என்ற வெறி எழ, பாலாஜியும், கௌரியும் தங்களின் முழு கவனத்தையும் வளரும் பிள்ளை மேல் செலுத்தி மிக மிக ஜாக்கிரதையாக இருந்தார்கள்தானே?

கைனகாலஜிஸ்ட் கூறிய அறிவுரையைக் கோடு மாதிரி நேராகக் கடைப்பிடித்து, வீட்டை விட்டு நகராமல், ஓய்வாக இருந்து, அயர்ன், கால்ஷியம் டானிக்குகளுடன், ஹார்மோன் சிகிச்சை ஒன்றையும் சமர்த்தாக எடுத்துக்கொண்டு, கௌரி நாட்களை எண்ண,

முதல் முறையாக மூன்று மாதங்கள் முடிந்து நாலாவது பிறந்ததும் எல்லார் முகத்திலும் சந்தோஷம் பெரிசு பெரிசாக எப்போதும் பூக்கத் தொடங்கியது.

தனி வீட்டில் இருந்தால், பொறுப்பு அதிகம் என்பதுடன், சின்னச் சின்னதாக காரியங்கள் இருந்து கொண்டே இருக்கும் என்று ஐந்தாம் மாசம், மனைவியுடன் மாமனாரின் வீட்டுக்கே பாலாஜி குடி பெயர்ந்தான்.

அந்த மாசமும், அதற்கு அடுத்து வந்த மாசமும், 'இனி கொஞ்சம் நடக்கலாம்; எக்ஸர்ஸைஸ் உடம்புக்கு நல்லது' என்று டாக்டர் சொல்லிவிட, மாலை தப்பாது இருவரும் மெரினாவுக்குச் சென்று நடக்க ஆரம்பித்தார்கள்.

குலுங்காமல், நொடிக்காமல் ஓட்டி, ஆல் இண்டியா ரேடியோவுக்கு முன்னால் வண்டியைப் பாலாஜி நிறுத்துவான். சுற்றிக் கொண்டு வந்து கதவைத் திறந்து மனைவி இறங்க உதவுவான். கையோடு கை கோர்த்த படி இரண்டு பேரும் பேசிக் கொண்டே நிதானமாக நடப்பார்கள்.

இன்ன சப்ஜெக்ட்தான் என்று இல்லை; புதுசாய் வாங்கி வந்த ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்' பற்றி, முதல் நாள் ரேடியோவில் கேட்ட எம். டி. ராமநாதனின் கச்சேரி பற்றி, அன்று பாலாஜி செய்த ஆபரேஷன் பற்றி, ஹிண்டு க்ராஸ்வேர்ட் மேலிருந்து கீழாக ஆறாவது வார்த்தை புரிபடாமல் உதைப்பது பற்றி,

அல்லது,

பிறக்கப்போகும் குழந்தையைப் பற்றி...

—பிள்ளையா பெண்ணா? எது வேணும்?

—ம்ம்... எனக்குப் பெண்... உன்னை மாதிரியே....

—ம்ஹூம்... எனக்குப் பிள்ளை, உங்களை மாதிரியே...

—பெண்...

—பிள்ளை...

—பெ.....ண்.....

—பிள்.....ளை....

—சரி சரி... எதுக்கு வம்பு? — இரட்டையா பெத்திடு. சண்டை வேணாம்...

—ஆசையைப் பாரு. பிள்ளைதான் பிறப்பான். அவன் உங்களை மாதிரியே டாக்டரா வருவான்... உங்களை மாதிரியே ஆர்ட் க்ரிட்டிக்கா இருப்பான்... உங்களை மாதிரியே எடுப்பான மூக்கு, அ...கலமான நெத்தியோடு இருப்பான்... தென்....

—நெவர்... உன்னை மாதிரியே அவ... புத்திசாலியா இருப்பா, உன்னை மாதிரியே அருமையா பெயிண்ட் பண்ணுவா... பாடுவா... உன்னை மாதிரியே உயரமா....

—நோ... நோ...

—எஸ்... எஸ்....

—பா...வா... ப்ளீஸ்....

—கௌரி ப்ளீஸ்...

சிரிப்பார்கள்.

எதிரில் வருவோர் போவோரெல்லாம் புருவங்களைத் தூக்குவதை லட்சியம் செய்யாமல் கண்களில் நீர் துளிர்க்க, மெரினா பிளாட்பாரம் என்பதை மறந்து நாபியிலிருந்து குதூகலம் பன்னீராய்த் தெளிக்கச் சிரிப்பார்கள்.

ஆனால் இந்தச் சிரிப்பெல்லாம் சரியாக —ஏழாம் மாசத்தின் பாதிவரைதான்.

ஒரு நாள் இரவு....

அழுத்தமான உறக்கத்திலிருந்தவள் திடுக்கிட்டு விழித்தாள்.

அடிவயிற்றில் சன்னமாய்ச் சங்கடம்...

மெதுவாய்ப் பளிச் பளிச்சென்று சாட்டை இழுப்பு மாதிரி தொடர்ந்து வலி...

அ...ம்....மா....ஆ....ஆ....

பாலாஜி அவளை அள்ளிப்போட்டுக்கொண்டு நர்ஸிங் ஹோமுக்கு ஓடியும் காரிலேயே பனிக்குடம் உடைந்து போய்,

அட்மிட் ஆன சில நிமிஷங்களில் நீல மேக வண்ணனாகக் கௌரி ஆசைப்பட்ட பிள்ளை ஸ்டில் பார்ன் பேபியாக, உயிரற்றுப் பிறந்தான்.

(தொடரும்)

அடுப்பு நாச்சி!

யாழ்ப்பாணத்தில் தமிழர் வீடுகளில் விசேஷ நாட்களில் சுடும் பலகாரங்களில் முதல் தின்பண்டம் 'அடுப்பு நாச்சி' என்று வணங்கப்படும் தெய்வத்துக்குத்தான். முதல் பலகாரத்தை அடுப்புக்குள் போட்டபிறகு ருசி பார்ப்பது வழக்கம்!

இதேபோல் குழந்தைகளுக்கு வாய், தொண்டையில் புண் வந்தாலும், நோய் வந்தாலும், சாதம் வடிக்கும் போது சுடுநீர் கையில் தெறித்து விட்டாலும், சமைத்த பொருட்களை அடுப்பின் முன்னால் வெற்றிலை, பாக்கு வைத்துப் படைத்து ஒவ்வொன்றிலும் சிறிதளவு கிள்ளி அடுப்புக்குள் போடுகிறார்கள். அதன் பிறகு படையல் செம்பில் உள்ள தண்ணீரைப் பண்டங்கள் மீது தெளித்தபிறகே சாப்பிடத் தொடங்குகிறார்கள்.

யாருக்காவது உடல் நலமில்லாமல் பத்தியம் மேற்கொண்டாலும் அடுப்பு நாச்சிக்கு 'நேர்ந்து கொண்டு' பத்திய உணவில் சிறிது அடுப்புக்குள் போடுவது.

—பேராசிரியர் கணபதி பிள்ளை எழுதிய ''ஈழத்து வாழ்வும் வளமும்.''

—ஏ. கே. நாசர்.





"குடும்பப் பொறுப்புக்கு ஈடு கொடுக்க கொள்ளைத் தெம்புதேவை...எனக்கு அள்ளித் தருகுது நான் பருகும் விவா"








''குடித்தனம் நடத்துகிற பொறுப்புத்
தான், காலெல்லாம் பம்பரமாய்
ஓடியாடி உழைக்க வைக்கிறது
என்னை... அதுவும் உற்சாகத்தோடு
செய்கிறதைக் கச்சிதமாய்ச்
செய்கிறேன். நான் பருகும் விவா
எனக்கு வற்றாத தெம்பு தருகிறது.
பார்லி, கோதுமை இவற்றின்
மால்ட் சத்துக்கள், பால், வைட்டமின்கள்
அடங்கிய விவா தயாரிக்க எளிதானது.
பாலிலேயும் சரி, நீரிலேயும் சரி
கலக்க இலகு. சூடான பானமாகவோ,
குளிர் பானமாகவோ சுவையுடன்
அருந்தலாம். அலுக்காமல் உழைக்க
எனக்கு சளைக்காத தெம்பு—
தருகிறது விவா.''

"தெம்பு தரும் விவா உனக்கு நன்றி!"

மாண்ட் (உலக) தேர்வில் வெள்ளிப் பதக்கம் வென்றது, ஆம்ஸ்டர்டாம் 1981

JiL ஜகத்ஜீத் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

ASP/JIL: V/3/2012 TM


என்னப்பா உன் சம்சாரம் சீட்டுக் கவிதை வச்சு அனுப்பியிருக்காங்களா?
அது நினைவுக் குறிப்புச் சீட்டு... வீட்டுக்குத் திரும்புறப்போது கொசுவர்த்திச் சுருள் வாங்கிட்டுப் போகணுமாம்.
அந்தச் சின்ன பெட்டியிலேயிருந்து என்ன எடுக்கிறாய்?
அது டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள். கொசுத் தொல்லையிலே என் விடுமுறையை கெடுத்துக்க மாட்டேன்.
ஆம், எங்க வீட்டிலே கொசுக்களை விரட்டியடிக்கிறதுக்கு உங்க மனைவியோட சேவை கொஞ்சம் தேவை.
என் மாமியார் என்வீட்டிலேயிருந்துக்கிட்டு போகவே மாட்டேங்கிறாங்க. அவங்க வீட்டிலே ஒரே கொசுத் தொல்லையாம்.
ஒரு பெக் டார்டாய்ஸ் வாங்கிக் கொடுத்து மாமியாரை பேக் பண்ணி அனுப்பு.
டார்டாய்ஸ் கொசு
வர்த்திச் சுருள்
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
..போர்ட், பம்பாய்-400 023. ..போன்: 273831
everest/83/BCL/65-tm

வடக்கு வாழவைக்கும்

மறுபக்கம் - 1

'உபகாரத்தில் உயர் நாடு' கட்டுரையில் டெல்லியிலிருந்து வந்த சந்திரசேகரன் தம்பதிகளின் அனுபவத்தைப் படித்தேன். அவர்கள் நிலையைஎண்ணும்போது கண்களில் நீர் வந்து விட்டது. ஆனால் டெல்லிக்கு நான் குடும்பத்துடன் போனபோது ஏற்பட்ட அனுபவமே வேறு.

முதல் வகுப்பில் குடும்பத்துடன் போய்க் கொண்டிருந்தேன். காலை ஒன்பதரை மணி சமயம். 'கேரளா கர்நாடகா எக்ஸ்பிரஸ்' ஆக்ராவை நெருங்கிக் கொண்டிருந்தது. எங்கிருந்தோ மாடு மேய்க்கும் பையன் ஒருவன் விட்டெறிந்த ஒரு கல், ரயிலின் வேகத்தோடு போட்டி போட்டு வண்டியின் உள்ளே இருந்த என்னை முகத்தாடையில் தாக்கியது. மேல் வரிசைப் பற்கள் நாலைந்து, கீழ் வரிசைப் பற்கள் நாலைந்து ஈறு மட்டத்தில் பாதியாக உடைந்து சிதறின. ரத்தம் எக்கச் சக்கமாக வெளியேறியது!

அதே வண்டியில் பிரயாணம் செய்த டெல்லி ரயில்வே சூப்பரின்டெண்டெண்டு, கார்டு முதலானோர் உடனே முதலுதவிசெய்தனர். அத்துடன் அந்தக் கண்ணியம் மிக்க சூப்பரின்டெண்டெண்டு, போலீஸ்காரர்களை 'எஸ்கார்டாக'ப் போட்டு டெல்லியில் இறங்கியதும் என்னை ரயில்வே ஆஸ்பத்திரியில் சேர்த்து வேண்டிய உதவிகளைச் செய்ய ஏற்பாடு செய்தார். குடும்பத்தை நாங்கள் சேர வேண்டிய 'கரோல்பாக்' பகுதிக்குப் போலீஸ் எஸ்கார்ட்டுடன் அனுப்பிவைத்தார். பிற்பாடு வெல்லிங்டன் ஆஸ்பத்திரிக்குப் போனபோது அங்கே மதராசி என்று அலட்சியப்படுத்துவார்களோ என்று நான் பயந்ததற்கு மாறாக, நல்ல முறையில் நான் குணமடையே வழி செய்தார்கள். வடக்கு வாழ்கிறது - வாழவைக்கவும் செய்கிறது. ஆனால் குறை சொல்லியே பழக்கப்பட்ட நமக்குத்தான் பாராட்ட மனம் வருவதில்லையே!

—எம். பி. துரைசாமி

வித்தியாசமான ஆட்டோ டிரைவர்

மறுபக்கம் - 2

கல்கி ஆண்டு மலரில் 'ஆட்டோ அனுபவம்' படித்தேன். எழுதியவரின் வேதனை என் நெஞ்சைத் தொட்டது.

இதே சென்னையில் என் ஆட்டோ அனுபவம் சற்று வித்தியாசமாக இருந்தது.

சென்ற மாதம் தேவராஜ் முதலி தெருவில் ஒரு மெத்தைக்கு ஆர்டர் கொடுத்திருந்தேன். அதை அவசரம் கொண்டு செல்ல வேண்டும். ஒரு ரிக்ஷாக்காரரை அணுகினேன். ரூ. 15க்குக் குறைந்து வர மறுத்து விட்டார். அதற்கும் சம்மதித்தேன். மெத்தை தைத்து முடிக்கப் பத்து நிமிடம் ஆகலாம் என்று கடைக்காரர் கூறினார். ரிக்ஷாக்காரரோ அவசரப்படுத்திக் கொண்டிருந்தார். இடையில் வேறு சவாரி கிடைத்ததும் சொல்லிக் கொள்ளாமலேயே அவர் வண்டியைக் கிளப்பிக் கொண்டு போய் விட்டார்.

அடுத்து ஒரு ஆட்டோ டிரைவரை அணுகினேன். ''மீட்டர் சார்ஜுக்கு மேல் பார்த்து போட்டுத் தாருங்கள்'' என்றார். பின்னர் பதினைந்து ரூபாய் கொடுத்தால் வருவதாகக் கூறினார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இருப்பினும் நான் பேரம் பேசினேன். பத்து ரூபாய் தருவதாகக் கூறினேன். ''இரண்டு ரூபாய் சேர்த்துப் பன்னிரண்டு ரூபாய் தாருங்கள்'' என்றார். கடையினுள் வந்து பார்த்தால் மெத்தை தைத்து முடிக்க மேலும் பத்து நிமிடம் ஆகும் போல் இருந்தது.

ஆனாலும் அவர் பொறுமையாகக் காத்திருந்து ஏற்றிக் கொண்டார். இதற்குள் இருட்ட ஆரம்பித்து விட்டது. வழியில் வண்டியின் ஹெட் லைட் எரியவில்லை. ஒரு ஒர்க்ஷாப் அருகில் நிறுத்தினார். ''சார், கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். ஐந்து நிமிடத்தில் சரி செய்து கொண்டு புறப்பட்டு விடலாம்'' என்றார். நானும் ''அவசரம் ஒன்றுமில்லை'' என்றேன்.

''விளக்கு இல்லாமல் சென்று போலீசுக்குப் பதில் சொல்வது ஒருபுறமிருக்க, இதனால் விபத்தும் ஏற்படலாம். இதற்கெல்லாம் ஏன் சார் இடம் கொடுக்கணும்?'' என்றார் டிரைவர். 'நாம் இருப்பது சென்னைதானா? அல்லது டிரைவர் சென்னைக்குப் புதியவரா?' என்ற சந்தேகம் எனக்கு ஏற்படவே செய்தது. பத்து ஆண்டுகளுக்கும் மேலாகச் சென்னையில் ஆட்டோ ஓட்டுவதாக அவர் கூறியது வியப்பாகவே இருந்தது.

வீடு வந்து சேர்ந்தேன். கனமான அந்த மெத்தையை டிரைவர் தாமே எடுத்து வந்து மாடியில் சேர்த்தார். பேசியதை விட ஒரு ரூபாய் அதிகமாகச் சேர்த்துப் பதின்மூன்று ரூபாயாகக் கொடுத்தேன். சந்தோஷமாகப் பெற்று அன்போடு விடைபெற்றார்.

இப்படிப்பட்ட பண்புள்ள டிரைவர்களும் சென்னையில் இருக்கிறார்கள். பயணிகளும் அவர்களிடம் மரியாதையாகவும் பண்பாகவும் நடந்து கொள்ள வேண்டும். தற்போது சுய வேலை முயற்சியில் எத்தனையோ பி. ஏ. எம்.: ஏ. படித்த பட்டதாரி இளைஞர்களும் ஆட்டோ ஓட்டுகின்றனர்.

—க. முத்துகிருஷ்ணன்

'நறுக்'கான செய்திகள்

● மேற்கு ஜெர்மனியில் பெண்கள் இப்போது எதற்குப் போராடுகிறார்கள்? கணவன், பள்ளியறையில் மனைவியைப் பலவந்தப்படுத்துவதைக் குற்றமாக்கி தண்டனை விதிக்க வேண்டும் என்பதற்காக! உடலுறவு கொள்ள மனைவிக்கு விருப்பமில்லாத நேரத்தில் கணவன் அவளைக் கட்டாயப்படுத்துவது தவறு. இதுவும் ஒரு வகையில் 'ரேப்' என்பது வாதம்!

—ஜெர்மன் டிரிப்யூன்

● இஸ்ரேல் நாட்டை யொட்டியுள்ள ''டெட் ஸீ'' என்ற கடலில் யாரும் மூழ்கிச் சாக முடியாது! அதில் அத்தனை உப்புச் சத்துக்கள் உள்ளன. மல்லாந்து படுத்து மிதந்தவாறே நாளிதழைப் படிக்கலாம்!

''பொட்டாஷ்'' உலகெங்கும் ரசாயன எருவாகப் பயன்படுகிறது. அது இந்தக் கடலிலிருந்து ஏராளமாக ''அறுவடை''யாகிறது. தவிர, புரோமைன், மெக்னீஷியம், லிதியம் போன்ற பொருள்களையும் இக்கடலிலிருந்து தயாரித்து இஸ்ரேல் ஏற்றுமதி செய்கிறது.

-இஸ்ரேல் நியூஸ்



● கேரம் விளையாட்டிலும் செஞ்சுரி உண்டு! ராணிக் காயுடன் (சிவப்பு) ஒன்பது கருப்புக் காய்களையோ அல்லது ஒன்பது வெள்ளைக் காய்களையோ விடாமல், தொடர்ந்து பாக்கெட் செய்தால், 'செஞ்சுரி'!

—எஸ். விஜயா சீனிவாசன்



● 20—8—83 மாலை கனமாக மழை தூறிக் கொண்டிருந்தது. அந்த மழையிலும் ஆட்டோவில் ஒலி பெருக்கி வைத்து விளம்பரம் செய்துவர, வெளியில் வந்து பார்த்தேன்.

ஈரோடு வீரப்பன் சத்திரத்தில் இருக்கும் சாராயக் கடையின் விளம்பரம் அது. 100 மில்லி சாராயம் ரூ. 1.50க்கு ஊற்றுவதாகவும் 200 மில்லியடித்தால் நல்ல கிக் வரும் என்றும் விளம்பரம் செய்தார்கள். இந்த அநியாயம் வேறு எங்காவது நடக்குமா?

போகிற போக்கைப் பார்த்தால் வீட்டுக்கு வீடு வந்து பால் ஊற்றுவது போல் 'சாராயம் வேண்டுமா?' எனக் கேட்டா

'நறுக்'கான செய்திகள்

● வாஷிங்டன் போஸ்ட் கார்ட்டூன்: இதற்குக் கமிஷன், அதற்குக் கமிஷன், மேலும் மேலும் கமிஷன்கள்-இப்படியேபோனால்... இனி எதற்குக் கமிஷன் போடலாம் என்று யோசித்துச் சொல்ல கமிஷன் அமைக்கலாம்! (இந்தியா போல்தானு அமெரிக்காவும்!)

—நியூஸ் வீக்

● நீலப் பச்சைப் பாசியை உரமாக நெற்பயிருக்கு இடலாம். இந்தப் பாசி ஆகாயத்திலுள்ள நைட்டிரஜனை பயிருக்குக் கிட்டும் நைட்டிரஜனாக மாற்றி வழங்க நிலத்தில் ஒரு தொழிற் கூடமாக விளங்குகிறது. இதன் மூலம் 10 கிலோ அளவுள்ள நைட்டிரஜன் ஓர் ஏக்கரில் நெற் பயிருக்குக் கிடைக்கிறது. இது 22 கிலோ யூரியாவிலுள்ள நைட்டிரஜனுக்குச் சமமானது.

—காயாமொழி சௌகத் அலி



நறுக்கான செய்திகள்



● உயர் நீதிமன்ற நீதிபதி பதவி ஏற்றுள்ள முதல் முஸ்லீம் பெண் என்ற சிறப்பைப் பெற்றவர் குமாரி எம். பாத்திமா பீவி. இவர் கேரள உயர்நீதிமன்ற நீதிபதி.

திருவனந்தபுரம் சட்டக் கல்லூரியில் சேர்ந்த முதல் முஸ்லீம் மாணவி. மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதியான முதல் முஸ்லிம் பெண், வருமான வரி மேல் முறை யீட்டுக் குழுவில் இடம் பெற்ற முதல் பெண் போன்ற பல சிறப்புக்களை இவர் இதற்கு முன் பெற்றுள்ளார். பி. எல்., பட்ட வகுப்பில் முதல் மாணவியாக இவர் தேர்ச்சி பெற்றதற்காக பார் கவுன் சில் இவருக்கு அளித்த தங்கப் பதக் கத்தை தன் கழுத்துச் சங்கிலியில் மாட்டி யுள்ளார்.

ஆதாரம்: 'தி வீக்'
தகவல்: எஸ். முத்துப்பாண்டி

● குமாரி பாத்திமா பீவி








● எலிஸபெத் டெய்லர் மறுபடி திருமணம் செய்து கொண்டிருக்கிறார் — ஏழாவது தடவையாக. வயது 51. கணவர் விக்டர் கோன்ஸாலஸ் லூனு மெக்ஸிகோ மின்சார இஸ்திரிப்பெட்டி வழக்கறிஞர்.

● எலிஸபெத் டெய்லர்.



ஜன்னல் கதவுகள்

ஜெரா





ஏலத்தில் விலே பேசிக் கிளி வாங்கியவர்: கிளி பேசுமில்லீங்க...?
ஏலம் விட்டவர்: சந்தேகமே வேண்டாம், உங்களுக்குப் போட்டியாக இவ்வளவு நேரம் ஏலம் கேட்டது இந்தக் கிளி தான்!

—பால கோவிந்தராஜ்

கையில புஸ்கத்தோட நான் ஜன்னலேத் திறக்கும்போது வழக்கத்தை விட லேட்டா யிடுச்சு. சாதத்தை வடிச்சுட்டு, பருப்புக்கு உலே வச்சுட்டு டப்பாவைத் திறக்கும் போதுதான் அது ரெண்டு நாளைக்கு முன்னு லேயே காலியாயிட்டது ஞாபகம் வந்துச்சு. கையும் ஓடல்லே, காலும் ஓடலே. நேத் திக்கே அப்பன் கிட்டச் சொல்லியிருக்கலாம். பாழாப் போன மறதி! என்ன பண்றது. இப்ப எல்லாம் சட்னு எல்லாத்தையும் மறந்துடறேன். ஏன்னே தெரியலே!

ரெண்டு நாளா வெறும் ரசத்துல சாப் புட்டுப் போட்டு இன்னிக்கும் அதுதான்னு அப்பன் ஒரேயடியாக் கத்தும். அதுக்கு 'கர்னு' கோபம்தான் வருமே தவிர, நெலேமை ஒன்னும் புரியாது. அக்கம் பக்கத்து வீட்டுல பல்லேக் காட்டி பிராஞ்சு கொழம்பு வச்சு எறக்கறதுக்குள்ளே போதும் போதும்னு ஆயிப்போச்சு. அதான் லேட்டு!

இல்லேன்னு கரெக்டா அஞ்சரை மணிக் கெல்லாம் ஜன்னலேத் தொறந்து உக்காந்துடுவேன். இதுக்குள்ளே காது ஒடிஞ்சு போன ஒரு ஸ்டூலே அப்பிடி இப்பிடிச் சரி பண்ணிக் கண்ணும் கருத்துமா காப்பாத்திக் கிட்டு வர்றேன். ஒரு தடவை அடுப்புக்கு விறகில்லேன்னு அப்பன் கிட்டே சொன்னப் பக்கூட, ''அந்த ஸ்டூலே ஒடிச்சு வையேன்!'' னுட்டுப் போயிட்டாரு!

எனக்கு ஒரு நிமிஷம் உடம்பெல்லாம் பதறிப் போச்சு. ஸ்டூலே வச்சுட்டா அப்புறம் ஜன்னல் கிட்டே எப்படி உட்கார்றது! நல்ல வேளையா அன்னிக்குப் பார்த்து பக்கத்து வீட்டுப் பானுசாமி மாமா ''செலவுக்கு வச்சுக்கம்மா''ன்னு ஒரு ரூபா கொடுத்தாரு! அவரு இப்பிடி அடிக்கடி குடுப்பாரு. ஆனா நான்தான் வேண்டாம்னு சொல்லிடுவேன். ஸ்டூலு போயிடுமேங்கற பயத்துலதான் அன்னிக்கு வாங்கிக்கிட்டேன்.

பானுசாமி மாமா ரொம்ப நல்லவரு. அப்பன் வயசுதான் இருக்கும். மில்லுல ஒன்னா அப்பன் கூடத்தான் வேலே செஞ்சாராம். இப்ப ரிடையர் ஆனதும் எங்கியோ ஒரு மரக் கடையில வாட்ச்மேனா இருக்காரு. அவருக்குக் கொழந்தைங்க இல்லே. ஒரு பையனேத் தத்து எடுத்து வளத்துக்கிட்டு இருந்தாராம். அவனும் கல்யாணம் கட்டிக் கிட்டு எங்கியோ வடக்கே போயிட்டானும். பொண்டாட்டியும் செத்துப் போயிட்டா. உறவுக்காரங்க எல்லாம் ரொம்ப தொலேவுல இருக்காங்களாம். மாமாதான் இதையெல்லாம் எங்கிட்டச் சொன்னாரு. அப்பன்தான் பரிதாபப்பட்டு அவருக்குப் பக்கத்து வூட்டை வாடகைக்கு வுட்டுச்சு!

மழை வந்தா வீட்டுக்குள்ளே இருக்கறதுக்கும் வெளியே இருக்கறதுக்கும் வித்தியாசமே தெரியாது. நெறைய ஒழுகும். உத்தரக் கட்டை யெல்லாம் உளுத்துப் போச்சு. என்னிக்கு வுழுந்துடுமோன்னு எனக்கு அடிவயித்தைக் கலக்கிக்கிட்டே இருக்கு. ஒரே ரூம்புதான். அதுக்குப் போயி மாமாவைத் தவிர வேற எவனும் முப்பது ரூபா தரமாட்டான். நல்ல வேளையா மாமா மழை வர்ற நேரத்துல எல்லாம் இங்கே இருக்கிறதே இல்லே! பகல்லே கொஞ்ச நேரம் படுத்துத் தூங்க வருவாரு. நைட்டுல எல்லாம் எனக்குத் தெரிஞ்சு இங்கே இருக்கவே மாட்டாரு. நைட் வாட்சுமேனு போல இருக்குனு நானே நெனச்சுக்கிட்டேன்.

இந்த ஜன்னல் பக்கம் உட்கார்ந்திருக்கனே — சாயந்தரம் அஞ்சரை மணியில இருந்து ஆறரை வரைக்கும் — இந்த ஒரு மணி நேரம்தான் எனக்கு ஒலகமே கையில கிடைச்ச மாதிரி ரொம்ப உற்சாகமா இருக்கும்.

பேருக்கு ஒரு பொஸ்தகத்தைப் புரட்டிக் கிட்டு இருப்பேன். கண்ணு பூராவும் தெருவுலதான் இருக்கும். தெனம் சினிமாவுக்குப் போறவங்க எல்லாம் இந்த ரோடு வழியாதான் கார்லேயும், ஸ்கூட்டர்லேயும், கால் நடையாவும் போய்க்கிட்டே இருப்பாங்க. அவங்களே யெல்லாம் பார்க்கறதுக்குத்தான் நான் இந்த ஜன்னல் பக்கமா உக்காந்துகிட்டு இருக்கேன்.

யப்பா! சினிமாவுக்குப் போறவங்க மூஞ்சிலதான் எத்தனே சந்தோஷம்! என்னமோ கோட்டையைப் புடிச்சுட்ட மாதிரி. அவுங்களேப் பார்க்கறப்பலே அந்த சந்தோஷம் எனக்கும் வந்து ஒட்டிக்கிறது போலத் தோணும். மயிர்க் கால்லே எல்லாம் கள்ளு உற்சாகம் எட்டிப் பார்க்கும்.

வாஸ்துவத்தில சொல்லப் போனா அலமேலு போனதுக்கு அப்புறம்தான் இந்த ஜன்னல்கிட்ட உட்கார்ற பழக்கமே எனக்கு வந்துச்சுன்னு நெனேக்கிறேன். அதுக்கு முந்தி எல்லாம் இப்பிடித் தெருவை வெறிச்சுப் பாக்கறதுன்னாலே எனக்கு அருவெறுப்பாத்தான் இருக்கும்.

ஒருத்தருக்கொருத்தர் ரகசியமா பேசிச் சிரிச்சுக்கிட்டு, உடம்போட உடம்பு உராய்ஞ்சுக்கிட்டு நடக்கற புருஷன் பெண்டாட்டிகளேயும், ஸ்கூட்டர் பின்னால உட்கார்ந்துகிட்டு புருஷன் தோளிலே தொத்திக்கிட்டுப் போற பொண்ணுகளேயும் பார்க்கறப்போ இப்ப எல்லாம் மனசுல ஒரு தாகம் எடுக்குதே. எனக்கும் இப்பிடி ஒரு நேரம் எப்ப வரும்னு ஏங்கிப்போய்க் கண்ணு சொருகிப் போகுதே.

இந்த அனுபவமெல்லாம் இந்தக் கடன்காரி அலமேலு கல்யாணம் கட்டிக்கிட்டுப் போன பின்னலதான் எனக்கு ஏற்பட்டுப் போச்சி.

எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. புருஷன் வீட்டுக்குப் போன பின்னல ஒரு பண்டிகைக்குன்னு அலமேலு வந்திருந்தா! நானும் பழசை எல்லாம் ஞாபகம் வச்சுக்கிட்டு ஓடிப் போய் அவளைப் பார்த்தேன்.

''புருசன் கூடச் சேர்ந்து சினிமாப் பாத்தா அந்தச் சொகமே தனிதாண்டி. அந்த இருட்டிலே, படக் கூடாத இடத்துல கை படறதும், கால் படறதும், இடுப்பைக் கிள்றதும் யம்மாடி, சொன்னப் புரியாது. அனுபவிக்கணும்!''



ஒருவன்: அந்த சலூனில் மட்டும் என்ன இவ்வளவு கூட்டம்?''

மற்றவன்: கட்டிங், ஷேவிங் செய்யப் படும்போது ஏற்படும் ஒவ்வொரு காயத்துக்கும் பத்துப் பைசா டிஸ்கவுண்ட் செய்து சார்ஜ் வசூலிக்கிறார்களாம்!''

—கோவை தங்கபாரதி

அலமேலு பெரிசா மூச்சு விட்டு இதைச் சொல்லும்போது எனக்கே என்னமோ போல ஆயிடுச்சு. ஆனா அவளைப் போல நானும் அப்பிடி எல்லாம் அனுபவிக்கணும்னு ஏக்கமாயும் இருந்துச்சு.

போறப்ப அலமேலு ''உனக்கு எப்போ கல்யாணம்கோமதி''ன்னுகேட்டாளே! நிஜமா சொல்றேன். அப்ப எனக்கு ரொம்ப அழுகையா வந்துடுச்சு! தொண்டையில பாறாங்கல்லாய் ஏதோ ஒரு துக்கம். என்னன்னே தெரியலே! அலமேலுவுக்கு என்ன பதில் சொல்றதுன்னும் எனக்குப் புரியல! பேசாம தலையைத் தொங்கப் போட்டுக்கிட்டேன்.

அன்னிக்குச் சாயந்திரம் பாலுசாமி மாமா கூடப் பேசிக்கிட்டு இருக்கறப்ப ''ஏன் மாமா, புருஷங் கூட சினிமா பாத்தாத்தான் நல்லா இருக்குமா''ன்னு கேட்டுட்டேன். அவரு முகம் சட்னு வாடிப் போயிட்டது.

''உங்கப்பன் கிட்டே சொல்லிச் சீக்கிரமா உனக்கு மாப்பிள்ளே பாக்கச் சொல்றேன்''னு அவரு முணுமுணுத்தது எனக்குக் காதுல விழுந்தாலும் விழாத மாதிரி வெளியே வந்துட்டேன். இருந்தாலும் அவரு சொன்னதைக் கேட்டதும் 'ஜில்'னு உடம்புல ரத்தம் எகிறிப் பாயறதை என்னால உணர முடிஞ்சுது.

தாயைப் போல புள்ளே — நூலைப் போல சேலைன்னு சொல்லுவாங்களாம். எங்கம்மா கூட யாரோடயோ ஓடிட்டதா ஒவ்வொரு சமயம் அப்பன் குடி போதையில ஒளறிக்கிட்டு ஒப்பாரி வைப்பாரு. எனக்கு அதெல்லாம் ஞாபகமில்லே! அப்ப நான் பாப்பாவா இருந்திருப்பேன். அம்மா முகம் கூட எனக்கு மறந்து போச்சு. வரிசையா குடும்பத்துல தலை குனியற மாதிரி சம்பவங்க நடந்ததினால அப்பன் கூட பாதியிலேயே வேலைய வுட்டுடுச்சு! அதுக்கப்புறம் சதா குடி, சீட்டாட்டம்தான். காசெல்லாம் கரைஞ்சு போனதுக்கப்புறம் வீட்டுப் பொருளு ஒவ்வொண்ணா விலைக்குப் போச்சு! இப்ப எங்கியோ கூலி வேலைக்குப் போயிக்கிட்டு இருக்கு! அதான் தெனம் சாப்புடறதுக்கே மல்லுக்கட்ட வேண்டி இருக்கு!

எனக்கும் சரியாப் படிப்பு ஏறலே. எட்டாவது படிக்கறப்ப வயசுக்கு வந்தேன். அதுக்கப்புறம் இஸ்கோல் பக்கமே போனதில்லே. கொஞ்சம் படிச்சிருந்தா இந்த மாதிரி சமயத்தில வேலைக்குப் போகலாமேன்னு இப்பத் தோணுது. மத்த பொண்களைப் பார்க்க வர்ற மாதிரி என்னைப் பொண் பாக்க எவனுமே வர்றதில்லே!

ஒரே ஒரு தடவை ஒரு சொட்டைத் தலை ஆளு வந்தான். அப்பன் அடுத்த வூட்டு ஆயாளைக் கூப்பிட்டு, எனக்கு அலங்காரமெல்லாம் பண்ணச் சொல்லி, பலகாரமெல்லாம் கடையில இருந்து வாங்கியாந்து ஏக தடபுடலாத்தான் எல்லாம் செஞ்சது! ஆனா அந்தச் சொட்டைத் தலைக்கு என்னைப் புடிக்கலியாம்! இவன் என்னவோ மன்மதக் குஞ்சுன்னு நெனப்பு!

சில சமயத்துல தண்ணி கொஞ்சம் ஓவரா போச்சின்னு அப்பன் என் கையைப் புடிச்சுக்கிட்டு, ''கோமதி, உனக்கு எப்பிடியாச்சும் கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணிப்புடறேன். நீ அவசரப்பட்டு உங்கம்மா மாதிரி ஓடிப் போயிடாதேம்மா'' ன்னு பச்சைப் புள்ள மாதிரி அழுவும். எனக்குக் கண்ணெல்லாம் கலங்கிப் போவும்! ''இல்லப்பா, போவ மாட்டம்பா''ன்னு சமாதானம் சொல்வேன்!

நெஜமாவே எனக்கு இந்த ஓடிப்போறது, இருட்டுக் கல்யாணம் பண்ணிக்கிறது இதெல்லாம் புடிக்கிறதே இல்லே. ''என் கூட வந்துடறியா கோமதி''ன்னு எதுத்த வூட்டு லாரி டிரைவர் பழனி ஒரு நாள் ரகசியமாக் கேட்டதுக்கு அவனைப் பளார்னு அறைஞ்சுட்டேன். அப்ப எனக்கு ஏன் அப்படி ஒரு ரௌத்திரம் வந்துச்சுன்னு பின்னால யோசிச்சுப் பார்த்தா ஒண்ணுமே புரியல!

ஓடிப்போறதுக்கெல்லாம் எனக்குத் தைரியம் போதாது. நான் ஒருத்தியாவது எங்கப்பன் பார்த்துக் கட்டி வைக்கிற மாப்புள்ளையை ஏத்துக்கிட்டாத்தான் அவருக்குக் கௌரவமா இருக்கும். அவருக்கு இப்பிடி



சாதாரணமாக ஆகும் செலவில்
பாதியிலேயே உங்கள் வீட்டுச் சுவர்கள்
எல்லாவற்றிற்கும் பெயிண்ட் பூசலாம்!
ஜனதாசேம்®
இந்தியாவில் முதன்முதலாக பெயிண்ட்டுகளில்
''ஸி பிளஸ்' முறையைப் புகுத்தித்
தயாரிக்கப்படுவது.
ஜனதாசேம்
சிறிய அளவே அதிகப் பரப்பளவிற்குப்
பரவுகிறது.

தமிழ்நாடு அரசு பரிசு சீட்டு

கோலாகலமான

தீபாவளி குலுக்கல்

குதூகலமான



சிறப்பு முதல் பரிசு



மூன்று சிறப்பு இரண்டாவது பரிசுகள்: ரூ. 1 லட்சம் வீதம்

மற்றும் ஏராளமான பரிசுகள்! தாராளமான வாய்ப்புகள்!!

மொத்தம்
3 வரிசைகள் :

குலுக்கல் நாள் :
20.10.1983

சீட்டின் விலை
ரூ. 2/-

DIPR/304/83 (R)

ஆணையர், தமிழ்நாடு பரிசு சீட்டுத் திட்டம்
அரசினர் தோட்டம், சென்னை-600 002.

ஒரு மதிப்பை ஏற்படுத்திக் குடுக்கிறதுதான் என் கடமைன்னு கூட நினைக்கறேன்! அதுக்கு இன்னும் எத்தனை வருஷம் ஆனாலும் சரி!

அதுவரைக்கும் இதோ இந்த ஜன்னல் வழியாப் பாக்கறேனே! புருசன் கூட ஒட்டிக்கிட்டுச் சந்தோஷமா சினிமாவுக்குப் போற பொண்ணுக, அவங்க முகத்தைப் பாத்துக்கிட்டே இருக்கிற சந்தோஷம் மட்டும் எனக்குப் போதும்.

''கோமதி!''

அட, பாலுசாமி மாமா கொரலு மாதிரி இருக்கே! என்ன இது, அதிசயமா இன்னிக்கு சாயந்திர நேரத்துல திரும்பி இருக்காரு! உடம்பு கிடம்பு சரியில்லாம இருக்கா? ஜன்னல் கதவுகளைச் சாத்திவிட்டு நான் கவலையோட வெளியே வந்தால் மாமா நிற்க முடியாம லேசாத் தள்ளாடிக்கிட்டு இருக்காரு! மாமாவுக்கு இந்தப் பழக்கமெல்லாம் கூட உண்டா? இதுவரைக்கும் நான் ஒரு நாள் கூடப் பார்த்ததில்லே!

''கோமதி – உங்கப்பன் இல்லே?'' – கதவை தொறந்துக்கிட்டே மாமா 'ச'ன்னு இளிச்சப்ப ஒங்கி அறையலாம் போலத் தோணிச்சு எனக்கு. எழவு! என்ன பண்றது? எங்கப்பன் வயசு இதுக்கு!

குடிக்கத் தண்ணி கேட்டுச்சேன்னு நான் சொம்புல தண்ணியோட ருமுக்குள்ளே போறப்ப மாமா சட்டையைக் கழட்டிட்டு கட்டிலிலே உட்கார்ந்துகிட்டு இருந்தாரு.

''சொம்பைப் புடிங்க மாமா. எனக்கு வேலே கிடக்கு''

மாமா சொம்பை வாங்காம 'கோமதி'னு குழையக் குழையக் கூப்பிட்டுக்கிட்டே எந்திருச்சுட்டாரு.

''கோமதி, தெனம் புருஷன் கூடச் சினிமாவுக்குப் போற பொண்ணுங்களைப் பாத்து ஏங்கறியே! புருஷன் கூடப் பாத்தா தான்னுட்டு இல்லே – எந்த ஆம்பிளை கூட சேர்ந்து சினிமாப் பார்த்தாலும் சொகமாத்தான். இருக்கும். தெருவுல போற சோடிங்கள்'ல புருஷனும் இருப்பான், பொறுக்கியானும் இருப்பான். வா'யன், இன்னிக்கு நானும் நீயும் சினிமாவுக்குப் போலாம்.''

மாமா பேசிக்கிட்டே படக்னு என்கையைப் புடிச்சிட்டாரு. எனக்கு உடம்பு பூரா கரெண்ட் பாயற மாதிரி ஆகிப் போச்சு. ஜில்னு ரத்தம் உறைஞ்சு போயிட்ட மாதிரி, நாக்கு சடக்னு உள்ளே இழுத்துக்கிட்ட மாதிரி, எதுவுமே பேச முடியல!

மாமா என்னைத் தன் பக்கம் இழுத்துக்கிட்டு ''உங்கப்பன் குடிச்சுப் போட்டு ஊரை மேய்ஞ்சுக்கிட்டு இருக்கான். இந்த ஜென்மத்துல உனக்குக் கல்யாணம் பண்ண மாட்டான். நீ இப்படி 'சைடுல' சொகத்தைத் தேடிக்கிட்டாத்தான் ஆச்சு''ன்னு காதுல கிசுகிசுத்தாரு. கப்னு சாராய நாத்தமும் பீடி நாத்தமும் என் குடலைப் பொரட்டற மாதிரி இருந்துச்சு.

கூடவே இத்தினி நாளு மாமா மேலே எனக்கு இருந்த மதிப்பெல்லாம் போயி, இவனும் ஒரு ஆம்பிளைதாயிதாங்கற நெனப்பு வந்து 'சீ'னு ஆகிப் போச்சு!

வெறி புடிச்ச மாதிரி மாமாவை உதறித் தள்ளிப்புட்டு காறித் துப்புனேன். மேற்கொண்டு பேச முடியாம அழுகை 'குபுக்'னு பொங்கிடுச்சு. முகத்தை மூடிக்கிட்டு வீட்டுக்கு ஓடியாந்துட்டேன்.

என் ஏக்கத்தை யெல்லாம் இந்த ஜன்னல் கதவுகளைத் திறந்து அது வழியா வடிச்சுக் கிட்டதாலே தானே இவனுக என்னைக் கின்னுக் கிரையா நெனைச்சுட்டானுக. மனசுக்குள்ள பொங்கற ஆசையையும் ஏக்கத்தையும் இப்படி விரியத் திறந்து போட்டுத் தன்னைத் தானே பலவீனப்படுத்திக்கிறது பொண்ணுகளுக்கு ரொம்பப் பெரிய ஆபத்துன்னு நல்லாப் புரிஞ்சிக்கிட்டேன்.

இப்ப எல்லாம் நான் அந்த ஜன்னல் கதவுகளைத் திறக்கிறதே இல்லே. எப்பவும் மூடியே கிடக்குது – என் மனசைப் போலவே.



யார் அந்தப் பெண்?

வக்கீல் (சாட்சியை நோக்கி): அந்த வீட்டில் நீ ஒரு பெண்ணுடன் வசித்து வந்தாய் அல்லவா?
சாட்சி: ஆமாம்.
வக்கீல்: அவள் உன் மனைவி இல்லே, அப்படித்தானே?
சாட்சி: ஆமாம்!
வக்கீல்: அவள் உன்னுடைய தாய் இல்லே, அல்லவா?
சாட்சி: ஆமாம்!
வக்கீல்: அவள் உன்னுடைய மகளும் இல்லே, அப்படித்தானே?
சாட்சி: ஆமாம்!
வக்கீல்: அவள் உன் சகோதரியும் இல்லே, அல்லவா?
சாட்சி: ஆமாம்!
வக்கீல்: கனம் நீதிபதி அவர்களே! சாட்சியிடம் இனி கேட்பதற்கு எதுவும் இல்லே.
நீதிபதி (ஆர்வத்துடன் சாட்சியை நோக்கி) அப்படியானால் அந்தப் பெண் யார்?
சாட்சி (அமைதியாக): என்னுடைய பாட்டி!

ஆதாரம்: எம். ஜே. ஆண்டொனி எழுதிய LAW FOR THE LAYMAN புத்தகம்.

தமிழில்: காயத்ரி

அஸ்வமேத யாகம்

பிரதிபா ராஜகோபாலன்

ஒலி அடங்கிக்காட்சியளித்ததே ஒரு தனிக் குணமென அந்தக் காலனி அமைதியாய், அடக்கமாய் நகரிலிருந்து உள்ளடங்கி இருந்தது. ஒவ்வொரு பங்களாவையும் தனி மாளிகையாய் விஸ்தரித்திருந்தது. ஒவ்வொரு போர்டிகோவிலும் அநேகமாக ஒரு காராவது அடுத்த பயணத்துக்கு நின்றிருந்தது.

ஒவ்வொரு பங்களாவின் எண்ணையும் கூர்ந்து கவனித்து நடந்து வந்த அவன், தேடி வந்த எண்ணைக் கண்டதும் மனத்தில் சின்னப் பிரகாசத்துடன் சலவைக் கல்லில் தெரிந்த பெயரைப் படித்துக் கொண்டான். டாக்டர் நச்சினார்க்கினியன் பி. எச். டி. என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு கேட்டைத் திறந்தான். அவனுக்கெனக் காத்திருந்தது போல ஒரு பாமரேனியன் நாகரிகமாய் ஒரு லொள் போட்டு வரவேற்றது.

ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்த இளம் பெண் அலிஸ்டர் மக்லினைத் தாழ்த்திக் கொண்டு "யாருங்க?" என்று பார்வையால் கேட்டாள்.

"பேராசிரியரைப் பார்க்கனும்" என்று மெல்லிய குரலில் சொன்னான் அவன்.

"இருக்கார். அப்படி உட்காருங்க" என்றவள் எழுந்து உள்ளே போய் மூன்று நிமிஷத்தில் வந்தாள். அவளின் நெருங்கிய ஒரு தோழி போல் பாமரேனியனும் உள்ளே போய்த் திரும்பி ஊஞ்சலில் தாவியது.

அடுத்த நிமிடத்தில் கதவை முழுவதும் திறந்த ஒலி கேட்டு நிமிர்ந்தான்.

டாக்டர் நச்சினார்க்கினியன் கை வைத்த பனியனும், மெல்லிய துண்டுமாய், படித்துக்கொண்டிருந்த புத்தகத்தில் அடையாளத்துக்கு விரல் வைத்தவராய், யாரிது இந்நேரத்துக்குத் தொல்லை என நினைத்தவராய் நின்றிருந்தார். கூடியவரை இலக்கணத் தமிழில் பேசுவதுதான் அவருக்குப் பிடிக்கும்.

"வணக்கம் ஐயா. என் பெயர் நந்தகோபால். எழுத்தாளன். டாக்டர் சாந்தகுமார் என்னைப் பற்றிப் போனில் சொல்லி இருக்கக் கூடும்" என்று அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"ஓ....நேற்றுத்தான் சொன்னார். உள்ளே வாருங்கள்."

இருவரும் உள்ளே நுழைந்தார்கள். வரவேற்பு அறை உயர்ந்த கலை அறிவுடன் அமைந்திருந்தது. பேராசிரியர், லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் வெளி நாட்டு நண்பர்கள் சிலருடன் எடுத்துக் கொண்ட புகைப்படம் பார்வையைக் கவ்வியது.

"என் மகன் கிளாஸ்கோவில் டாக்டராக இருக்கிறான். போன வாரம் தான் போய் வந்தேன்" என்று அவராகவே ஒரு தகவல் சொன்னார்.

"டாக்டர் சாந்தகுமார் சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன். நான் இதுவரை சுமார் முந்நூறு சிறுகதைகள், பத்து நாவல்கள் எழுதியிருக்கிறேன். பல பரிசுகள் பெற்றிருக்கிறேன். தமிழக அரசு என் சிறுகதைத் தொகுப்பு ஒன்றுக்குப் பரிசு வழங்கி யிருக்கிறது. என் படைப்புக்களை, தம் டாக்டர் பட்டத்திற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஒருவர் ஆய்ந்து வருகிறார். தங்கள் கல்லூரி சுயாட்சி கல்லூரி ஆதலால் இந்தக் கல்வி ஆண்டுக் கல்லூரி திட்டத்தில் என் புத்தகம் ஒன்றைப்பாட நூலாக வைக்கத் தங்கள் மூலம் முயற்சிசெய்யலாம் என்று டாக்டர் சாந்தகுமார் ஆலோசனை கூறினார்."

"அப்படியா? இந்த வருடப் பாடக் கமிட்டியின் தலைவர் நான்தான். வருகிற பதினெட்டாம் தேதி இதன் இறுதிக்கூட்டம் நடைபெறுகிறது. என்ன புத்தகம் உங்களுடையது?"



அவன், தன்னுடன் வைத்திருந்த பையைத் திறந்து, 'மனிதர்கள் மேலே போய்க் கொண்டிருக்கிறார்கள்.' என்ற தன் புத்தகத்தை அவரிடம் பணிவுடன் கொடுத்தான்.

அவர் எழுந்து, தம் கண்ணாடியைக் கொண்டுவந்து அணிந்து அதைப் பார்த்தார்.

''இது நாவலா?''

''இல்லே ஐயா, சிறுகதைத் தொகுப்பு.''

''விலே?''

''பத்து ரூபாய்.''

''விலே அதிகமாய் இருக்கிறதே?''

''என்ன விலேயில் இருக்க வேண்டுமய்யா?''

''ரூபாய் ஐந்து அல்லது ஆறு இருக்கலாம் அல்லவா?''

''ம்.''

அவன் தன் பையிலிருந்து இன்னொரு புத்தகத்தை எடுத்து நீட்டினான்.

''இது என் நாவல்.'' மிகச் சிறந்த இலக்கிய அமைப்பு ஒன்றின் பெயரைச் சொல்லி ''அதன் பரிசு பெற்றது. நான் எழுதியதில் மிகச் சிறந்த நாவல் இது'' என்றான்.

அதை வாங்காமலே ''பெயர்?'' என்று கேட்டார்.

''கங்கை உன் கண்ணில்.''

''புத்தகம் சிறியதாய் இருக்கிறதே? மாணவர்கள் வருடம் முழுதும் படிக்க



வேண்டுமல்லவா? நம் கல்லூரி தரமான கல்லூரி. அதனால்தான் சுயாட்சியைக்கொடுத்தார்கள். பாடக் கமிட்டியின் உறுப்பினர்கள் ஆறு பேர். மூன்று பேர் நம் கல்லூரித் துணைப் பேராசிரியர்கள். மற்ற மூன்று பேர் வெளியூர்ப் பேராசிரியர்கள். எல்லாரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் உங்கள் புத்தகம் இருக்க வேண்டும்.''

''எல்லோருடைய பரிசிலனைக்கும் உட்படுத்தித் தேர்வு செய்தால் போதும். பொதுவாக, கல்லூரியின் சார்பாக, பாட நூலுக்குப் புத்தகங்களை அனுப்புமாறு பதிப்பாளர்களையும் எழுத்தாளர்களையும் கேட்டுக்கொண்டு விளம்பரப்படுத்துவார்கள். அதைப் பார்த்துப் புத்தகங்களைக் கல்லூரி முதல்வருக்கு அனுப்பி வைப்பார்கள். ஆனால் நம் கல்லூரியில் அந்த வழக்கம் இல்லை என்று டாக்டர் சாந்தகுமார் சொன்னார்....''

''ஆமாம். அப்படிச் செய்தால் பதிப்பாளர்களும் எழுத்தாளர்களும் நம்மை மொய்த்துக் கொள்வார்கள். தொல்லைப் படுத்துவார்கள். அதனால் யாரையாவது சார்ந்துவிட்டார் என்று குற்றச்சாட்டு எழும். அதனால்தான் நாமே, நமக்குத் தெரிந்த அளவில் புத்தகங்களைத் தேர்வு செய்து ஒன்றை வைத்து விடுகிறோம். இந்த ஐந்து வருடமாய் அப்படித்தான் நடக்கிறது.''

''அந்தத் தேர்வில் என் புத்தகத்தையும் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் ஐயா. நான் தங்கள் கல்லூரி மாணவன். அதுவும் தங்கள் மாணவன். நான் படித்த கல்லூரியிலேயே என் புத்தகம் ஒன்று பாட நூலாக வைக்கப்பட்டால் எனக்கு மதிப்பாகவும் பெருமையாகவும், என் எதிர்கால இலக்கிய வாழ்வின் மேம்பாட்டுக்கு உறுதுணையாகவும் இருக்கும்.''

''முயற்சி செய்கிறேன். பி. ஏ. படித்த பின் மேற்கொண்டு படித்தீர்களா?''

''இல்லை, ஐயா. குடும்பப் பொருளாதார நிலை மேற்கொண்டு படிக்க விடவில்லை. இப்போது அரசுத் துறையில் அதிகாரியாய்ப் பணிபுரிகிறேன்.''

''சரி. உறுப்பினர்களிடம் சொல்லிப் பார்க்கிறேன். உங்கள் நூலின் பிரதிகளை மற்ற உறுப்பினர்களிடம்கொடுத்துவிடுங்கள்''

''வெளியூர் உறுப்பினர்களிடம்?''

''முகவரி தருகிறேன். தபாலில் அனுப்பி விடுங்கள். உள்ளூர் உறுப்பினர்களை நேரில் அணுகுங்கள். கல்லூரியே உங்களிடமிருந்து ஆறு பிரதிகள் வாங்கி, உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். நம் கல்லூரியில் இதுவரை அப்படிப் பின்பற்றவில்லை. இருங்கள் முகவரி தருகிறேன். மே மாதம் என்பதால் விடுமுறையில் வீட்டில் இருப்பார்கள் என்று உறுதியாய்ச் சொல்ல முடியாது. முயற்சி செய்யுங்கள்'' என்றவர் எழுந்து போய் பத்து நிமிடத்தில் ஒரு டைரியுடன் வந்து, முகவரிகளை எழுதிக்கொள்ளச் சொன்னார்.

எழுதிக் கொண்டு, நன்றி சொல்லிப் புறப்பட்டான் அவன்.

வெளியூர் பேராசிரியர்களுக்குத் தபாலில் பிரதிகளை அனுப்பிவிட்டு, உள்ளூர் உறுப்பினரான ஒரு பேராசிரியரைத் தேடிப் போனான்.

''காலேஜ் வாத்தியார் வீரபாண்டி இருக்கிறாரா?''

''புரபசரா? உள்ளே இருக்காரு.''

தூக்கிக் கட்டிய லுங்கியும், புசு புசுவென்று எல்லா இடங்களிலும் கரடி மயிராக வளர்ந்த முடியுடன் ஆட்டுக் கிடாயின் வளைந்த கொம்புகளைப் போல மீசை அடர்த்தியாய் வளர்ந்து வளைந்து, இருதாக்களைத் தொட்டுக் கொண்டிருந்தது.

''வணக்கம். வாங்க'' என்று அவரே வரவேற்றார். குரலில் கூட முரட்டுத்தனம் இருந்தது.

அவன் எழுந்து ''வணக்கம்'' என்று சொல்லிவிட்டு, தன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்டு, தான் வந்த நோக்கத்தையும் சொன்னான்.

''உட்காருங்க'' என்று நாற்காலியைக் காட்டிவிட்டு, ''மதுரம்'' என்று குரல் கொடுத்தார். அவன் உட்கார்ந்து கொண்டான். ஒரு நிமிடத்தில், கதவு திறந்து வேலைக்காரி வந்தாள்.

''சார் யார் தெரியுமா? மண்ணின் வாசனை எழுத்திலேயே வீசுதுன்னு அடிக்கடி பெருமைப் பட்டுக் கொண்டாடுவியே அவர் தான். சார், இது என் மனைவி, மதுரம்னு பேர். தி. ஜானகிராமன் படைப்புக்களை ஆராய்ச்சி பண்ணி பி. எச். டி. வாங்கி இருக்காங்க. லேடீஸ் காலேஜ்ல ஹெட் ஆப் த டிபார்ட்மெண்டா இருக்காங்க....''

வேலைக்காரி என்று நினைக்க வைத்த அந்த அம்மையாரின் தோற்றத்தை மனசில் மறைத்துக்கொண்டு, புன்னகையுடன் வணக்கம் செலுத்தினான்.

''ஒரு நிமிஷம். வந்துர்றேன்'' என்று அம்மையார் போன பின், பேராசிரியர் வீரபாண்டி மீசையை முறுக்கி விட்டு, அவனைப் பற்றி மேலும் விவரங்களைக் கேட்டுக்கொண்டார்.

''உங்க புத்தகம் டெக்ஸ்ட் புக்கா பிரிஸ்கிரைப் பண்ணனும்னு சொல்றீங்களே. இதுல இன்ட்ரஸ்ட் வர்றதுக்கு என்ன காரணம்னு தெரிஞ்சுக்கலாமா?''

ஆசிரியர் (நிருபரிடம்): எவ்வளவு முக்கியமான கிசுகிசுவாக இருந்தாலும் பேப்பரிலே எழுதிக் கொண்டுவந்து தாய்யா! இது மாதிரி காதில் வந்து கிசு கிசுன்னு சொன்னால் எப்படி?

—கீழை அ. கதிர்வேல்



''எனக்குப் பெருமையா இருக்கும்கிற காரணம் தான்...''

''புரபசர் நச்சினார்க்கினியன் என்ன சொன்னாரு?''

அவர் சொன்னதைச் சொன்னான்.

''அவர் அப்படித்தான் சொல்லுவாரு. மனசுல இருக்கிறதை எதையும் வெளிப்படையாச் சொல்ல மாட்டாரு. இந்த அஞ்சு வருஷமா வெச்ச புத்தகங்களைக் கேட்டா ஆச்சரியப்படுவீங்க. அதைப் படிச்சவனும் உருப்பட மாட்டான். தமிழும் உருப்படாது. சில பேருடைய புத்தகங்கள் சிறப்பாகத்தான் இருக்கும். அதெல்லாம் ஒரு புஷ் இல்லாம வராது. அப்படியே வந்தாலும் எந்தப் பையனும் படிக்கிறதில்லே. எனக்குத் தெரிஞ்ச இன்னொரு சுயாட்சிக் கல்லூரிலே, ஒரு எம்.எல்.ஏ வந்து மெரட்டி ஒரு புத்தகத்தை வெச்சுட்டுப் போனாரு....''

அவனிடம் மௌனம் குடிகொண்டு விட்டது.

மதுரம் அம்மையார், அதற்குள் கை கால் முகம் கழுவிப் புடவை மாற்றிக் கொண்டு ஒரு தட்டில் மிக்சர், நேந்திரம் வறுவல் என்று ஒரு குவியலும் காப்பியும் கொண்டு வந்து டீப்பாயின்மேல் வைத்தார்.

''உங்க கதைகள்னா, உடனே படிச்சிருவேன். உங்களைப் பாக்கணும்னு அப்பப்ப விருப்பப்படுவேன். ஆனா வேலைகள் விடறதில்லே. நீங்களே வந்தது ரொம்ப சந்தோஷமா இருக்கு. மத்தியானம் சாப்பிட்டுட்டுத்தான் போகணும்'' என்று அன்பாய், இங்கிதமான குரலில் வற்புறுத்தினார்.

''ஆமா சார். நீங்க இருந்து சாப்பிட்டுட்டுத்தான் போகணும்'' என்று வீரபாண்டியும் அழுத்தமாய்ச் சொன்னார்.

''இன்னொரு நாளைக்கு வர்றேன் சார். அடுத்து இன்னொரு உறுப்பினரான நல்லயனைப் பார்க்கணும்''

''அய்யோ, நீங்க விவரம் தெரியாதவங்களா இருக்கீங்களே? இதென்ன பெரிய அஸ்வ'மத யாகமா? கமிட்டி, தலைவர், உறுப்பினர்கள்னு சொல்வது வெறும் கண் துடைப்பு. அவன்களுக்கு வேண்டிய ஆளுக்குத்தான் காரியம் பண்ணிக் குடுப்பாங்க. என் மாதிரி உறுப்பினர்கள் எதுவும் பேச முடியாது. பேசினாலும் நடக்காது. எனக்கும் காலேஜ் கமிட்டிக்கும் எண்ணிக்கும் ரகளை தான். அதனாலே வேலை போகும்னு அஞ்சு எருமைகளை வாங்கி விட்டிருக்கேன். பால் வித்தே என் சம்பளத்தைச் சம்பாதிச்சிடலாம். வேலை போனா இன்னும் ரெண்டு வாங்கி விட்டாப் போச்சு. இத்தனை வருஷம் வாத்தியார் தொழில்ல இருந்ததினால, எருமைகளோட பழகறது கஷ்டமில்லே...''

அந்தப் பலகாரங்களைச் சிறிதளவு சாப்பிட்டு விட்டுக் காப்பி குடித்தான்.

தெருவில் வந்த பின் அவனுக்கு அந்த எருமைகளே ஞாபகத்தில் அழுந்திக்கொண்டிருந்தன!

இன்னொரு பேராசிரியரையும் பார்த்து விட முடிவு செய்தான்.



''கொஞ்சம் வெயிட் பண்ணுங்க... எங்க சரக்கு மாஸ்டர் போராடிக்கிட்டிருக்கிறார்!''

''சம்பள உயர்வு கேட்டா?''

''ஊஹூம்! தோசைக் கல்லிலிருந்து தோசையை எடுக்க!''

—உ. ராஜாஜி

அவர் நகரின் தொழிற் பகுதியில் குடியிருந்தார். எதிரே சினிமாத் தியேட்டர். சில்க்கின் இடைப் பகுதி வீட்டிலிருந்தபடியே தெரிந்தது.

''உங்க எழுத்துக்கள் எனக்கு ரொம்பப் பிடிக்கும். போன வருஷமே உங்க புஸ்தகம் ஒண்ணைப் பலமா ரெகமண்ட் பண்ணினேன். மீட்டிங்ல எல்லோரும் எதுக்கு வம்புன்னு பிரசித்தமான எழுத்தாளரது நாவலே போதும்னு சொல்லிட்டாங்க... இந்த வருஷம் வேறு மாதிரித்தான் ஆகணும்.''

''இந்த வருஷமாவது நீங்க ரெகமண்ட் பண்ணுங்க சார்'' என்றான் அவன்.

''நான் பண்றேன். ஆனா எடுபடாது. ஏன்னா அடுத்த வருஷம் தலைவர் ரிடையராகறார். போறதுக்குள்ளே பணம் சம்பாதிச்சுட்டுப் போகலாம்னுதான் அவர் விரும்புவாரு. அதைச் செயல்படுத்திட்டும் இருக்காரு. புத்தகம் போட்டவர் கிட்ட முப்பது பர்சண்ட் கமிஷன் கேப்பாரு. உங்களால குடுக்க முடியாது. பேசாம வேறு கல்லூரில முயற்சி பண்ணுங்க....''

''ஆனா அவர் பேசின விதத்திலே இருந்து எனக்கு நல்லது பண்ணுவார்னுதான் தெரிஞ்சது....''

''அதெல்லாம் சும்மா. வேஷம். கல்லூரிகளெல்லாம் தொழிற்சாலை மாதிரி ஆயிட்டு வருது. எல்லோரும் மெகானிகலா நடந்துக்கிறாங்க. கல்வி நிலையங்கள் கோவிலாகணும்னு சொல்லுவாங்க. கோவில் போச்சு. உள்ளே இருந்த சரஸ்வதியும் ஓடிப் போயிட்டா. 'பேசாம உங்கபாட்டுக்கு எழுதிட்டிருங்க. இந்த மாதிரி கௌரவம் எல்லாம் தானாக வரணும். நாமாக அலையக் கூடாது. அது உங்களுக்கும் கேவலம், தமிழுக்கும் கேவலம்.'' என்று முடிவாய்ச் சொல்லி அவனைப் பார்த்தார்.

அவன் எழுந்து விடை பெற்றுக்கொண்டான்.

சினிமாத் தியேட்டரில் அடுத்த காட்சிக்கு அலைமோதிக் கொண்டிருந்தார்கள். அவன் மனசுக்குள் இருந்த சரஸ்வதியை முன் விட்டு இந்த முயற்சியை அந்த விநாடியே கைவிட்டு, பஸ் ஸ்டாண்டுக்கு நடந்தான்.


"நான் விற்கும் எல்லா
டிவிகளுமே நல்லவை.
ஆனால் அவற்றில் ஒன்றுமட்டும்
மற்றதைவிடச் சிறந்தது!"

இவ்வாறு கூறுகிறார் அடையாரிலுள்ள 'எல்ப்ராஸ்' பங்குதாரரான அனுபவமிகுந்த திரு. நாராயணன். "டிவிகளை சிபாரிசு செய்வதால் சில சங்கடங்கள் ஏற்படுவதுண்டு. அவ்வாறு சிபாரிசு செய்யப்படும் டிவி, நம்பிக்கைகுரியதாக இருக்கவேண்டும்," என மேலும் விவரிக்கிறார்.

"சில கஸ்டமர்கள் டிவியின் அழகான தோற்றத்தை மட்டும் கண்டு மயங்கி வாங்குகின்றனர். ஆதலால் நமக்கு எதற்கு இந்த தொல்லை? ஆனால் கண்டிப்பான, எப்பொழுதும் சிறந்ததையே விரும்பும் கஸ்டமர் வற்புறுத்திக் கேட்டால் மட்டும் என் நம்பிக்கைக்குரிய சாலிடெர் டிவியை சிபாரிசு செய்வேன். ஏனென்றால் என்னை நம்பும் அவருக்கு, நான் நம்பும் டிவியை அளிப்பதுதானே சரியான முறை?"

அனுபவம் பேசுகிறது, ஆதாரபூர்வமாக! இவையெல்லாம் சாலிடெரின் சிறந்த செயல் திறனுக்கான அத்தாட்சி. அடிக்கடி தொல்லைத் தராத ஒரே டிவி சாலிடெர் என்பது உறுதியான உண்மை.


மேலும் சாலிடெரின் பழுதுபார்க்கும் சர்வீஸ் என்ஜினியர்கள் எப்பொழுதும், எங்கிலும் உங்களுக்காகவே சேவை செய்யக் காத்திருக்கின்றனர். அதற்கும் மேலாக சாலிடெரின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையினர் (R & D) நீங்கள் எதிர்பார்க்கும் வகையில், சிறந்ததை மேலும் சிறப்புற்றதாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். எப்பொழுதும் உங்களுக்காகவே!

இத்தகைய பாரம்பரியத்தில் உருவானதே புதிய TS62E — சாலிடெரின் திறனுக்கும் தரத்திற்கும் மற்றுமோர் எடுத்துக்காட்டு.

- 14 வாட் சக்தி வாய்ந்த ஆம்ப்ளிஃபையர்.
- 20 செ.மீ. ஃபெரக்ஸ்டியூர் டியூயல் கோன்ஸ்பீக்கர்.
- ரெக்கார்ட் பிளேயர், டேப் ரெக்கார்டர் போன்றவற்றை இணைக்க 'பிக்அப்' அமைப்பு.
- தேவையில்லா ஒலியை நீக்க ஆட்டோமேடிக் சாதனம்.
- விஷன் இன்டர்மீடியட் ஃப்ரீக்குவன்ஸியில் (V.I.F) கண்டுள்ள முன்னேற்றத் திறனால் ஈடு இணையற்ற படத் தோற்றம்.
- இரண்டு ஷட்டர்கள் கொண்ட லாமினேட்ட் காபினெட்.
- மழைக் காலங்களில் உங்கள் டிவியைப் பாதுகாக்க கையாளப்பட்டுள்ள நவீன முறை.

மேலும் விவரமறிய இன்றே உங்களருகாமையிலுள்ள சாலிடெர் டீலரை அணுகுங்கள்.

ரூ. 325 மிச்சம்
உள்ளடங்கிய வோல்டேஜ் ஸ்டெபிலைஸர்



சாலிடெர்

-தொல்லையில்லாத் தொலைக்காட்சி

HE 763B

போரூர் நின்ற பேரருளாளன்

ஆனந்தி

ஆறுமுகப் பெருமான் சூரபத்மன் முதலிய அரக்கர்களுடன் சமர் செய்தபோது மாயாவிகளான அசுரர்கள் திருப்பரங்குன்றத்திலே மண்ணில் நின்று போர் புரிந்தார்கள். திருப்போரூரில் விண்ணில் அவர்களோடு யுத்தம் செய்தார் ஆறுமுகன். அதனால் சமரபுரி என்றும் போரூர் என்றும் பெயர் வந்தது.

அகத்திய முனிவர் முருகப்பெருமானிடம் ஞானோபதேசம் பெற்ற தலம். சர்வ பாப விமோசன தலம். திருமகள் தன் சாபம் நீங்கித் திருமாலை அடைந்த தலம். கண்ணுவ மகரிஷி தவம் செய்த குன்றும் அருகில் இருக்கிறது. வேம்படி விநாயகர் பெருமான் அடியார்களுக்கு வரம் தரும் தலம்.

சென்னைக்கு அருகிலேயே உள்ள இந்த ஊருக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. அருள்மிகு கந்தசுவாமியின் கோவில் அருகே ஒரு சிறு குன்று இருக்கிறது. இதற்குப் பிரணவ மலை என்று பெயர். வழக்கமாகக் குன்றின்மீது முருகன் கோவிலும், அடிவாரத்தில் சிவாலயமும் இருக்கும். இங்கே பிரணவ மலை மீது ஈசுவரன் இருப்பதால் கைலாசத்துக்குச் சமமான புனிதத் தன்மை உடையது.

இந்த ஆலயம் கட்டப்பட்டுச் சுமார் முந்நூறு ஆண்டுகள் ஆகின்றன.

மதுரை மாநகரில் பிறந்த ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் அங்கயற்கண்ணியின் தண்ணருட் பார்வையில் திளைத்தவர். தேவியின் ஆணைப்படி திருப்போரூர் வந்து சேர்ந்தார். அங்கே ஓர் ஆலயம் சிதைந்து உருத் தெரியாமலிருந்தது கண்டு திகைத்து நின்றார். அப்போது ஒரு வயது முதிர்ந்த கிழவர் வந்து எதிரே நிலத்தைச் சுட்டிக் காட்டினார். சுவாமிகளின் கண்ணெதிரே கோவில் அமைப்பைக் காட்டும் வரைபடம் தெரிந்தது. கருவறை காணப்பட்ட இடத்தில் செந்நிற ஒளி வீசவே சுவாமிகள் அங்கே தமது கையை வைத்தார். அங்கிருந்து வள்ளி தேவசேனா சமேத கந்தசுவாமிப் பெருமான் மேலே எழுந்தார். இந்த மூர்த்தியைச் சுற்றி ஆலயம் அமைத்தார் ஸ்ரீ சிதம்பர சுவாமிகள். ஆறு தடவைகள் கட்டப்பட்டு ஜீரணமாகிவிட்ட இந்தக் கோவிலைக் கல் திருப்பணியாகக் கட்டினார். முருகப் பெருமானின் திவ்ய அக்ஷரங்களைக் கொண்ட அனுக்கிரக சக்கரத்தையும்செய்து பிரதிஷ்டை செய்தார்.



○ வில்லேந்திய வேலன்

கோவில் கோபுரம் ஓலைகளால்மூடப்பட்டுக் காட்சி தருகிறது. திருப்பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பது பார்த்த உடனேயே தெரிகிறது.

பாலகுக ஈசன் மடியில் அமர்ந்து முருகப் பெருமான் உபதேசம் செய்த கோலத்தைக் காணும் ஆவல் உந்த பரபரப்போடு அர்ச்சனைக்குரிய தட்டுக்களை வாங்கிக் கொண்டு விரைகிறோம். எதிரே தெள்ளத் தெளிந்த நீல நிற நீர் மெல்லிய அலைகளுடன் காட்சியளிக்கிறது. இத்தனை வறட்சியிலும் திருக்குளத்தில் தீர்த்தம் இருப்பதை எண்ணி வியக்கிறோம். கோபுர வாயிலைக் கடந்ததும் இரும்புத் தூண்களால் நிலை நிறுத்தப்பட்ட மண்டபம். இதுபோன்ற திருப்பணியை எந்தக் கோவிலிலும் கண்டதில்லை.

ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் இயற்றிய தாலாட்டு மிக எளிய சொற்களும் அரிய கருத்துக்களும் கொண்டது. இந்தத் தாலாட்டுக்கு அபிநயம் செய்து பார்த்திருக்கிறேன். வாத்ஸல்ய ரசத்தைப் பிழிந்து தரும் தாலாட்டு இது.

சமரபுரித் தேவோ தணிகைமலைத் தேனோ!
அமரும் பழனி மலைக்கு ஆனைமணி விளக்கோ!

என்று பாடிக்கொண்டே வலம் வந்து சிதம்பர சுவாமிகள் சந்நிதிக்கு எதிரே வருகிறோம். அதையடுத்து மையத்தில் வள்ளிதெய்வயானையுடன் உற்சவமூர்த்தியான குமரன் எழுந்

தருளியிருக்கிறான். திருப்பணி நடந்து கொண்டிருப்பதால் இங்கேயே அர்ச்சனை செய்து பிரசாதம் வழங்குகிறார் அர்ச்சகர்.

இன்னும் உபதேசக் காட்சியைப் பார்க்கவில்லை. வலதுபுறத்தில் நடராஜப் பெருமான் விரித்த செஞ்சடையாட, மாணிக்க வாசகர் பாட, சிவகாம சுந்தரி பார்க்கத் திவ்ய தரிசனம் தருகிறார்.

உள் பிராகாரத்துக்குள் சென்று மூலவரைத் தரிசித்து அகமகிழ்கிறோம். ஒரு தலை சிறந்த ஞானியால் புதையல் போலக் கண்டெடுக்கப்பட்ட மூர்த்தி இவர்.

செங்கதிர் வேலன் சிவனருள் பாலன்
மங்கை வள்ளி மணாளன்
பங்கயத் தாளன் தினை தயாளன்
பொன் மயில் ஏறி வருவான்

என்ற பாடல் நினைவுக்கு வருகிறது.



குமாரகுருபரன்

பிரகாரத்தை வலம் வரும்போது நெஞ்சம் விம்முகிறது. இதோ பஞ்சலோக விக்ரகங்கள். இதோ இருக்கிறார் தேடி வந்த சுவாமிநாதன்.

பிரம னறியாப் பிரணவத்தின் அர்த்தம்
அரனார் செவி குளிர அன்றுரைத்த சற்
குருவோ!

சற்குரு நாதனின் இளமுறுவல் தவழ் வதனம் ஈசனின் முகத்தை நேரே நோக்கியிருக்கிறது. தந்தைக்கு உபதேசம் செய்கிறோமே என்று எண்ணாமல் கம்பீரமாகப் பீடத்தில் அமர்ந்திருக்கிறான் பால சுப்பிரமணியன். வலது கரத்தில் சின்முத்திரை. மேல் நோக்கிய இரு கரங்களிலும் ருத்ராக்ஷ மாலையும் கமண்டலமும் தரித்திருக்கிறான். இது பிரும்மதேவருடைய கோலம் அல்லவா? பிரணவ மந்திரத்தின் பொருளை அறியாத பிரமனுக்குப் படைத்தல் தொழில் செய்ய அருகதை இல்லை யென்று உலகமெலாம் ஈன்ற ஒருத்தியின் பாலகன் அவருடைய ருத்ராட்ச மாலையையும் கமண்டலத்தையும் பிடுங்கிக் கொண்டு தானே படைத்தல் தொழிலைச் செய்யத் தொடங்கினானே! அதைக் காட்டும் கோலம்.

இடது காலை மடித்து வலது பாதம் தெரிய அவன் காலைத் தொங்கவிட்டு அமர்ந்திருக்கும் அழகு உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. சிவனார் மானும் மழுவும் ஏந்தி முன் இரண்டு கரங்களால் வாய் புதைத்து உபதேசம் கேட்கும் பாவம் இருக்கிறதே அற்புதக் கோலம்தான். வைத்தகண் வாங்காமல் பார்த்து மகிழ்கிறோம்.


இருந்தாலும் அருகிலுள்ள மற்ற அழகு வடிவங்கள் நமது கருத்தைக் கவருகின்றன. ஸ்ரீ முத்துக் குமாரசுவாமி போருக்குக் கிளம்புகிறார். மயில் வாகனத்தின் மீது ஒரு காலை ஊன்றி வில்லேந்திய வேலனாகக் காட்சி தருகிறார்! மயிலுக்கு எத்தனை நீண்ட தோகை! கழுத்தைச் சற்றுத் திருப்பி முறுக்கிய நாகத்துடன் தண்டை யணிந்து கம்பீரமாக நிற்கிறது மயில்.

பிறகு ஆறுமுகப் பெருமானின் சந்நிதி முன் நிற்கிறோம்.

ஆறிரண்டு தோளானே! ஆறுமுகத்தானே!
தேறு மறைகொஞ்சுஞ் சிறு சதங்கைத்
தாளானே!

என்று வியக்கிறோம். இங்கே ஒரு சுரங்கப் பாதை இருப்பதாகவும் அதன் வழியே

கந்தசுவாமி



சென்றால் பிரணவ மலை உச்சியை அடையலாம் என்றும் கூறுகிறார்கள்.

தவ முனிவரான சிதம்பர சுவாமிகள் பிரதிஷ்டை செய்த சக்கரமும் இங்கே இருக்கிறது.

காஞ்சி முனிவரான பெரியவர்கள் இந்தக் கோவிலுக்கு வந்தபோது இந்தச் சக்கரத்தின் தீட்சண்யம் அதிகமாக இருப்பதை உணர்ந்தார். காலத்துக்கு ஏற்றவாறும் மக்கள் மனப்பான்மைக்கு ஏற்றவாறும் அனுக்கிரகம் செய்யும் வகையில் இந்தச் சக்கரத்தைத் தமது புனிதக் கரங்களால் ஸ்பரிசித்து அருள் பாலித்தார். இதைக் கேட்கும்போது மெய் சிலிர்க்கிறது.

உள் பிராகாரத்தை வலம் செய்த பிறகு மறுபடியும் ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் சந்நிதியில் வணங்கிவிட்டு வெளியே வந்தால் சர்வ

அருள்வாக்கு

நேரடியாக நமக்கே நல்லது செய்து கொள்ள வேண்டும் என்று பணத்தையும், இந்திரிய சுகங்களையும் தேடிப் போனால் உள் நிறைவு உண்டாக மாட்டேன் என்கிறது. மாறாக காரியங்கள் நிம்மதியின்மையிலும், துக்கத்திலுமே கொண்டு விடுகின்றன. கண்ணாடியில் நமது முகத்தைப் பார்க்கிறோம். அதன் நெற்றியில் பொட்டில்லை என்று தெரிகிறது. உடனே கண்ணாடிக்குச் சாந்து இட்டால் என்ன ஆகும்? கண்ணாடி கறுப்பாகும். பிம்பத்துக்குப் பொட்டு வைப்பதென்றால் பிம்பத்தின் மூலமான மனிதனுக்குத்தான் பொட்டு வைத்துக் கொள்ள வேண்டும். மனசு என்கிற மாயக் கண் ணடியில் பிரதிபலிக்கிற பரமாத்ம பிம்பத்தையே 'நான்' என்று நினைக்கிறோம். அந்தப் பிம்பத்துக்கு அழகு செய்வது என்றால் உண்மையில் பரமாத்மாவுக்கு அழகு செய்ய வேண்டும். பரமாத்ம ஸ்வரூபமான லோகத்துக்கெல்லாம் செய்கிற சேவை இதனால்தான் நிறைவைத் தருகிறது. இதே மாதிரிதான் அந்தப் பரமாத்மாவைப் பூஜிப்பதும். தனக்கு என்று வைத்துக் கொள்கிற கரியப் பொட்டு இப்போதுதான் அலங்காரத் திலகமாகிறது. அம்பாளுக்குச் செய்கிற அலங்காரம்தான் நமக்கு அழகு. நமக்கே செய்துகொள்கிற அலங்காரம் அகங்காரத்துக்குத்தான் வழி காட்டும்.

- ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராசார்ய சுவாமிகள்



வாத்ய மண்டபத்தில் நிற்கிறோம். இங்கே ஒரு காலத்தில் சகல விதமான இசைக் கருவிகளும் இருந்தனவாம்.

சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னால் வைகாசி பௌர்ணமி அன்று முக்தி பெற்ற ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் பேரின்ப ஞானத்தோடு தமிழ் ஞானமும் பெற்ற மகான். திருப்போரூர் சந்நிதி முறை என்ற நூலை இயற்றி முருகப் பெருமானுக்கு அணிவித்தவர். ''உலக மக்களின் துன்பங்கள் நீங்க வேண்டுமென்று கந்தவேளிடம் முறையீடு செய்தார். அதுவே ஒரு அருள் நூலாக வடிவெடுத்தது. வேத சாரம், ஆகம விதி, சாத்திர உண்மை, தோத்திர விருப்பம், இவை யெல்லாம் அடங்கிய பாடல்களின் விரிவே சந்நிதி முறை'' என்பதாக ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகளின் வழி வந்து பதினொன்காம் பட்டமாகப் பீடமேற்றிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சிவஞான சுவாமிகள் எடுத்துக் கூறினார். சென்னை ராயப்பேட்டை ஹனுமான் கோவிலை அடுத்துள்ள மடத்தில் சுவாமிகளைத் தரிசனம் செய்து வணங்கி முருகப் பெருமானின் திருவிளையாடல்களையும், ஸ்ரீ சிதம்பர சுவாமிகளின் வரலாற்றையும் வெள்ளி குத்துவிளக்கு நேரில் கேட்டறிந்தது ஓர் அரிய அனுபவம்.

திருப்போரூர்த் திருக்கோயிலைப் புதுப்பித்துத் திருக்குட நீராட்டு விழாவும் விரிவாக நடத்தத் திட்டமிட்டிருக்கிறார் சுவாமிகள். திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு, இந்து அறநிலைய ஆட்சித் துறையின் ஒத்துழைப்புடன் கோபுரங்கள், விமானங்கள் இவற்றைப் பழுது பார்க்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. திருப்பணிகள் செய்ய சுமார் 10 லட்சம் ரூபாய் செலவாகுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

மகா லக்ஷ்மித் தாயாருக்கு உகந்த க்ஷேத்திரம் திருப்போரூர். மகாவிஷ்ணு சாப விமோசனத்துக்காக சிவ முனிவர் என்ற பெயரோடு தவம் செய்து கொண்டிருந்தார். பிரணவ கிரியின் சிகரத்தில் உள்ள மகாலிங்கத்தைப் பூஜித்த உடனே சிவபெருமான் தோன்றி மகா லட்சுமியையும் மகாவிஷ்ணுவையும் சேர்த்து வைத்து வரங்களைக் கொடுத்தார். லக்ஷ்மி தேவியைப் பார்த்து ''உனக்குப் பிரீதிகரமாயிருக்கின்ற சுக்கிரவாரத்தில் பிரணவாமிர்த தீர்த்தத்தில் நீராடி, இவ்வோங்கார ரூபியாகிய ஸ்ரீ சைலத்தை யாவன் பத்திமையோடு பிரதட்சிணம் செய்கிறானோ அவன் பாபரஹிதனாய் ஆயிரம் அசுவமேத யாகங்கள் செய்த பயனை அடைந்து, செல்வம் மிகுந்து அபீஷ்டங்களைப் பெற்றுச் சந்தான விருத்தியுடன் வாழ்ந்திருந்து நமது பதவியையும் அடைவான்'' என்று சிவபெருமான் கூறியருளினார்.

பிரணவ மலையைச் சுற்றி வள்ளையாரோடை என்ற தெளிந்த நீரோடை பாதையமைத்துக் கொண்டிருக்கிறது. இது திருக்குளத்தில் சேர்வதால் அதில் நீர் வற்றுவதில்லை.

திருப்போரூர் ஒரு பிரார்த்தனை தலம். ஆறு படை வீடுகளையும் தரிசித்த புண்ணியத்தை இங்கேயே அடைந்து விடாலம்.

பரிசு பெற்றவர் வரிசை

இவ்வாண்டு அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசுபெற்ற ஜெரா எங்கள் கோரிக்கைக்கு இணங்கித் தம்மைப் பற்றிப் பேசுகிறார்:

“ஜெரா”ங்கிற பேர்ல அப்பப்ப எழுதிக்கிட்டிருக்கிற கோவி. ஜெயராமன் 28 வருஷங்களுக்கு முன்னால மேட்டூர் அணையில ஜனிச்சாரு.

கடந்த அஞ்சு வருஷமா மேட்டூர் கெமிக்கல்ஸ், ஆர். ஸி. பிளாண்ட்டிலே இளநிலைப் பொறியாளரா ரொம்ப சின்ஸியரா வேலை பார்த்துக்கிட்டு இருக்காரு.

எழுதறதைத் தவிர, கவிதையாக்கம், நாடகப் படைப்பு, மேடை நடிப்பு இப்படிப் பல ஆனந்த அவஸ்தைகளிலே அடிக்கடி இலயிச்சுப் போயிடுவாரு.

இவரு பங்கு எடுத்திக்கிட்டு இருக்கிற “மேட்டூர் ஃபைன் ஆர்ட்ஸ்” நாடகக் குழு இப்பக்கூடப் பள்ளிப்பாளையம் பேப்பர் மில்லிலே நடந்த 1983ம் வருஷ மாநில அளவிலான நாடகப் போட்டியில சிறந்த நாடகத்துக்கான பரிசை வாங்கி, கூடவே இவரையும் “சிறந்த குணச் சித்திர நடிகரா” அடையாளம் காட்டி இருக்கு!

1980ம் வருஷ அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி மூலமா இலக்கிய வாசல்லே வந்து நின்ன இவரை ‘கல்கி’தான் அன்போட அரவணைச்சு எல்லாருக்கும் அறிமுகப்படுத்திச்சு. இப்பிடி ஒரு கௌரவம் வந்து சேர காரணமாயிருந்த ‘கல்கி’க்கும் வாசகர்களுக்கும் தன்னோட இதயபூர்வமான நன்றியை எப்பவும் சொல்லிக்கிட்டே இருப்பாரு.

● ஐந்நூறு ரூபாய் இரண்டாம் பரிசு பெற்ற திரு கல்யாண வெங்கடேசன் சந்தோஷச் செய்தி எட்டியதும் எழுதிய கடிதம்:

....கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றுவிட வேண்டும் என்று கடந்த பத்து வருடங்களாக முயற்சி செய்துகொண்டிருந்தேன் என்று சொன்னால் அது மிகையாகாது. ‘கல்கி’யில் கதையையும் என் பெயரையும் படித்தவுடன் கண்கள்பனித்தன. எனது மகிழ்ச்சியை வெளியிட வார்த்தைகள் இல்லை. 1980ம் ஆண்டு போட்டியில் எனது கதை பிரசுரம் பெறும் வாய்ப்பை மட்டுமே பெற்றது. இப்பொழுதும் மனம் பதைத்துக் கொண்டிருந்தது. ஆயிரம் ஆயிரமாய் வருகின்ற கதைகளிலே தேர்ந்தெடுப்பது எவ்வளவு கடினம் என்பது எனக்குத் தெரியும். ‘கல்கி’யின் நடுநிலைமைக்கும் கவனமான பரிசீலனைக்கும் சான்று எனக்குக் கிடைத்த பரிசு. ஏனென்றால் நான் பிரபலமான எழுத்தாளனும் அல்ல. கல்கியில் யாருக்கும் தெரிந்தவனும் அல்ல.

இராமநாதபுரத்தில் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியரின் புதல்வரான வெங்கடேசன் எம். ஆர். எப். நிறுவனத்தில் கணக்கு அதிகாரி. இவருக்கு மணமாகி மூன்று மகன்களும் இரண்டு பெண்களும் உள்ளனர்.

1978ம் ஆண்டு குங்குமத்தில் வெளியான இவரது சிறுகதை இலக்கியச் சிந்தனையின் பரிசைப் பெற்றிருக்கிறது.

● மூன்றும் பரிசு ரூ. 250 பெற்ற அதிர்ஷ்டசாலி திரு சஞ்சீவன். இவரது உண்மைப் பெயர் மோகன். அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் மூன்றுவது படைப்பில் இவருக்குப் பரிசு கிட்டியது.

தபால் தந்தி துறையில் சில காலம் மோகன் பணியாற்றிவிட்டுத் தற்சமயம் சுங்க இலாகாவில் இன்ஸ்பெக்டராகப் பணி புரிகிறார். ரசாயனத்தில் பி.எஸ்ஸி பட்டமும் கம்ப்யூட்டர் புரோகிராமிங்கில் ஒருவருஷ அனுபவமும் உண்டு. கோவையில் ஆல்ஃபா அறிவியல் சங்கத்தைத் தோற்றுவித்தவர். விஞ்ஞானச் சிறுகதைகளைப் படைத்துத் தருவதில் ஆர்வம் கொண்டிருக்கிறார் திரு மோகன்.

● ‘சுமதி’ என்ற புனைபெயரில் ஒளிந்திருக்கும் கே. ஜெயலக்ஷ்மி 1954ம் ஆண்டிலிருந்து சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம் என்று எழுத்துத் துறையில் முன்னேறியவர். ‘மகேசுவரி’ என்ற புனைபெயரிலும் பல கதைகள் எழுதியுள்ளார்! இவரது முதல் படைப்பே ‘கல்கி’யில்தான் வெளி வந்தது என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறார்.

ஐந்நூறுக்கு மேற்பட்ட சிறு கதைகள், பத்து நாவல்கள், பதினெட்டு சிறுவர் நூல்கள் இவருக்குப் புகழைத் தேடித் தந்துள்ளன. இவரது ‘மணக்கும் மனம்’ என்ற நாவல் தமிழக அரசின் பரிசைப் பெற்றிருக்கிறது. வானொலியில் இவரது நூறுக்கு மேற்பட்ட நாடகங்கள் ஒலிபரப்பாகியுள்ளன. சங்கீத நாடக சங்கம் நடத்திய நாடகப் போட்டியில் ‘பெண்ணுரிமை’ என்ற இவரது நாடகம் பரிசினைப் பெற்றுள்ளது.

-பி. எஸ். மணி


○ ஜெயராமன் (ஜெரா)



○ கல்யாண வெங்கடேசன்



○ மோகன் (சஞ்சீவன்)



○ கே. ஜயலக்ஷ்மி (சுமதி)



மாறுதல் வரும்

சுஜாதா

வாசல்

''இன்று மாமா வரப் போகிறார்'' என்ற நினைவே அந்த வீட்டில் அனைவருக்கும் ஒரு பரபரப்பை ஏற்படுத்தும் எனில் வந்துவிட்ட பிறகு கேட்கவா வேண்டும்? ஆட்டோ டிரைவரிடம் சண்டையில் ஆரம்பித்து, சரியாக ஓடும் கடிகாரத்தை ரிப்பேர் செய்து, குழந்தைகளுக்கு ஓசியில் தாம் பெற்று வந்தனவற்றைப் பரிசுகளாக அளித்து, ஸ்கூட்டர் அதிக மைலேஜ் தர கார்புரேட்டரை ஒரு கை பார்த்து, தங்கையின் சமையலில் ஒரு வெட்டு வெட்டி, மருமானின் காதல் பிரச்னைக்குக் கை கொடுத்து... சுருங்கச் சொன்னால் மாமா ஒரு அலாதியான கேரக்டர். ஒரு நாள் தங்கினாலும் அந்த நாளை மறக்க முடியாத தினமாக்கி விடுவார். மாமா குழந்தைகளுக்குக் காட்டப் போகும் லேட்டஸ்ட் வித்தை செத்துப்போன சவைப் பிழைக்க வைப்பது!.....இனி,

பகுதி-2

மாமா: நிஜமாடா. எனக்கு ஒரு சித்தர் சொல்லிக் கொடுத்தார். நானு, ஒரு ஈ புடிச்சு வை. மத்தியானம் காட்டறேன். என்ன ஜானகி, மாப்பிளே எப்படி இருக்கார்? யோகாசனம் எல்லாம் பண்ணச் சொல்லாதே. எசகேடா மாட்டிண்டுடுத்துன்னு அப்றம் கஷ்டம். ரவி, நீ என்ன பண்றே. பொடி நடையாப் போய் ஒரு பொட்டலம் தங்க பஸ்பம் பொகையிலே வாங்கிண்டு வந்துரு. (ரவி போன பின் தங்கசாமி வருவதைப் பார்த்து) என்ன முனுசாமி, சௌக்கியமா?

தங்கசாமி: அய்யா, தங்கசாமிங்க நானு.

மாமா: ஏதோ ஒரு சாமி. சௌக்கியமா இருந்தாச் சரி. (ஓரத்திலுள்ள மெஷினைக் காட்டி) இது என்ன, தையல் மிஷினா? புதுசா வாங்கினயா? என்ன விலே? நம்ம ஹரிஹரனோட ஷட்டகர் மிலிட்டரி கான்டீன்ல சீப்பாக் கிடைக்கும்னு தையல் மிஷின் வாங்கிட்டு வந்தார். அது தோல் தைக்கறதாம்! இது எம்ப்ராய்டரி போடுமோ?

அம்மா: அதெல்லாம் இல்லே. இன்ஸ்டால்மென்ட்ல வாங்கினது.

மாமா: சாயங்காலத்துக்குள்ள எம்ப்ராய்டரி போடற மாதிரி மாத்திக் குடுத்துடறேன். (அதை வாஞ்சையுடன் பார்க்கிறார். சட்டென கடிகாரத்தைக் காட்டி வியப்புடன்) இது என்ன, அலாரம் கடிகாரமா? இதுவும் ஆசனம் பண்றதா?

அம்மா: ஆமாம். அவர்தான் வாங்கினார். தலே கீழா வெச்சாத்தான் ஓடறது.

மாமா: ரிப்பேர் பண்ணிட்டா போறது! வாசல்ல ஸ்கூட்டர் பாத்தேனே, யாருது?

அம்மா: இவர்தான் லோன் வாங்கி வாங்கியிருக்கார்.

மாமா: என்னடா கொடுக்கறது?

ரவி: இருபத்தெட்டு கிலோ மீட்டர் மாமா.

மாமா: போறாதே. ஜெட்ட அட்ஜஸ்ட் பண்ணணும். அதையும் பண்ணிக் கொடுத்துர்றேன். ஜானகி, இன்னிக்கு எனக்கு ஏதும் ஸ்பெஷலாப் பண்ண வேண்டாம். பாகக்கா பிட்லேயும் கத்தரிக்கா பொரிச்ச கூட்டும் பண்ணிரு. அப்புறம் இன்னிக்கு காஞ்சிபுரத்தில ரதோத்சவம். பாயசம் வெச்சுரு. வேறே ஒண்ணும் வேண்டாம். (அலாரம் கடிகாரத்தை ஆராய்கிறார்.

மாமா: குழந்தைகளுக்கு ஒரு டஜன் பென்சில்! என் ப்ரண்ட் பாக்டரி வெச்சிருக்கான்!



பிறகு தன் பெட்டியிலிருந்து பல சாமான்களை எடுக்கிறார்.) ஜானகி, இந்தா உனக்குப் பை. பாத்திரச் சீட்டில இலவசமாக் கொடுத்தான். அப்புறம் குழந்தைகளுக்கு ஒரு டஜன் பென்சில். என் பிரண்ட் பாக்டரி வெச்சிருக்கான். அவன் கிட்ட லவுட்டிண்டு வந்தேன். மாப்பிள்ளைக்கு, திருப்பூர் போயிருந்தேன். பனியன் மலிவாக் கிடைச்சுது. ஆறு பனியன் வாங்கிண்டு வந்தேன். (அப்பா வர) என்ன தேகாப்பியாசம் எல்லாம் ஆச்சா? வேத்து விடவே இல்லையே! ஆசனம் பண்ணீரா, இல்லே, மோட்டு வளையைப் பார்த்துண்டு உட்கார்ந்திருந்தீரா? இந்தாரும் பனியன்.

அப்பா (அதை எடுத்து ஆராய்ந்து): யாருக்கு இது?

மாமா: உமக்குத்தான். ஏன்?

அப்பா: இல்லே, ஆத்தில குழந்தை ஏதும் இல்லையே!

மாமா: பார்த்தாச் சின்னதாத்தான் இருக்கும். இண்டர்லாக்கோல்லியோ, பெரிசாயிடும். கொஞ்ச நாளைக்குப் போட்டுண்டு கழட்டினேள்னு ஜடாயு மாதிரி ரெக்கை முளைச்சுடும், பாருமேன்.

(அப்பாவைப் பிடித்து அவரை வலுக் கட்டாயமாகப் பனியனைப் போட வைக்கிறார்.)

அப்பா: ஓய், மூச்சுத் திணர்றது. விட்டுரும். நான் அப்புறம் சாவகாசமாப் போட்டுக்கறேன்.

மாமா: அது எப்படிப் போறுமப் போய்டும்? சரியா அளவு பார்த்துத்தான் வாங்கியிருக்கேன். (பனியனைப் பலாத்காரம் பண்ண அது முதுகுப் பக்கம் கிழிகிறது. அதை மாமா கவனிக்காமல்) இப்பப் பார்த்தீரா, ஜம்முன்னு இருக்கு.

அப்பா: நாசமாப் போச்சு. முதுகுப் பக்கம் கிழிஞ்சு போச்சு. (திரும்புகிறார்.)

மாமா: பரவாயில்லே. காத்தாட நடமாடலாம். மேலே சொக்காயைப் போட்டுண்டாத் தெரியாது.

(இதனிடையில் நாணு கீழே உட்கார்ந்து கொண்டு மும்முரமாகக் கையைத் தரையில் வீசிக் கொண்டிருக்கிறான்.)

அப்பா: என்னடாது, ஈ ஓட்டிண்டிருக்கே. பள்ளிக்கூடம் போக வேண்டாமா?

மாமா: ஈ ஓட்டல்லே ஓய்! ஈ புடிக்கிறான். நீர் ஆபீஸ் போய்டும். அங்கயும் இதானே?

அப்பா: ஈ புடிக்கிறானா?

நாணு: மாமா ஈயைச் சாகடிச்சுட்டுப் பொழைக்க வைக்கிறேன்னு சொல்லியிருக்கார்.

அப்பா: ஏண்டா, அவருக்குத்தான் புத்தி இல்லேன்னு, உனக்கு எங்கேடா போச்சு! போடா அந்தண்டை. சீ! ஈ புடிக்கிறானாம்சு.

(நாணு, 'அப்புறம் பார்த்துக்கலாம்' என்பது போல் மாமா சைகை செய்கிறார். எல்லாப் பையன்களும் உள்ளே போகிறார்கள்.)

அப்பா: ஓய்... ஒரு நாள் வரீர். இந்தப் பெட்டியைப் பைத்தியமா அடிச்சுட்டுப் போறீரே.



மாமா (பவானியிடம்): இது ஏர்ஸ்பிரிங் ஜாக்கிரதையா வெச்சுக்கோ!

பவானி: அப்பா கல்யாணத்துக்கு ஒத்துக்கவே மாட்டார்!

மாமா: ஏன்?

பவானி: வந்து, அவா முதலியார் நாம ஸ்மார்த்தா இல்லையா மாமா? (புகைப்படங்கள்: ரஞ்ஜோ)

மாமா: குழந்தைகள்னு கலகலப்பா இருக்கணும். வேடிக்கை விளையாட்டுக் காட்டணும். நான் பொய் சொல்றேன்னு நினைச்சுக்காதேயும். நிஜமாவே செத்த ஈயைப் பிழைக்க வைக்கிற மந்திரம் எனக்கும் தெரியும். இன்னும் மனுஷா வரைக்கும் வரலே.

அப்பா: நான் இன்னிக்குச் சீக்கிரமே ஆபீஸ் போறேன். (உள்ளே கண்ணாடி உடையும் சத்தம் கேட்க) கடன்காரா, ஈ புடிக்கறேன்னு என்னத்தை உடைச்சே?

மாமா: . குழந்தைகள்னு அப்படித்தான் இருப்பா.

(அப்பா உள்ளே போகிறார். எல்லோரும் விலகிய பின் மாமா தனியாக இருக்கும்போது அந்த அலாரம் கடிகாரத்தைப் பின் பக்கம் திறந்து அதை அக்கக்காகப் பிரிக்கிறார். உள்ளே யிருந்து பற்பல சாமான்களை எடுத்துப் பரப்புகிறார்.)

பவானி (ஒரு பேனாவுடன் வந்து, சற்றுத் தயங்கி நின்றுவிட்டு): மாமா, வந்து மாமா, இந்தப் பேனாவைத் திறந்து கொடுங்கோ. (அவர் திறந்து கொடுக்கிறார். பவானிக்கு ஆச்சரியம் தாங்கவில்லை) என்ன மாமா இது?

மாமா: என்ன?

பவானி: பேனாவைக் கழுத்தை டைட் பண்ணியே திறந்துட்டேன்?

மாமா: எந்தப் பக்கம் இறந்தால் என்ன? இறந்துடுத்தா இல்லையா?... (கடிகாரத்தில் கவனத்துடன்) உம்?... எஸ்கேப் வீல் தேஞ்சிருக்கு. ஆத்திலே விளக்கெண்ணெய் இருக்கோ பவானி?

பவானி: மாமா, மாமா, வந்து...

(கைவிரல்களைத்திருகிக்கொள்கிறாள். மாமா கடிகாரத்திலிருந்து ஒரு சக்கரத்தைத் திருகி எடுத்து அவளிடம் கொடுக்கிறார்.)

மாமா: இந்தா, இதைப் பத்திரமா வெச்சுக்கோ, கொஞ்ச நாழி. இது மட்டும் தொலைஞ்சுது, கடிகாரம் கோவிந்தா... என்னமோ சொல்ல வந்தியே?

பவானி: எதித்தாத்திலேஒருபையன் மாமா...

மாமா: சொல்லு.

பவானி (வெட்கத்துடன்): அவன் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்றான் மாமா.

மாமா (நிமிராமல்): பண்ணிக்கோயேன். (கடிகாரத்தில் கவனம் செலுத்தி, ஏர் ஸ்பிரிங்கை எடுத்து அவளிடம் கொடுத்து) இது ஏர் ஸ்பிரிங். ஜாக்கிரதையா வெச்சுக்கோ....

பவானி: அப்பா ஒப்புத்துக்கவே மாட்டார்.

மாமா: ஏன்?

பவானி: வந்து, அவா முதலியார். நாம ஸ்மார்த்தா இல்லையா மாமா!

மாமா: அதனால் என்ன?

பவானி (உற்சாகத்துடன்): மாமா, உங்களுக்குப் பரவாயில்லையா மாமா?

மாமா: உனக்குப் பரவாயில்லைன்னாச் சரி. மனுஷாள்ல ரெண்டு ஜாதி வெச்சுக்கோ, பணக்காரன், பிச்சைக்காரன்.

பவானி: அப்பா கிட்ட நீங்க எப்படியாவது சொல்றேளா மாமா?

மாமா: முதல்ல அந்தப் பையனை எங்கிட்ட அனுப்பு. அவனைப் பார்த்துத்தான் தீர்மானிக்கணும்.

பவானி:இப்பவே லெட்டர் அனுப்பிச்சு வரச் சொல்றேன் மாமா.

மாமா: வேண்டாம், சாப்ட்டப்புறம் வரச் சொல்லு. கெடிகாரத்தை ரிப்பேர் பண்ணணும்... அந்த ஏர் ஸ்பிரிங் என்ன ஆச்சு?

''அவர் லாட்டரிச் சீட்டு வாங்கியே லட்சாதிபதியானவர்!''
''அப்படின்னா இதற்கு முன்னாடி ஏழையா இருந்தாரா?''
''இல்லை! கோடீஸ்வரனா இருந்தார்!
—கடலூர் கன்னியப்பன்



(ஆபீஸ் போகும் உடையுடன் அப்பா வருகிறார். 'ஆ' என்று காலில் குத்தியதைப்பொறுக்கிப்பார்க்கிறார்)

அப்பா: என்ன இது?

மாமா: அதான் பிளேட்... கிடைச்சுடுத்தா? இதைத்தான் தேடிண்டிருந்தேன் மாப்ளே. தாங்க்ஸ்.

அப்பா: இது யாராத்துக் கடிகாரம்?

மாமா: எல்லாம் நம்மாத்துதுதான். அலாரம் சரியா அடிக்கலே. தலை கீழா வெச்சாத்தான் ஓடறதுன்னு ரவி சொன்னான்.

அப்பா: ஆரம்பிச்சாச்சா, குரங்கு வேலையை? ஓய், நீர் வரது ஒரு நாளைக்கு. ரிப்பேர் கிப்பேர் எதுவும் பண்ண வேண்டாம். பேசாமத் தலைகீழா ஓடிண்டிருந்ததை ஓடாமப் பண்ணிட்டுப் போயிடுவீர்.

மாமா: பார்க்கலாமா? சாயங்காலத்துக்குள்ள இதைச் சரி பண்ணிட்டேன்னா என்ன தருவீர்?

அப்பா: உம்ம பனியன் ஒண்ணைத் தரேன்... வரட்டுமா ஜானகி! உங்கண்ணாவை அதிகம் அலட்டிக்கச் சொல்லாதே. தூங்கட்டும். பிரயாணக் களைப்பிலே இருப்பார்.

மாமா: மணி மூணுக்கு வந்துருமேன்! என்ன ஆபீஸ்ல வெட்டி முறிக்கிறது!

அப்பா: ரொம்ப வேலை ஓய்.

மாமா: சும்மா அளக்காதேயும். நான் ரிடையர் ஆறவரைக்கும் ஆபீஸ்ல ஒரு மணி நேரத்துக்கு மேல வேலை செஞ்சதில்லை... (திடீரென்று) மாப்ளே, உங்களுக்கு இந்தக் கலப்புத் திருமணத்தைப் பத்தி என்ன அபிப்பிராயம்?

அப்பா: என்ன திடீர்னு?

மாமா: சும்மாக் கேட்டேன்.

அப்பா: நம்மாத்தில அந்தப் பிரச்னை வரப் போறதில்லே. அபிப்பிராயம் என்ன, எலெக்ட்ரிக் குக்கர் அபிப்பிராயம்?

மாமா: நம்மாத்துலேயே வரதுன்னு வெச்சுக்கங்களேன்.

அப்பா: வெட்டிப் போட்டுருவேன். அந்த மாதிரி குழந்தைகள் நமக்கு வேண்டாம்.

மாமா: சரி, ஆபீசுக்குப் போம். (அப்பா போனவுடன்) ரவி, ஒரு கூடை அல்லது முறம் கொண்டுவா. (ரவி வர) இதப்பாரு, இதெல்லாத்தையும் ஒண்ணு விடாமஎடுத்து வையி, நான் என்ன பண்றேன், சாப்டுட்டுப் பூட்டிக் கொடுத்துர்றேன்.

நாணு (உள்ளேயிருந்து கேட்டவுடன் ஓடிவந்து) மாமா, புடிச்சுட்டேன், ஒரு ஈ புடிச்சுட்டேன். (மூடியபடியே காட்டுகிறான்).

மாமா: புடிச்சுட்டியா? காட்டு. (நாணு திறக்க ஈ பறந்து விடுகிறது) டேய்... காட்டுன்னா காட்டிடறதா? பறந்துபோயிடுத்து பாரு. முட்டாள்! இன்னொண்ணு புடிச்சுண்டு வாடா.

அம்மா: டிபன் சாப்பிட வரேளா அண்ணா!

மாமா: சாப்டுட்டாப் போறது. (ரவி கண்ணாடி போடாமல் வர அவனைச் சந்தேகத்துடன் பார்த்து) யாருப்பா புதுசா இருக்கு! வீட்டாளா, வெளியாளா?

ரவி: ரவி மாமா.

மாமா: ஓ ரவியா? ஒரு ஸ்குரு டிரைவர் கொண்டு வாடா. ஸ்கூட்டர்லயா ஆபீஸ் போவே?

ரவி: இல்லே மாமா. பல்லதான்.

மாமா: அப்ப கார்ப்பரேட்டரைக் கழற்றி வை. வாம்மா, டிபன் சாப்பிடலாம்.

(மேடை காலியாகிறது.)

• • •

பவானி (குரல்): வந்தவுடனேயே எத்தனே ரகளே பாருங்கள்! வீடு முழுவதும் கடிகார சாமான்கள். வீடு முழுவதும் ஈ பிடிக்கும் நாணு. வீடு பூராவும் மாமாவோட பாதிப்புத்தான்.

• • •

(நாணு இங்கே அங்கே ஈ பிடிக்கக் கை வீசுகிறுன். கிட்டு இன்னெரு பக்கம் கைவீசி முயற்சி செய்கிறுன். அப்போது ரவி வர...)

நாணு: ரவி, ரவி ஒரு ஈ புடிச்சுத் தாடா.

ரவி: போடாச் சீ! வேற ஆளேப் பாரு.

நாணு: பிடிச்சுத் தரமாட்டே?

ரவி: மாட்டேன், மாட்டேன், போடா.

நாணு: சரி, நீ சிகரெட் புடிச்சதை அப்பா கிட்டச் சொல்லிடப் போறேன்.

கிட்டு: மாமாகிட்டயும் சொல்லிடுவோம்.

ரவி: ராட்சசா, ப்ளாக் மெயில் பண்றியா?

(நியூஸ் பேப்பரைச் சுருட்டி வைத்துக் கொண்டு ஈ அடிக்க முற்படுகிறுன். இருவரும் 'மைம்' முறையில் ஒரு ஈயைத் துரத்தி எகிறிக் குதித்துக் கை வீசும்போது மேஜையிலிருந்து மூக்குக் கண்ணுடி உருள்கிறது. சுவரில் ஓர் இடத்தில் இருக்கும் ஈயை நோக்கிக் குதியுடன் அணுகி அதன் மேல் கையைப் பொத்திக் கொள்கிறுன் ரவி.)

ரவி: கிடைச்சுடுத்து. கிடைச்சுடுத்து.

நாணு: அது ஈ இல்லே ரவி. ஆணி.

ரவி: போடா, அப்புறம் பார்த்துக்கலாம். மாமாவையே கேளு, எப்படிப் புடிக்கிறதுன்னு.

(இதற்கிடையில் நாணு கையை ஒரு இடத்தில் வீச அகஸ்மாத்தாக ஒரு ஈ கிடைக்கிறது.)

நாணு: அம்ட்டுடுத்து. அம்ட்டுடுத்து!

மாமா (உள்ளே வந்து): என்னடா?

நாணு: ஈ மாமா. கைக்குள்ள இருக்கு. உயிரோடதான் இருக்கு. குருகுருங்கறது.

மாமா: வாயகலமா ஒரு பாத்திரத்தில் ஜலம் எடுத்துக்கோ. அதில அதைப் போட்டு முக்கிடு. அது ஜலத்தில் தத்தளித்துச் செத்துப் போயிடும் பாரு. அதுக்கப்புறம் எங்கிட்டக் கொண்டு வா.

(நாணு உள்ளே ஓடுகிறுன்.)

கிட்டு: நிஜமாவே புழைக்க வைப்பீங்களா மாமா?

மாமா: ஏண்டா அப்படிக் கேட்டுட்டே? ஒரு தடவை திருவல்லிக்கேணி தெப்பக் குளத்துக்கு வா. ஜல ஸ்தம்பனம் பண்ணிக் காட்டறேன்.

ரவி: ஜலஸ்தம்பனம்னு?

மாமா: ஜலத்து மேலே நிப்பேன். கர்ணம் அடிப்பேன். ஒரு பொட்டு ஜலம் கூட ஒடம்புல படாது.

ரவி: இப்பவே போகலாமா மாமா.

மாமா (திணறி): இன்னிக்கு வியாழக் கிழமை. பண்ணக் கூடாது. நரசிம்மர் உக்ர மாயிடுவார்.... டேய், என்னே உனக்குத் தெரியாதுடா. பீதாம்பர ஐயர் கிட்ட சிஷ்யனு இருந்தவண்டா நான். பீதாம்பர ஐயர் தெரியுமோல்லியோ? பெரிய கண் கட்டு வித்தைக்காரர். பீதாம்பர ஐயர் பல்லக்கிலே போவார். பின்னுலே ரெண்டு பேர் தூக்கிண்டு போவாங்க. முன்னுல யாரும் கிடையாது. வெறும் காத்து... ஒரு தரம் என்ன ஆச்சு...

(என்று அவர்கள் எல்லோருக்கும் சொல்லத் துவங்க, இப்போது அவர் கதை சொல்லுவது மெல்ல மெல்லக் குரல் குறைந்து மைமுக்குச் செல்ல, மாமாவைச் சுற்றிக் குடும்பமே வீற்றிருப்பதை மட்டும் ஸ்பாட் லைட் காட்டுகிறது.)

• • •

பவானி (குரல்): அவர் சொல்லும் கதைகள் யாவும் வசீகரமானவை. அது சம காலத்தின் நடைமுறைக்கும் விதிகளுக்கும் புறம்பானதாகவும் நம்பமுடியாததாகவும் இருந்தாலும் நாங்கள் அவற்றை, அவரது கவிதை கலந்த பொய்களே எல்லாம் மனமுவந்து நம்புவோம். விரும்பிக் கேட்போம்.

(தொடரும்)


LUBRA
IN ACTION
DEDICATED TO REPUTED PERSONALITY'S ACTION ABLE BRIEFS, VESTS & SPORTS WEAR
LUBRA
HOSIERIES
TIRUPUR


நீலிபிருங்காதி
தைலம்
கூந்தல் வளர்ச்சிக்கு
சிறந்தது. கேசம்
உதிர்வது நின்று
வளர்ச்சி ஏற்படும்.
நரை மாறிவிடும்.
ஆனந்தாவின்
நீலிபிருங்காதி சாஸ்திர
விதிப்படி தயாரிப்பது
ஆனந்தா வைத்தியசாலை
பழனி-624 601
147, கச்சேரி வீதி
மைலாப்பூர், சென்னை-600 004



கல்யாணசுந்தரம்



லில்லி நீலங்காணி

நாட்டிய விழா சாதனைகள்!

ஆகஸ்ட் 5 முதல் 19 வரை ஒருநாளைக்கு இரண்டு நடன நிகழ்ச்சிகள் விதம் ஒரு நாட்டிய விழாவே நடத்தினார்கள், 'சங்கரா பரண'மும் கலாமந்திர் டிரஸ்டும். ஒவ்வொரு நாளும் கூடிய ரசிகர் கூட்டமே இந்த விழாவின் வெற்றியைத் தெரிவித்தது.

கலைஞர்களுக்குத் தாராளமாக சன்மானம் கொடுத்தது ஒரு புதுமை. நடனமாடிய ஜூனியர்களில் மூன்று பேரைத் தேர்ந்தெடுத்து, மாதம் இருநூற்றைம்பது ரூபாய் விதம் ஒரு வருஷத்துக்கு அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுத்தது இன்னொரு புதுமை. மூன்று பேர்: 1. ராஜஸ்ரீ குருசாமி (குரு ஸ்ரீ குஞ்சிதபாதம்); 2. சுஜாதா சீனிவாசன் (குரு ஸ்ரீ ராஜரத்தினம்); 3. நிருபமா நித்யானந்தம் (குரு ஸ்ரீ. ஸ்ரீமதி தனஞ்செயன்). கடைசி நாள் வரை ஸ்காலர்ஷிப் முடிவுகளை ரகசியமாக வைத்திருந்தது — சாதனை!

இந்த நடன விழாவை 'சங்கராபரணம்' வெங்கடகிருஷ்ணன் வெற்றிகரமாக நடத்த, பின்பலமாக இருந்து பொருளுதவியும் செய்தவர்: கலாமந்திர் டிரஸ்ட் தலைவர், என்.-ஃபீல்ட் அதிபர் திரு விசுவநாதன்.

வாணி கமல் வீட்டு விருந்தினர்

சென்னையில் வாணி (கமலஹாசன்) — மீரா நடன நிகழ்ச்சியை முடித்த கையோடு சுவாமிமலை போய்த் திரும்பி, வாணி - கமலஹாசன் வீட்டு விருந்தாளியாக (அவர்கள் குடும்பத்தில் ஒருவராகவே) தங்கியிருந்தனர், கல்யாணசுந்தரம் தம்பதி. வாணி — மீரா இவர்கள் மாணவிகள்.

பரத வித்துவான் குரு குப்பையா பிள்ளை அவர்களுடன் திரு கோவிந்தராஜ பிள்ளை அவர்கள் பம்பாய் மியூசியம் அருகில் ராஜ ராஜேஸ்வரி பரத நாட்டிய கலா மந்திர் ஆரம்பித்தபோது 25 மாணவிகளே இருந்தார்களாம். இன்று 750க்கும் மேலாக மாணவிகள். இதற்கு இரு பெரும் ஆசிரியர்கள் தவிர, குரு மகாலிங்கம் பிள்ளை அவர்களும் காரணம் என்று அடக்கத்துடன் தெரிவித்தார் ராஜ ராஜேஸ்வரி பரத நாட்டிய கலாமந்திரின் இன்னொரு நாட்டிய ஆசிரியரான இளைஞர் திரு கல்யாணசுந்தரம்.

இந்த நாட்டியப் பள்ளியில் மராத்தி, குஜராத்தி, பஞ்சாபி, மார்வாரி, வங்காளி— பெண்கள்தாம் தமிழ்க் குடும்பத்துப் பெண்களைவிட அதிகம் பயிலுகிறார்கள். ''தமிழ் சாஹித்தியங்களை அர்த்தம் புரிந்துகொள்ளாமல் அபிநயம் பிடிப்பது கஷ்டம் இல்லையா?''

''பாடலுக்கு வார்த்தைக்கு வார்த்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்து அபிநயத்தோடு சொல்லிக் கொடுக்கிறோம்'' என்றார் கல்யாணசுந்தரம். அதுவும் அபிநயத்தோடு சொல்லிக் கொடுக்கும்பொழுது மாணவிகளுக்கு என்ன சிரமம்!

'ஏஷியாட்'ின் போது நடைபெற்ற கலை விழாவுக்கு அழைப்புப் பெற்ற ஒரே பரத நாட்டியக் குழு இவர்களுடையது. தீராத விளையாட்டுப் பிள்ளை பாடலுக்கு மாணவிகள் (எல்லாரும் வேற்று மொழிக்காரர்கள்) நடனம் ஆடியதை அத்தனை பேரும் கைதட்டிப் பாராட்டினார்கள்,

பிரச்னைகளா? கொண்டுவாருங்கள் இங்கே!

"விமலாவுக்குப் பத்தொன்பது வயதிருக்கும். கல்லூரியில் கடைசி வருஷப் பரீட்சை எழுத வேண்டியவள். 'என்னால் எழுத முடியாது; நான் பரீட்சைக்குப் போக மாட்டேன்' என்று பிடிவாதம் பிடித்தாள்.

சுஜாதா



எல்லார் மேலும் ஒரே வெறுப்பு. பெற்றோர் எத்தனை சொல்லியும் கேட்காமல் போகவே, தகப்பனார் என்னைத் தேடி வந்தார்.

''விமலாவிடம் நான் பேசிக் கொடுத்த போது, அவள் ஒரு புத்திசாலி மாணவி மட்டுமல்ல, முதல் வகுப்பில் டிஸ்டிங்ஷனுடன் தேறி வருகிற மாணவி என்று தெரிந்தது. ஆனால் அவளுக்கு வீட்டில் எல்லார் மீதும் கோபம், ஆத்திரம். முக்கியமாக அவள் அம்மா மீது; சகோதரி மீது. அம்மா ஒரு டாக்டர். நேரம் கிடையாது. கல்யாணமாகிப் புகுந்த வீட்டுக்குப் போன சகோதரியை அம்மா புகழ்ந்து கொண்டாடித் தலை மீது தூக்கி வைத்துக் கொள்வாள். விமலா எது செய்தாலும் பாராட்டுதல் இல்லை. அவளைக் கவனிப்பதும் இல்லை. விமலாவுக்கு நினைவிருப்பதெல்லாம் சின்ன வயசில் அவளுடன் இருந்த ஆயா தான். 'அவளை அழைத்து வைத்துக் கொள்வதுதானே?' என்றேன். 'எனக்கு வேண்டியது ஆயாவின் கவனிப்பு அல்ல, அம்மாவின் அன்பு!' என்று கூச்சலிட்டாள் விமலா. எதிலும் எதிர்மறையான நினைப்பு — 'நெகடிவ் திங்கிங்'. வெறுப்பும் எரிச்சலும் கூடும்போது போதை மாத்திரை உட்கொண்டிருக்கிறாள்: கதவைச் சாத்திக் கொண்டு அழுது தீர்த்திருக்கிறாள். 'உன் தாயின் கவனிப்பையும் அன்பையும் பெற உனக்கு உரிமை உண்டு. அதை ஏன் நீ எடுத்துச் சொல்லவில்லை?' என்று கேட்டேன். மூன்று மணி நேரத்துக்கு மேல் பேசிக் கொடுத்து, அவள் மனசில் உள்ள கொந்தளிப்பை எல்லாம் கொட்டிவிடச் செய்தேன். வாழ்க்கையில் தன்னம்பிக்கையோடு முன்னேற வேண்டியதை வலியுறுத்திச் சொன்னேன். விமலாவின் மனநிலையில் மாற்றம் தெரிந்தது மட்டுமல்ல, பரீட்சைக்கு அமர்ந்து தேர்வில் வெற்றியும் பெற்றாள்.''

ஸ்ரீமதி வில்லி நீலங்காவில் அவர்களிடம் வரும் நூற்றுக் கணக்கான கேஸ்களில் ஒருத்திதான் விமலா. பலதரப்பட்டவர்களின் அன்றாடப் பிரச்னைகளில் சிக்கல் எடுத்து நம்பிக்கையும் மகிழ்ச்சியும் உண்டாக்கும்

○ ராஜ்ஸ்ரீ





○ பிஸாரியா



○ நிருபமா

வில்லி உ. பி. மாநிலத்தைச் சேர்ந்தவர். உளவியல், நடத்தையியல், துறைகளில் தேர்ந்தவர்.

"வித்தியாசமான நாடகங்களை எழுதித் தாருங்கள்!"

சென்னையில் வித்தியாசமான இரண்டு இந்தி நாடகங்களை வழங்கினார் பிஸாரியா.

''நாடகங்கள் நம் தவறுகளை, குறைகளை—கண்ணாடி போலக் காட்ட வேண்டும். நிஜ வாழ்க்கையின் பிரச்னைகளைப் பிரதிபலிக்க வேண்டும். 'இதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?' என்ற கேள்வியை நம் மனத்தில் தோற்றுவிக்க வேண்டும். என் நாடகங்கள் மூலம் உண்மையைத் தேடுகிறேன். நகைச்சுவை நல்லதுதான். ஆனால் அர்த்தமில்லாத சிரிப்பு செயற்கையானது; தேவையற்றது.''

தமிழில் மாறுதலான நாடகங்களைக் கட்டாயம் வழங்கலாம் என்கிறார் பிஸாரியா. (''வித்தியாசமான, புதுமையான நாடகம் இருந்தால் கொண்டு வாருங்கள். மேடையேற்ற நான் இருக்கிறேன்!'') ஒரு மொழியில் உள்ள வளத்தை இன்னொரு மொழிக்குக் கொடுத்துச் செழிப்பாக்கும் முயற்சியில் ஏற்கனவே ஈடுபட்டு, கன்னட, மராத்தி நாடகங்களை இந்தியில் வழங்கியிருக்கிறார் பிஸாரியா.

'ஆதே அதூரே' என்ற முதல் நாடகத்தில் அரங்கிலுள்ள முதலிரண்டு வரிசை நாற்காலிகளை எடுத்துவிட்டு, மேடையை மேலும் விரிவாக்கி ரசிகர்களை மேடை ஊடுருவுவது போல் அமைத்திருந்தார். பிஸாரியாவின் இன்னொரு தனிச் சிறப்பு, அவர் பலவிதக் கோணங்களில் அமைக்கும் ஒளி விளக்குகள். நடிகர்களின் முக பாவங்களைத் துல்லியமாகக் காண்பிக்க, இத்தனை விளக்குகள் தேவை என்கிறார்.

-சாருகேசி


மரண தண்டனை இல்லை எனில்...

மரண தண்டனையை நிறைவேற்றுவது எப்படி என்ற கட்டுரை படித்தேன். இதையும் மனிதாபிமானிகள் சிறிதாவது சிந்திக்க வேண்டும்: மரண தண்டனை இல்லையென்றால், கொலைக் குற்றம் செய்தால் தனது உயிர் எடுக்கப்பட மாட்டாது என்ற தைரியமும், அதிகப்பட்சம் ஆயுள் தண்டனைதானே என்ற எண்ணமும் ஏற்படும். கொலைகள் அதிகரிக்கும். மனிதனின் உயிருக்கு உத்தரவாதமிருக்காது.

சென்னை-79 — சையது அகமது

கல்கி 9–10–83 இதழ் மாணவர் சிறப்பிதழாக மலர இருப்பது அறிந்து மதுரை வக்பு வாரியக் கல்லூரி மாணவர்கள் மகிழ்ச்சியடைந்தோம். மாணவ எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் கல்கிக்குப் பாராட்டுக்கள். படைப்புக்களை எழுத இதோ தயாராகி விட்டோம்.

மதுரை-1 — எஸ். சாகுல் ஹமீது



ராஜேஷ்குமாரின் 'பிரேம்குமாரின் போஸ்ட்மார்ட்டம்' சஸ்பென்ஸ் கடைசிவரை என்னால் ஊகிக்க முடியவில்லை.

மதுரை-1 — எஸ். முத்து பாண்டியன்

பிரதமரின் இரு முனைத் திட்டத்தைக் கண்டிப்பதோடு நில்லாமல் அதற்கோர் மாற்றுத் திட்டத்தையும் கொடுத்துத் தலையங்கம் எழுதியிருப்பதைப் பாராட்டி வரவேற்கிறேன்.

பெங்களூர் — ப. மூர்த்தி

நீதிபதி கே. எம். நடராஜன் அவர்கள் கூறியுள்ள ''டிபார்ட்மெண்டல் விசாரணை'' பற்றியது வரவேற்கத் தக்கது. தொழிலாளர்களின் உண்மைக் குரல் நெரிக்கப்படுவதைத் தடுத்திட அவர் போன்ற நியாயாதிபதிகள் உருவாக வேண்டும்.

மேட்டுப்பாளையம் — பி. ஏ. வஹாத்

ஓர் இந்திய ஆண் பிள்ளையின் ''கல்யாண குணங்கள்'' அத்தனையையும் எவ்வளவு அழகாகப் பொடி வைத்து 'கோபால்' என்ற சித்திரத்தை வரைந்து 'ஜீவனாம்சம்' என்ற ஃப்ரேமில் மாட்டியிருக்கிறார் சில்க் புடவை கதாசிரியை சுமதி!

மதுரை-3 — திருமதி தேவனாதன்

'நட்சத்திரங்கள் குழந்தைகளானால்' படமும் சிரிப்பும் வெகு ஜோர்.

பாண்டிச்சேரி — தெ. நாராயணமூர்த்தி

'நெட்டுருப் பண்ணுவது உலக மகா பாவங்களில் ஒன்று' என்ற என் எண்ணத்தை 28–8–83 இதழில் பிரசுரமான ''அருள் வாக்கு'' மாற்றி விட்டது.

சீர்காழி — அ. சுந்தரம்

'மாறுதல் வரும்' முதல் நாடகம், உண்மையிலேயே எங்களது இதயத்தில் இவ்வார இறுதியில் வியப்புடன் மாறுதலை உண்டாக்கி விட்டார் நாடக ஆசிரியர்.

கோபி — க. சு. இராதாகிருட்டிணன்

பத்திரிகைகளில் கட்டுரை எழுதி வருகிற சன்மானத்தைப் போலீஸ் சேவை நிதிக்கு 'கிராக்கி' வழங்கி விடுகிறார் என்ற தகவலைப் படித்துவிட்டு, 'கிராக்கி' அவர்களைக் கிராக்கி பண்ணாமல் பாராட்டியாக வேண்டும்

சென்னை-57 — இரணியல் 'கலை'

தமிழக இருத்தலப் பெருமைகளையெல்லாம் தமிழ் இதழ்கள் பறைசாற்றிக்கொண்டிருக்கும் வேளையில் நமது தலத்தை நாட மாட்டார்களா என்று விரைவுடன் ஏக்கமுற்றிருந்தேன். என் ஏக்கத்தைத் தீர்த்து விட்டது 28–8–83 இதழில் வெளிவந்த 'தாடகையீச்சுரம்' பற்றிய செய்தி. அதற்கு மிக்க நன்றி.

திருப்பனந்தாள் — சின்ன மனோஹரன்

சுஜாதாவின் 'மாறுதல் வரும்' ஓர் இனிய மாறுதல், தமிழ் நாடகத்திற்கு.

விசாகப்பட்டினம் — எஸ், ரங்கநாதன்

புல் முளைத்த மண்

வசந்தபாரதி

கீறல் விட்ட மன விளிம்பில் குருதி பூத்ததோ — அதைக்
கூறவந்த கண்ணில் சோகம் கருதி சேர்த்ததோ?
ஆறிவிட்ட ஆசை வேகம் சுமை நிறைத்ததோ? — சுமை
ஏறிவந்த கவிதையூற்றில் சுவை நிறைந்ததோ?

ஓடிவந்த உறவெலாம் ஒதுங்கி விட்டதோ? — எனைத்
தேடிவந்த துன்பம் மட்டும் தங்கிவிட்டதோ?
நாடிவந்த நாட்களோட்டம் நின்றுவிட்டதோ — மனம்
வாடவந்த விதியின் ஆட்டம் வென்றுவிட்டதோ?

சொல்லிழந்த மௌனம் மெல்ல விம்மலிட்டதோ — விம்மல்
சொல்லவந்த சொல்லை வெறுமை சொல்லிவிட்டதோ?
புல்முளைத்த மண்ணில் எந்தன் பெயர் மடிந்ததோ — முடிவில்
பல்லுடைந்த நினைவிரண்டு பல்லிளித்ததோ?



பெண்கள் சுதந்திரம் 'மாக்ஸி'யில் தான் இருக்கிறதா?

○ தில்லை அம்பலம், தூத்துக்குடி.

? எம். ஜி. ஆர். புதிய ஆட்களை மந்திரி சபையில் சேர்த்துக் கொண்டே இருப்பதன் மர்மம்?

! எத்தனை மந்திரிகளைப் போட்டாலும் அவர்கள் சுதந்திரமாக இயங்க முழுமையாக அனுமதிக்கப் பட்டாலன்றி வேலைகள் துரிதமடையப் போவதில்லை. அப்படி அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதாகவும் தெரியவில்லை. ஆக, அதிகப்படி அமைச்சர்கள்கட்சிக்குள் அதிருப்தியாளர்கள் அதிகரிப்பதைத் தான் உணர்த்தும்.

○ எம். ராஜேந்திரன், லால்குடி

? தாம் அட்டைப் படத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டதுண்டா?

! இல்லை. அவர்களுக்கு எப்படி கட்டி வருகிறது என்றுஎண்ணி ஆச்சர்யப் பட்டதும் இல்லை.

○ கு. கோவிந்தன், விழுப்புரம்

? பெரும்பாலான இளம் பெண்கள் மிடி அணிவதிலும் மாக்ஸி அணிவதிலும்தான் பெண்கள் சுதந்திரம் இருக்கிறது என்று நினைக்கிறார்களே?

! அவர்கள் அப்படி நினைப்பதாக நீர் நினைத்தால்

கோமல்



சிவராம கிருஷ்ண அய்யர்



அவர்களுடைய இதய தாபத்தை நீங்கள் மினி அளவு கூடப் புரிந்து கொள்ளவில்லை என்று அர்த்தம். மிடியும் மாக்ஸியும் சுதந்திர ஏக்கத்தின் புறச் சின்னங்களே.

○ வி. ஏ. ராஜு, பாட்னு.

? இனி ஐயாயிரம் ரூபாய்க்கு கலர் டீ. வி.யும், ஆயிரம் ரூபாய்க்குக் கறுப்பு வெளுப்பு டீ.வி.யும் கிடைக்கப் போகிறது. வீடியோ விலையும் குறையுமா?

! நிச்சயம்குறையும். ஐயாயிரத்துக்கு வீடியோவே கிடைக்கும். ஆயிரத்துக்குக் கலர் டீ.வி. கிடைக்கும். அதனால் தான் அவசரப்பட்டு கலர் டீ.வியும் வீடியோவும் வாங்கி விடாமல் பொறுமையாகக் காத்திருக்கிறேன். (இதையே நீங்களும் உமது மனைவி மக்களிடம் கூறலாம்; ஆட்சேபணையில்லை.)



புஷ்பா

○ அண்ணா அன்பழகன், அந்தணப்பேட்டை.

? அரசியல் தலைவர்கள் திருமண விழாவில் அரசியல் பேசுவது சரியா?

! அரசியல் கூட்டத்தில் திருமண வாழ்த்து கூறி முடிக்காமலிருந்தால்சரி.

○ எஸ். அமிர்தா, சௌந்தர் ராஜன், ஈரோடு.

? முந்தானை முடிச்சு படம் பார்த்து யூ ஏ. எம்? என்று கேட்கத் தோன்றுகிறது. இப்படிச் செய்யலாமா?

! செக்ஸ் இல்லாவிட்டாலும் நல்ல படமாக இருந்தால் வெற்றிபெறும்நஷ்டம்வராதுஎன்ற நம்பிக்கையை ரசிகர்கள் படாதிபதிகளுக்கும் டைரக்டர்களுக்கும் ஏற்படுத்தாது போனால் அவர்கள் தன்னம்பிக்கை இழப்பது இயல்பு.

○ கே.எஸ். கணபதி சுப்பிரமணியம், சென்னை-45 ★

? மாநில முதல்வர்கள் மத்திய அமைச்சர்கள், அதிகாரிகள் இவர்களை இஷ்டப்படி தூக்கிப் போட்டும் பாதிக்கப் பட்டவர்கள் இந்திரா காந்தியை எதிர்க்காதது ஏன்?

! தூக்கிப் போட்டபோதிலும் வேறு ஒரு பதவி ஆசனத்தில் போய் விழுவோம் என்ற நம்பிக்கை காரணமாக இருக்கலாம். சமீபத்திய உதா



குஜ்ரால்

ரணம்குஜ்ரால்.ரயில்வே போர்டு சேர்மன் பதவியிலிருந்துகல்தா கொடுக்கப்பட்டவர் இப்போது கோல் இண்டியாவின் சேர்மன் ஆகியிருக்கிறார். இந்த அரசத்துறை நிறுவனம் நாட்டின் நிலக்கரி உற்பத்தியில் 90 சதத்தை நிர்வகிக்கிறது.

○ கல்லூரி பிரியா, வேலூர் (சேலம்).

? தினமலர் வார இதழுக்கு புஷ்பா தங்கதுரை ஒழுங்காகக் கதை எழுதித் தரவில்லை என்ற குற்றச்சாட்டு பற்றி...?

! தினமலர் வார இதழில் வந்த ஆசிரியர் குறிப்பு படித்தேன். எழுத்தாளர்கள் இயந்திரமாக இயங்க முடியாது. கலைஞர்களுக்கு 'மூட்' வந்து செயல்பட்டால் கலை சிறக்கும். கடன் இழவே என்று காலண்டரையும் கடிகாரத்தையும் பார்த்துக் கொண்டு பணியாற்றினால் கலை நசிக்கும். கலைஞர்களிடம்கண்டிப்புக் காட்டுவதைவிடத் தட்டிக் கொடுத்து வேலைவாங்கு

வது நற்பயன் தரும். ஒருவரை ஒருவர் அனுசரித்துப் போவதே நலம். கத்தரித்துக் கொள்ளாமலே காரியத்தைச் சாதித்திருக்க முடியும் என்று நம்புகிறேன்.

○ மங்களதேவன், சென்னை-45

? சமீபத்திய மேடை நாடகங்களில் தங்களைக் கவர்ந்தது எது?

! மாறுதல் வரும் என்பது மாறுதலில்லாதபடியாகி விடும். எனவே கொஞ்சம் லைசென்ஸ் எடுத்துக்



ஸ்வராஜ்பால்

கொண்டு டிராக மாறுகிறேன். முன்பு மேடை நாடகமாகப் பார்த்தபோது அதிகமாக மனத்தை ஈர்க்காதது ''ஓர் இந்தியக் கனவு''. அதையே இப்போது திரைப்படமாக்கியிருக்கிறார் கோமல். அற்புதம் என்றுதான் சொல்ல வேண்டும். உள்ளத்தை அப்படி கொள்ளை கொண்டு விட்டது! அரசியல்வாடை நிறைய வீசினாலும் சென்ஸாரில் கிளீன் சர்ட்டிபிகேட் தந்து விட்டார்களாம். எனவே முதல் பாராட்டு சென்ஸாருக்கு; அடுத்த பாராட்டு கோமலுக்கு. ஆயினும் விநியோகஸ்தர்கள் கோமலுக்கு நியாயம் செய்யவில்லையோ என்று தோன்றுகிறது. இல்லாவிட்டால் படம் ரிலீஸாகத் தாமதமேன்!

○ பி. பாலசுப்பிரமணியன், விக்கிரமசிங்கபுரம்.

? சமீபத்தில் தாங்கள் மனம் ஒன்றிய நிலையில் நல்லாயிருக்கு என்று எதையாவது சொன்னதுண்டா?

! அதிசயம். ஆனால் உண்மை! ஒரு டி.வி. நிகழ்ச்சி குறித்து நல்லாயிருக்குஎன்றுஒருதடவை அல்ல ஆயிரம் தடவை சொல்வேன்! தேசிய ஒலிபரப்பில் அம்ஜத் அலிகான், லால்குடிஜெய



ஜியா

ராமன் ஜுகல்பந்தி. ஹிந்தோள ராகத்தை இருவரும் வாசிக்க விநாடிக்கு விநாடி ரசித்தேன். அரசியல்வாதிகள் தேசிய ஒருமைப் பாட்டுக்கு ஏற்படுத்தும் குந்தகங்களை இத்தகைய கலைஞர்கள்தான் செப்பனிட வேண்டும்.

○ அ. பாரிசா பேகம், சிதம்பரம்

? பாகிஸ்தானில் ஜியாவுக்கு ஏற்பட்ட எதிர்ப்பை இந்தியா ஆதரிப்பதாகச் செய்தி வெளியாகியுள்ளதே?

! ஆதரிப்பது வேறு; கவலை தெரிவிப்பது வேறு. அண்டை நாட்டில் நடப்பன பற்றி நாம் கவலைப்படாமல் இருக்க முடியாது. ஜியா தாம் ஒரு எரிமலைமீது அமர்ந்திருப்பதை உணரவேண்டும். மக்களுடைய நியாயமான சுதந்திர உணர்வுகள் மதிக்கப் படவில்லையானால் அது அணை உடைத்துக் கொண்டு வெள்ளமாகப் பெருக்கெடுக்காமல் போகாது. கசையடியும் சிறைவாசமும் அதனைக் கட்டுப் படுத்த முடியாது!

○ சி. பி. ராஜு, கல்பாக்கம்

? டி.வி.எம். எஸ்கார்ட் ஷேர்களை ஸ்வராஜ்பால் வாங்கியதற்கு ஏன் இத்தனை எதிர்ப்பு?

! இந்தியாவில் வசிக்காத இந்தியர் ஒரு நிறுவனத்தில் ஐந்து சதத்துக்கு



லால்குடி

மேல் பங்குகளை வாங்கக் கூடாது என்ற சட்டத்தை ஸ்வராஜ்பால் மீறுவதால். மேலும் அயல் நாட்டிலிருந்து இங்கு வருவது ஸ்வராஜ் பாலின் சொந்தப் பணம் தானா அல்லது சில அரசியல் தலைவர்களின் பணமா என்பது குறித்துச் சந்தேகம் இருக்கிறது; சர்ச்சை நடக்கிறது.

○ நல்லாலம் காசிநாதன், கோவிலூர்.

? மனநிறைவு எப்போது ஏற்படுகிறது?

! ஆயிரம் பிறை கண்ட சிவராமகிருஷ்ண ஐய்யருக்கு மனநிறைவு வக்கீல் தொழில் புரிந்து பத்திரிகை நடத்தி படிப்படியாக வாழ்க்கையில் உயர்ந்து பெரிய பெரிய தேயிலை ரப்பர்தோட்டங்களின் அதிபதியானதில் கிட்டவில்லை. மனைவிகுழந்தைகள் பேரக் குழந்தைகள் இதிலெல்லாமும் முழு மனநிறைவு கிடைத்து விடவில்லை. பிறகுஎதிலேகிடைத்தது? சம்பாதித்த பொருளை உயர்ந்த நற்பணிகளுக்குச்செலவிட்டபோது கிடைத்தது! இலவச மருத்துவமனை, பாலர் ஆசிரமம், வேத பாடசாலைகள் முதலியன நிறுவி காஞ்சி, சிருங்கேரி ஆசார்யர்களின் அருளுக்குப்பாத்திரரான போது மனநிறைவு கிடைத்தது.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:

— கே.எஸ். கணபதிசுப்பிரமணியம்,
16, மாந்தோப்பு SB2
சென்னை-45

நீங்கள் கேட்டவை — தராசு

கொலை, கொள்ளை, கற்பிழைப்பு

பைக் கட்டு வேறு) கற்பை விற்பனை செய்கிற கல்பனாவைக் கலாட்டா செய்கிற சாக்கில் குப்பத்து ஆட்கள் பாடுகிற டப்பாங்குத்து பாடலும், ஆட்டமும் படத்தின் தீவிரத்தை இரண்டாந்தரமாக்குகிற படுகொலை. (இது என்ன வகை?)

கொள்ளை: 'உங்கள் கட்டில் வேண்டுமானால் மூன்று பேரைத் தாங்கலாம், என் மனசல்ல' — என்று கணவனுக்கு டாட்டா சொல்கிற முரடும், உண்மையும் கலந்த ஒரு முற்போக்குப் பெண்ணின் குமுறல்கள், நேர்மையான ஜீவாவைச் சந்திக்கும்போது எழுகிற இயல்பான நட்பு, மாணவியை கோர்ட்டில் பார்க்க நேரிடுகிறபோது எழுகிற அதிர்ச்சி, நட்பைக் காதலாய் புரிந்து கொண்ட ஆண்மகன் பேரில் எழுகிற ஆவேசம் — ஜானகி பாத்திரத்தைக் கம்பீரமாய் கௌரவப்படுத்தும் லட்சுமியின் திறமை—



உண்மைகள்

கொலை(கள்): மன்னித்தல் என்பது ஒரு தவறை மறுபடி செய்வதற்கு வழங்கப்படும் அங்கீகாரம் — எனவே தண்டனையே சரி, என்ற மாறுதலான கொள்கையுடன் ஜானகி பாத்திரம் அறிமுகமாகிறது. நிமிர்ந்த நோக்குடன், குழைவில்லாத உறுதியுடன் சமூகத்தை எதிர்கொள்கிற அந்த அழுத்தமான பாத்திரம், கடைசியில், தண்டனை என்கிற பெயரில் அர்த்தமில்லாமல் ஒரு அபத்த முடிவை எடுக்கிறபோது ஒரு பாத்திரக் கொலை. (ஜீவாவுக்குத் தவறான எண்ணம் வருகிற மாதிரி நடந்து கொண்டதாய் சப்

(அம்மாவ்!) அடுத்தபடி 'அண்ணாச்சி' ராக்கெட் ராமநாதனின் இயல்பான பாத்திரம். அதற்கும் அடுத்தபடி 'காலேஜ் கேர்ல்' வனிதா செருப்புத் தொழிலாளி ராஜ்குமார், வக்கீல் ஸ்ரீநாத், வயோதிக டாக்டர் வி. கோபால கிருஷ்ணன் ஆகியோரைத் தேர்ந்தெடுத்துப் போட்ட டைரக்டரின் சாமர்த்தியம் — காட்சிகளை எடுப்பாகக் கொடுக்கிற செல்வராஜின் காமிராக் கண் — அடக்கி வாசித்திருக்கும் எம். எஸ். வி. யின் இசை.

மனத்தைக் கொள்ளை கொள்கிற சமாச் சாரங்கள்.

கற்பிழைப்பு: அப்பா செத்துப்போனாராம். அம்மாவைக் காப்பாற்ற வேண்டுமாம்— உடனே ஒரு கல்லூரிப் பெண் என்ன செய்வாளாம்? கலபமாய் விலை போகிற சரக்கை மடியில் வைத்துக்கொண்டு வேலைக்கு அலைவானேன் என்கிற மாதிரி முடிவெடுப்பாளாம். சர்வசாதாரணமாய் இதை வனிதா சொல்வதும், 'ஐயோ அப்படியா?' என்கிற மாதிரி அம்மா ஷோபா ஒப்புக்கு அழுவதும்(அழுகைகளில் வெரைட்டி தந்திருக்கிற ஷோபாவுக்குத் தனிப் பாராட்டு) அனுதாபத்திற்குப் பதில் ஆத்திரம்தான் வருகிறது.

தீர்ப்பு: டைரக்டரின் திறமையை, கொஞ்சம்கொஞ்சம் தைரியத்தைப் பாராட்டுகிற அதே சமயத்தில், பளீரிடும் தவறுகளை மன்னிப்பது, மறுபடியும் அவர் தவறு செய்ய அங்கீகாரம் வழங்குவதாகும் என்பதால்....



வில்லன் பாலாஜி முக அமைப்பிலும், ஸ்டைலிலும், நடையிலும் ரஜினிகாந்தின் இரட்டைத் தம்பி.

செந்திலும், அவரது குண்டுப் பிள்ளைகளும் கலகலப்பிற்கு.

கடைசியில் காதல் நாயகி, நாயகனை, திடீரென மணமேடையில் உறவுப் பெண்ணுக்குப் பதிலாக வந்து அமர்ந்து மணந்தாளா? உறவுப் பெண் (ரோகிணி நன்றாகவே செய்திருக்கிறார்.) 'தியாகச் சுடர்' பட்டம் பெற்றாளா? இன்ஸ்பெக்டரின் கொலைக்குக் காரணமாயிருந்த வில்லன் ரயிலடியில் சிக்கி மடிந்தானா? என்பன போன்ற கேள்விகளுக்குப் பதில் அளித்துவிட்டு வணக்கம் போடுகிறார்கள்.

இளையராஜா கைவிடவில்லை. நிச்சயம் மூன்று பாடல்கள் ஹிட்.

இளமைக் காலங்கள்

கடந்த காலம்: மாணவர் தலைவர் ரகுவும், இன்ஸ்பெக்டர் மகள் ரோஸியும் எப்படிக் காதல் சுழலில் சிக்குகிறார்கள் என்பதை ஒரு கோஷ்டிப் பாடல், இரண்டு டூயட் பாடல்கள் மூலம் சித்திரிக்கும் காலம். இதில் சில சுவையான மோதல்கள், ஊடல்கள் இன்ன பிற கிளுகிளுப்புகள் (புது முக சசிகலாவின் கண் சிமிட்டு நாழிகை நீச்சல் வேஷம்) எல்லாம் அடக்கம். ததும்பும் இளமையும், ஒட்டிய கன்னமுமாய் சசிகலா அறிமுகம். கோபத்தில் முறைப்பதும், காதலில் குழைவதும், ஆடுவதும், பாடுவதும் எல்லாம் சரிதான். ஆனால் கண்களில் எப்போதும் ஒரு சின்ன மிரட்சி வைத்திருக்கிறாரே—டைரக்டர் பயம் காரணமோ?

மோகனுக்கு இது அரைத்த மாவு. தலையை சிலுப்பிக் கொண்டு ஒரு கமலஹாசப் பார்வை மோவாயைத் தூக்கிக் கொண்டு இடுப்பில் கைவைத்து ஒரு ரஜினிகாந்த் சிரிப்பு. முகத்தைப் பிசைந்துகொண்டு ஒரு சிவாஜி கணேச அழுகை. அவரிடம் எதிர்பார்த்ததை ஏமாற்றாமல் கொடுத்திருக்கிறார்.

நிகழ்காலம்: கிறிஸ்துவக் காதலி, ஹிந்துக் காதலன் என்றவுடனேயே பழைய சமாச்சாரம்தானே என்று சாய்ந்து உட்கார்ந்தால், மணிவண்ணன் தட்டி பிரேக்கேஸ் எழுப்புகிறார். பிரச்னை அதில்லை.


ரோஸியின் இன்ஸ்பெக்டர் தந்தை காலேஜ் ஸ்டிரைக்கில் தாக்கப்பட்டு, உயிரிழக்க, அவரின் மரணத்துக்கு நாயகனே காரணம் என நம்பி நாயகி காதலை உதறித்தள்ள, சந்தர்ப்பத்திற்குக் காத்திருந்த வில்லன் அவளைக் கவரப் பார்க்க, அதே சந்தர்ப்பத்தில் உறவுப் பெண்ணை மணந்தால்தான் சொத்து என்று நாயகனின் தந்தை ஜெயவர்த்தனை மிரட்டலாய் மிரட்ட — ஓஹோஹோ இது வேறு ரூட்டில் போகிற பஸ் என்று நிமிர்ந்து உட்காருகிறோம்.


சபாபதியின் காமிரா படத்திற்குக் கூடுதல் உபகாரம். கட்டிப் பிடித்த நிலையில் அந்தக் காதலர்கள் மலையுச்சியிலிருந்து அடிவாரம் வரை முட்டி மோதிக் கொண்டு பயணமாவதை நிதானமாய் திகில் இழைய இழையக் காட்டுகிற காட்சியும், நண்பனை ரயிலுக் கடியில் தள்ளிவிட்டு ரயில் கடக்கிற வரை அழுதுகொண்டே நிற்கிற பைத்தியம் (ஜனகராஜ் ஜமாய்க்கிறார்) பற்றியகாட்சியும் மனதைச் சிலுப்பின.

எதிர்காலம்: மணிவண்ணன் (கதை, திரைக்கதை, டைரக்ஷன்) காலை அழுத்தமாக ஊன்றி விட்டாற் போலிருக்கிறது. படம்?

மதில் மேல் பாம்பு. வந்த வழி திரும்பி டப்பாவுக்குள்ளும் சுருளலாம். ஓஹோ என்று வித்தை காட்டி கூட்டமும் சேர்க்கலாம். (நம்ப ரசிகர்களைத்தான் நம்ப முடியறதில்லையே அண்ணாச்சி!)

-ஜெய மன்மதன்







''நம்ம பத்திரிகையிலே சரித்திர நாவல் எழுதிய ஆசிரியருக்கு நாம் சன்மானமாக அனுப்பிய 'செக்'கைத்திருப்பி அனுப்பிட்டாரா, ஏன்?''

''அவருக்குச் சன்மானமா 'பொற்காசுகள்'தான் வேண்டுமாம்!''



''டாக்டர், நான்உயிர் பிழைப்பேனா? பஞ்சாயத்துத் தேர்தல்லே ஓட்டுப் போடுவேனா?''

''நீங்க நிச்சயம் உயிர் பிழைப்பீங்கன்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. ஆனா பஞ்சாயத்துத் தேர்தல்லே ஓட்டுப் போடுவீங்கன்ற நம்பிக்கை எனக்கு இல்லே!''

—அ. குமார்



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani   Editor: K. Rajendran


PHILIPS
டிரான்ஸிஸ்டர் துறையில் நம்பகமான பெயர் கொண்ட பிலிப்ஸ் இப்போது வழங்குகிறது அசல் டிரான்ஸிஸ்டர் பாட்டரி.
பிலிப்ஸ் எக்ஸ்ட்ரா
பிலிப்ஸ் எக்ஸ்ட்ராவின் கூடுதல் அம்சங்கள்: சக்தி. பாதுகாப்பு. கசிவுத் தடுப்பு. நீண்ட ஆயுள்.
பிலிப்ஸ் எக்ஸ்ட்ரா. டிரான்ஸிஸ்டர் பற்றி நன்கறிந்தோர் வழங்குவது.
PHILIPS
TYPE R20 E
PHILIPS
TYPE R6E
PHILIPS
TYPE R6E
பிலிப்ஸ்
பிலிப்ஸ்—ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெயர்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka